
கல்கி

தீபாவளி
சிறப்பிதழ் – I

KALKI
31.10.99
ரூ. 4.50





உள்ளத்தை கொள்ளை
கொள்ளும் கனவுமாளிகை
ஆஷிகா ஸாரீஸ்
BENSONS-99
அனைத்து ஷோரூம்களிலும் கிடைக்கிறது
வாங்கும் முன்பு தலைப்பில் ஆஷிகா
அடையாளம் உள்ளதா என கவனித்து வாங்குவீ

ஆடை பாதி; சினிமா மீதி!





• அனு



• அனீஸ்

சம்ப காலமாக, ஒளிப்பதிவாளர், ஆர்ட் டைரக்டர் ஆகியோருக்கு இணையாக முக்கியத்துவம் பெற்றிருப்பவர் காஸ்டியூம் டிசைனர்.

பாடல் காட்சிகள் மட்டுமின்றி எல்லா சீன்களுமே 'ரிச்'சாகத் தோன்ற வேண்டும் என்கிற கட்டாயத்தினால் கிடைத்துள்ள பிரமோஷன் இது!

"இந்திப் படங்களில், ஃபாஷன் டிசைனிங் படிப்பு முடித்த இளைஞர்களும், அனுபவமும், புகழும் மிக்கவர்களும் காஸ்டியூம் டிசைனர்களாகப் பணிபுரிகிறார்கள். ஆனால் தமிழ்த் திரையுலகைப் பொறுத்தவரை ஃபாஷன் டிசைனிங் படித்து விட்டு வந்தவர்கள் குறைவு. இத்துறையில் இயல்பான ஆர்வம் உள்ளவர்கள் இயங்கி வருகிறார்கள். உதாரணத்துக்கு என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். நான் ஃபாஷன் டிசைனிங் படித்தவன் இல்லை. ஆனால், நல்ல 'டேஸ்ட்'டுடன் உடைகளைத் தேர்ந்தெடுப்பவன் என்ற பெயர் எனக்கு

உண்டு. என் கணவர் வசந்த், 'கேளடி கண்மணி' படம் எடுத்தபோது, அஞ்சுவுக்கான மொத்த உடைகளையும் நானும், வசந்த்தும்தான் தேர்வு செய்து வாங்கிக் கொண்டு வந்தோம். அவருடைய அடுத் தடுத்த படங்களிலும் காஸ்டியூம் தேர்வு செய்வதில் நான் உதவி யிருக்கிறேன். சமீபத்திய படத்தில், ஃபாஷன் இன்ஸ்டிடியூட்டில் படித்த சேத்தன் என்பவருடன் சேர்ந்து காஸ்டியூம் டிசைனராகப் பணிபுரிகிறேன்'' என்கிறார் ரேணுகா வசந்த்.

"ஷூட்டிங் ஆரம்பிப்பதற்கு இரண்டு வாரங்கள் முன்பு, நாங்கள் டைரக்டருடன் எந்தெந்தக் காட்சிக்கு, என்னென்ன மாதிரி உடைகள் என்று விவாதித்து, தீர்மானிக்கிறோம். அண்மையில் நாங்கள் டிசைனிங் செய்த வாலி படத்திற்காக, அதன் டைரக்டர் சூர்யா, ஏராளமான இந்தி சினிமா பத்திரிகைகளில் வெளியான நட்சத்திரங்களின் படங்களைக் காட்டி, 'இந்த மாதிரி எனக்கு வேண்டும்' என்றார். நாங்களும் ஃபாஷன் டிசைனிங் புத்தகங்களி லிருந்து பலவற்றைத் தேர்ந்தெடுத்து தைக்கச் செய்தோம். சட்டை, ஜீன்ஸ், டீ ஷர்ட் போன்றவற்றை எல்லாம் ரெடிமேடாகத்தான் வாங்குகிறோம்'' என்றனர் அனு - அனீஸ் இரட்டையர்.

"தமிழ்ப் படங்களைப் பொறுத்தவரை காஸ்டியூம் டிசைனிங்கை முழுமையாகச் செய்வதாய்க் கூற முடியாது. பெரும்பாலான காஸ் டியூம் ரெடிமேடாக வாங்கப்படுபவை. மீதிதான் காஸ்டியூம் டிசைனிங்!'' என்கிறார் ரேணுகா. பூவெல்லாம் கேட்டுப்பார் படத்தில் சான்யோரீடா பாடலுக்கு, இதாலிய பாணியில், இறகுகள் கொண்ட உடை வேண்டும் என்றார் வசந்த். ஜோதிகாவுக்கு, அது போல ஒரு உடை வடிவமைத்தோம். அதை ஜோதிகாவிடம் சொன்னபோது, 'இதே போல, என்னிடமே ஒரு புது டிரெஸ் இருக் கிறது. மும்பையிலிருந்து அதை வரவழைக்கிறேன்' என்று சொன் னார். நாங்கள் டிசைன் பண்ணிய மாதிரியே அது இருந்தது. அதையே படத்தில் பயன்படுத்திக் கொண்டு விட்டோம்...'' என்கிறார் சேத்தன்.

"முன்பு திரைப்படங்களில், கவர்ச்சி நடனத்துக்கென்று தனி நடிகைகள் இருப்பார்கள். ஆனால் இப்போது, ஹீரோயின்களே, மிகவும் கவர்ச்சியாக உடையணிய ஆரம்பித்து விட்டார்கள் என்ற முறையில், கவர்ச்சியாக உடை டிசைன் பண்ணுவது பற்றி உங்கள் கருத்து என்ன?''

"ஒரு டைரக்டர் என்ன எதிர்பார்ப்பதாய்க் கூறுகிறாரோ, அது போல உடையணிந்து நடிக்க நட்சத்திரம் சம்மதிக்கிறபோது, இடை யில் நான் சொல்ல என்ன இருக்கிறது? ஆனாலும், அளவுக்கு மீறி கவர்ச்சியாக எனக்குத் தோன்றினால் இந்த உடை பற்றி, ஹீரோயி னுடன் பேசி விட்டீர்களா? அவருக்கு ஆட்சேபணை இல்லையே! என்று டைரக்டரிமே கேட்கத் தவறுவதில்லை. வடிவமைத்த உடை களை ஹீரோயினுக்கு அனுப்பியதும், அவருக்கு போன் செய்து, 'அணிந்து பார்த்தீர்களா? சௌகரியமாக இருக்கிறதா? இதை அணிவதில் தர்மசங்கடம் ஏதுமில்லையே' என்றும் நான் கேட் பேன்'' என்கிறார் அனு. இவர் சிம்ரனின் பிரத்யேக காஸ்டியூம் டிசைனர்.

"மறக்க முடியாத டிசைனிங்?''

" 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் சார்ட் வண்டியில் ராணி மாதிரி வரும் சிம்ரனுக்கு வடிவமைத்த உடை. ராணி என்றதும் வெள்ளை உடை இல்லாமல், ஆறு கஜ புடைவை ஒன்றினை வெட்டி, இரண்டு பீஸ் உடை ஒன்று உருவாக்கினோம். நிஜமாலும் இளவரசி போல கியூட்டாக இருந்தார் சிம்ரன்!''

— பாரதி மௌலி

ஹாலிவுட் டிப்ஸ்!

அமெரிக்காவில் இருக்கும் டாக்டர்களில் முப்பத்து ஏழு சதவீதம் பேர் இந்தியர்கள். நாசா விண்வெளி மையத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகளில் முப்பத்து ஆறு சதவீதம் பேர் இந்தியர்கள். உலகின் மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவரான பில்கேட்ஸின் 'மைக்ரோ சாஃப்ட்' நிறுவனத்தில் பணி புரிகிறவர்களில் முப்பத்து ஐந்து சதவீதம் பேர் இந்தியர்கள். ஆனால், ஹாலிவுட்டில் இருக்கிற முன்னணித் தயாரிப்பாளர்களில், ஒரே ஒருவர் மட்டுமே இந்தியர். அவர்தான் அசோக் அமிர்தராஜ்.

இவரது கம்பெனியான, 'அமிர்தராஜ் என்டர்டெயின்மென்ட்' நிறுவனம் உலகப் புகழ்பெற்ற வால்ட் டிஸ்னி மற்றும் எம்.ஜி.எம். ஆகிய இரு நிறுவனங்களுடனும் ஒரே நேரத்தில் பெரிய திரைப்பட விநியோக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இதனைத் தெரிவிக்க அமிர்தராஜ், சென்னை பார்க் ஷெராடன் ஓட்டலில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின்போது, அவருடன் ஹாலிவுட் பற்றிக் கொஞ்ச நேரம் பேசினோம்.

இனி பிரிண்ட் இல்லாமலே படம் காட்டலாம்!

அவர் சொன்ன சில சுவையான தகவல்கள் :

● அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான டெலிவிஷன் சானல்கள் இருந்தாலும் கூட மக்களிடையே சினிமா ஆர்வம் அதிகமாகவே உள்ளது. இன்றைக்கும் வெள்ளி, சனி, ஞாயிறு என்றால் சினிமா தியேட்டர்களில் நல்ல கூட்டம்.

● சமீபத்திய ஹாலிவுட் வரலாற்றில் வசூலில் சாதனை புரிந்த படங்களில் 'லயன் கிங்' கார்ட்டூன் படம் முக்கியமானது. தியேட்டர், வீடியோ, சிடி விற்பனை மட்டுமில்லாமல், லயன் கிங் முத்திரை பொறித்த ஏராளமான பொருள்களின் விற்பனையும் பிய்த்து உதறியது.

● நம் ஊரில் தீபாவளி, பொங்கல் நேரத்தில் நிறைய படங்கள் ரிலீஸ் ஆவது போல, அமெரிக்காவில் அதிக படங்கள் ரிலீஸ் ஆவது கிறிஸ்துமஸ் மற்றும் கோடை காலத்தில்தான். (ஏப்ரல், மே, ஜூன்)

● இன்று ஹாலிவுட் டைரக்டர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுடைய தலையாய பிரச்னை, பெரிய ஹீரோக்களைப் போட்டுப் படம் எடுக்க ஏற்றபடி கதை கிடைப்பதுதான்.

● ஒரு டைரக்டர் அல்லது ஹீரோவின் படம் சூப்பர் ஹிட் ஆகிவிட்டால், உடனே அவரைப் பலரும் அணுகுவதும் அவர்கள் தங்கள் ரேட்டை கணிசமாக உயர்த்துவதும ஹாலிவுட்டிலும் வழக்கம்தான். ஆனால் அவர்கள் ஒரே ஒரு படத்தை மட்டுமே தேர்ந்தெடுத்து ஒப்புக் கொள்வார்கள். அதை முடித்த பின்தான் அடுத்த படம் பற்றியே சிந்திப்பார்கள். இங்கு போல, சகட்டு மேனிக்கு அட்வான்ஸ் வாங்குவது கிடையாது.



• அசோக் அமிர்தராஜ்

● முன்னணி ஹீரோக்களில் ஒருவர் ப்ரூஸ் வில்லிஸ். நிறைய வெற்றிப் படங்களைக் கொடுத்தவர். இந்திய மதிப்புப்படி அவரது இப்போதைய ரேட் சுமார் தொண்ணூறு கோடி ரூபாய்.

● ஒரு தயாரிப்பாளர், நடிகரை ஒப்பந்தம் செய்யும் முறை கூட வித்தியாசமானதுதான். மூன்று அல்லது நான்கு மாதத்துக்கு, இவ்வளவு தொகை என்று அவர் ஒப்பந்தம் செய்வார். அந்தக் குறிப்பிட்ட காலத்தில் படம் எடுத்துவிட வேண்டும். அப்படி எடுக்காது போனாலும் பணம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். மறுபடியும் ஒப்பந்தம் செய்ய வேண்டுமெனில், மீண்டும் பணம் தர வேண்டும்.

● அமெரிக்காவில் காப்பிரைட் சட்டங்கள் கடுமையானவை. எனவே திருட்டு ஆடியோ, வீடியோ பிரச்னைகள் எல்லாம் சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பே ஒழிக்கப்பட்டு விட்டன.

● இப்போது, சினிமாப் படங்கள், ஒரு ஹைடெக் வீடியோவில் வர ஆரம்பித்துள்ளன. சினிமா பிரிண்ட் இல்லாமல் இவைகளையே தியேட்டரில் போட்டு, பெரிய திரையில் சினிமா காட்ட முடியும். இதனால், லேபரட்டரிகள், சினிமா பிரிண்ட் எடுக்கும் தொழில் நசித்து போய் விடுமோ என்று அஞ்சுகிறார்கள்.

தொகுப்பு : **கௌதம்ராம்**



ஒரு முறை 'சாவி' பத்திரிகைக்காக கணவர் ரஜினியைப் பேட்டி கண்டார் மனைவி லதா.

"வசதியான வீடு, மனதிற்கேற்ற மனைவி, சினிமாப் புகழ்- இந்த மூன்றையும் தவிர வேறு எதை விரும்புகிறீர்கள்?''- இது லதாவின் கேள்விகளுள் ஒன்று.

''நான் விரும்புவது என் தனித்தன்மையை."

இந்த ஒற்றை வரி பதில், ரஜினியுடைய வெற்றியை உள்ளடக்கியது என்பதில் சந்தேகம் இல்லை. அது சினிமா உலகமாகட்டும், தனிப்பட்ட வாழ்க்கையாகட்டும், தமக்கென்று ஒரு பாதையை வகுத்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருப்பதால் தான் இந்த இருபத்தைந்து வருடங்களாகத் தொடர்ந்து புகழ் வெளிச்சத்தில் அவரால் இருக்க முடிகிறது.

ஆனால் ரஜினி கடந்து வந்த பாதை மலர்ப்பாதையா என்று கேள்வி எழுப்பினால் 'இல்லை' என்று தாராளமாகப் பதில் சொல்லலாம். கறுப்பு உருவம், தமிழ் சரளமாகப் பேச முடியாத நிலை- படவுலகில் நுழைவதற்கு எந்தவிதமான சிபாரிசோ, பொருளாதார அடிப்படையோ கிடையாது.

இப்படி முற்றிலும் சாதகமற்ற சூழ்நிலையில், தன்னம்பிக்கையை மட்டும் இழக்காமல், போராடி, தமக்கென ஓர் இடத்தை 'சிக்'கென பிடித்துக் கொண்டவர் ரஜினி. அது மட்டுமல்லாமல், பிடித்த இடத்தை தக்க வைத்துக் கொள்ள தமது தனித்தன்மையைப் பயன்படுத்தியவர். ஒரு அசாதாரண வேகத்துடன் டயலாக் டெலிவரி, வித விதமான ஸ்டைல்கள், மெல்லிய நகைச்சுவை கலந்த நடிப்பு, உயிரைப் பணயம் வைத்துச் செய்யும் சண்டைக் காட்சிகள்- இப்படி ரஜினியின் ஹைலைட்டுகளை சொல்லிக் கொண்டே போகலாம். இப்போது தமிழ் கூறும் நல்லுலகில் "சூப்பர் ஸ்டாரு யாருன்னு கேட்டால் சின்னக் குழந்தையும் சொல்லும்!" இந்தச் சிகரத்தை எட்ட அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

பெங்களூர் நகரப் பகுதியில் வாழ்ந்து வந்தார் ரானோஜி ராவ். இவரது முன்னோர்கள் மராட்டிய மன்னன்




ஜினி-25

சிவாஜியின் மெய்க்காப்பாளர் பண்டையில் இருந்தவர்கள். போலீஸ் கான்ஸ்டபிளாக வேலைப் பார்த்து வந்தார் ரானோஜிராவ். ரொம்பவும் கண்டிப்பானவர். அவருக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். மகன்களில் கடைக்குட்டி தான் சிவாஜிராவ் கெய்க்வாட்.

சிவாஜிராவுக்கு ஏழு வயதாக இருக்கும் போதே அம்மா ராம்பாய் இறந்து விட்டார். அம்மாவின் அரவணைப்பு இல்லாத நிலையில்- அப்பாவும் சதா டூட்டி டூட்டி, என்று போய்க் கொண்டிருந்த சூழ்நிலையில் சிவாஜிராவை தட்டிக் குட்டி வளர்க்க வீட்டில் ஆளில்லாமல் போய்விட்டது. பதினைந்து வயதுக்குள் சிகரெட் பிடிப்பதிலிருந்து எல்லாவித கெட்ட பழக்கங்களும், சிவாஜி ராவுக்குப் பழக்கமாகிவிட்டன. நண்பர்கள் வட்டாரம் பெரிதாகிக் கொண்டே போயிற்று. வீட்டிலிருந்து திருட்டுத்தனமாக ரூபாயை எடுத்துக் கொண்டு எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்கள் ஓடும் தியேட்டர்களுக்குப் படையெடுத்துக் கொண்டிருந்தான் சிவாஜி ராவ்.

சிவாஜிராவ் வளர்த்த வம்புகளுக்குப் பஞ்சாயத்து பண்ணவே அப்பாவுக்கும் அண்ணன்களுக்கும் நேரம் சரியாக இருந்தது. சிவாஜியை போலீஸ் அதிகாரி ஆக்கலாம் என்று பார்த்தால் பையன் நம் கனவைச் சிதைத்து விடுவான் போலிருக்கிறதே என்று கலங்கிப் போனார் ரானோஜி ராவ். 'திருந்த மாட்டானா' என்ற எதிர்பார்ப்புடன் ராமகிருஷ்ண மிஷன் பள்ளியில் சேர்த்தார். மிஷன் பள்ளி சூழ்நிலை, சிவாஜி ராவை கொஞ்சம் மென்மைப்படுத்தினாலும், வெளியில் 'நண்பர்கள்' சகவாசம் விட்டபாடில்லை. எப்படியோ எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து விட்டான்.

அப்பாவுக்கோ பையன் கல்லூரியில்



படித்து முன்னேற மாட்டானா என்று கவலை. ஆனால் சிவாஜி ராவுக்கோ படிப்பில் நாட்டமில்லை. பள்ளி நாடகங்கள் பலவற்றில் நடித்திருந்ததால், நடிப்பின் மீது ஒரு பிடிப்பு ஏற்பட்டிருந்தது. "டேய் மெட்ராஸுக்குப் போய் முயற்சி செய், கண்டிப்பா சினிமாவில் சான்ஸ் கிடைக்கும்" என்று நண்பர்கள் உசுப்பி விடவே, ஃபீஸ் கட்ட கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்து விட்டார் சிவாஜி ராவ்.

சென்னையில் ஸ்டூடியோ ஸ்டூடியோவாக நுழைந்து வந்ததுதான் மிச்சம். கையிலிருந்த பணம் கரைந்து போயிற்று. கட்டட வேலை செய்து கொண்டு, பிளாட்பாரத்தில் படுத்துறங்கினார் சிவாஜிராவ். 'மீண்டும் பெங்களூர் சென்றாலென்ன' என்று தோன்றவே டிக்கெட் வாங்காமல் ரயிலில் ஏறி விட்டார்.

திரும்பி வந்த மகனை ஏற்றுக் கொண்டார் ரானோஜிராவ். கல்லூரிப் படிப்பும் கெட்டுப் போக, எந்த வேலை கிடைத்தாலும் அதைச் செய்து கொண்டிருந்த போதுதான் அண்ணன் சத்தியநாராயணாவுக்குத் தெரிந்தவர் மூலம், பஸ் கண்டக்டர் வேலை கிடைத்தது. கண்டக்டர் வேலை மனத்துக்குப் பிடித்திருந்தாலும் நடிகனாக வேண்டும் என்ற ஒரு வெறி, ஒரு மூலையில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டே இருந்தது. கையில் கொஞ்சம் பணம் சேரவே, ஒரு கட்டத்தில் நீண்ட விடுப்பு போட்டு விட்டு சென்னைக்கு வந்து விட்டார் சிவாஜிராவ். தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை நடத்திக் கொண்டிருந்த இரண்டு வருட நடிப்புப் பயற்சி வகுப்பில் சேர்ந்து விட்டார். சிவாஜிராவின் வாழ்க்கையில் புதிய அத்தியாயம் தொடங்கி விட்டது.

• கே. பாலசந்தர்



• எஸ்.பி. முத்துராமன்



'அபூர்வ ராகங்கள்' படத்தில் ஒரு சிறிய வேடம். தாடி வைத்துக் கொண்டு "பைரவியோட வீடு இதுதானா? நான் பைரவியோட புருஷன்!" இதுதான் முதலில் பேசி நடித்த வசனம்.

படம் முடிந்த பிறகு டைரக்டர் பாலசந்தர் கூப்பிட்டு அனுப்பினார். "டைட்டில்ல உனக்கு என்ன பெயர் போடறது?"- கேட்டார் டைரக்டர். அவரே தொடர்ந்தார். "சிவாஜி ராவ் செய்க்லாட் என்று போட்டால் சரியாக வராது. சுருக்கமாக இருக்கணும். மனதில் நிக்கணும். என்னோட மேஜர் சந்திரகாந்த் நாடகத்தில், அவருக்கு இரண்டு மகன்கள். ஒருவன் பெயர் ஸ்ரீகாந்த். அதை ஒரு நடிகருக்கு வைத்து விட்டேன். மற்றொருவன் பெயர் ரஜினிகாந்த். அந்தப் பெயரை உனக்கு வைத்து விடுகிறேன்!" சிவாஜிராவ் ரஜினிகாந்த்தாக மாறியது இப்படித்தான்!

"ரஜினி கிட்ட நான் பார்த்தது, துடிப்புடன் கூடிய நடிப்பு மற்றும் நெருப்பு. ஆமாம்... fire. 'நடிகனாக வேண்டும்' என்ற வெறிதான் அந்த நெருப்பு. தொப்பை போடாத ரொபஸ்டான உடம்பு. பேச்சில் ஒரு வேகம். ஒரு புதுப்பாணியை உருவாக்க, முற்றிலும் தகுதியான நடிகர் கிடைத்து விட்ட பெருமை எனக்கு!" என்று இந்த கட்டுரைக்காகச் சந்தித்த போது நம்மிடம் சொன்னார் கே. பாலசந்தர். "உனக்கு முதலில் சின்ன ரோல்தாம்பா கொடுக்கிறேன். நீ உயர்ந்த ஸ்தானத்துக்கு வருவே' என்று வாழ்த்தினேன். அவரை (னை) நிக்க வைக்க வேண்டும் என்ற வெறி எனக்குள்ளும் இருந்தது. தொடர்ந்து 'மூன்று முடிச்சு' படத்தில் ஒரு 'ஸ்வீட் ராஸ்கல்' என்று சொல்லக் கூடிய வில்லன் வேடம். சிகரெட் ஸ்டைல் இதில்தான் அறிமுகம். பிரமாதமாய் செய்தார்(ன்). 'அநீதியை தட்டிக் கேட்க வேண்டும்' என்ற உணர்வு நியாயமான எல்லா மனிதர்களிடத்திலும் இருக்கும். திரையில் அது போன்ற ரோல்களில் ரஜினி வரும்போது 'நமக்குள்ளிருந்து சென்ற ஒரு சகோதரன் இவன்' என்ற எண்ணம், மக்களுக்கு உண்டானது. அவர்கள் மனத்தில் சுலபமாக இடம் பிடித்து விட்டார்(ன்)" என்றார் பாலசந்தர்.

அபூர்வ ராகங்கள், மூன்று முடிச்சு என்று பாலசந்தரின் இரண்டு படங்களில் நடித்தாலும் வேறெந்தக் கம்பெனியிலிருந்தும் வாய்ப்பு வரவில்லை. ஒரு பிரபல டைரக்டர்

கூப்பிட்டு பேசிவிட்டு 'இப்படி கறுப்பா இருக்காரே. எப்படி கதாநாயகனாகப் போட றது?" என்று கைகழுவி விட்டார்.

இந்த நிலையில் 'அவர்கள்' படத்தில் ஒரு வித்தியாசமான கேரக்டரில் ரஜினியை நடிக்க வைத்தார் கே.பி. எதிர்பார்த்த அங்கீகாரம் கிடைத்து விட்டது. ஹீரோவாக உயர்ந்து விட்டார் ரஜினி. "எம்.ஜி.ஆர். திரைப்பட உலகத்திலிருந்து அரசியல் உலகத் துக்குச் சென்றுவிட்ட காரணத்தால் ஒரு ஆக்ஷன் ஹீரோவுக்கான இடம் தமிழ்த் திரையுலகில் காலியாக இருந்தது. அந்த இடத்தைப் பிடித்து விட்டார்(ன்) ரஜினி. ஆனால் எம்.ஜி.ஆர். பாணியிலிருந்து விலகி முற்றிலும் புதுப் பாதையில் நடந்தவர்(ன்) ரஜினி" என்றார் பாலசந்தர்.



ரஜினியின் திரையுலக வாழ்க்கையில் மறக்க முடியாத மற்றொரு டைரக்டர் எஸ்.பி. முத்துராமன். புவனா ஒரு கேள்விக் குறி, எங்கேயோ கேட்ட குரல், ஆறி லிருந்து அறுபது வரை'போன்ற படங் களில் குணசித்திர வேடம் கொடுத்து, ரஜினியிடமிருந்த திறமையை வெளிக் கொண்டு வந்தவர் இவர். முரட்டுக் காளை, போக்கிரி ராஜா, பாயும் புலி, குரு சிஷ்யன் போன்ற படங்களில் fire brand ஹீரோவாக ரஜினியை டைரக்ட் செய்து "சூப்பர் ஸ்டார்" ஆவதற்கான பாதை போட்டதில் இவருக்கும் கணிசமான பங்கு இருக்கிறது. இவருடன் இணைந்து ரஜினியின் இமேஜை உயர்த்தியவர் பஞ்சு அருணாசலம்.

ரஜினியின் 25 படங்களை டைரக்ட் செய்த எஸ். பி.எம், "ரஜினியைப் பற்றி நல்ல விஷயங்களைச் சொல்லிக்கிட்டே இருக்க லாம். துவக்கத்தில் எப்படிப் பழகினாரோ அதேபோல்தான் இப்போதும். மனித நேயம் மிக்கவர். எங்களைப் போன்ற சினிமாக் காரர்களுக்கு பென்ஷன், கிராஜுட்டி போன்றவை கிடையாது. இந்த நிலையில் பதினைந்து பேர் கொண்ட என் யூனிட் காரர்களுக்கு உதவுவதற்காகவே 'பாண்டி யன்' படம் செய்து கொடுத்தார். அந்தப் பண்பை மறக்க முடியுமா?" என்றார்.

ரஜினியின் வாழ்க்கையில் ஒரு கறுப்பு அத்தியாயம் உண்டென்றால் அது 1979ம் ஆண்டுதான். இரவு-பகல் என்று எப்போதும் ஓய்வில்லாத படப்பிடிப்பு. பயங்கர டென் ஷன். கூடவே சேர்ந்து கொண்ட ஜர்தா பீடா பழக்கம் ரஜினியை கொஞ்சம் abnormal ஆக செயல்பட வைத்தது. 'பத்திரிகையாளரை அடித்து விட்டார்', 'விமான நிலையத்தில் கண்ணாடியை உடைத்து விட்டார்' என்று அவர் மீது நிறைய புகார்கள். ஒரு கட்டத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டு விஜயா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார் ரஜினி. "அவ் வளவுதான் ஆள் தொலைந்தான். இனிமேல் ஃபீல்டில் நிக்க முடியாது" என்றார்கள். ஆனால் மருத்துவமனையிலிருந்து மீண்டு வந்து படவுலகில் சக்கைபோடு போட ஆரம்பித்து விட்டார் ரஜினி. அப்புறம் இது வரையில் பின்னடைவு என்கிற பேச்சுக்கே இடமில்லை. கே.பி. சொன்னதுபோல் அவ ருக்கு கடவுளோட ஆசீர்வாதம் நிறையவே இருக்கு!

ரஜினியின் குணாதிசயங்கள் என்ன? மிகவும் விரும்புவது தனிமை. ஒரு படத்தை முடித்தவுடன் வெளிநாடுகளுக்கும் இமய மலைச் சாரலுக்கும் ஓடுவது அதற்காகத் தான். தம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை யில் தலையிடும் எவரைக் கண்டாலும் ரஜினிக்கு எரிச்சல் வரும். ஒரு முறை நிருபர் ஒருவர் பேட்டி கண்ட போது, பலவிதமான விஷயங்களைக் கேட்டபின் "உங்கள் பொழுது போக்கு என்ன?" என்றார்.



• ஏழை ரசிகர்களுக்கு இலவசத் திருமணம்

ரஜினிக்கு கோபம் வந்து விட்டது. ''தண்ணி அடிப்பேன்... பொண்ணுங்களோட ஜாலியாக இருப்பேன்... பொழுது போக்கெல்லாம் தனிப்பட்ட விஷயம்!'', என்று கொதித்து விட்டார். இப்படி காட்டாறாக இருந்த ரஜினியின் வாழ்க்கையை ஒழுங்கு படுத்தியவர் லதா ரஜினிகாந்த்.

எப்போதும் மனத்தில் பட்டதைப் பேசும் சுபாவம். அதனாலேயே விழாக்களிலும், பொது மேடைகளிலும் பேசத் தயங்குகிறார் ரஜினி.

அன்றும் இன்றும் அவருக்கு பக்க பலமாக இருப்பவர்கள் நண்பர்கள்தான். அவர்களை அவர் மறப்பதோ அலட்சியப் படுத்துவதோ கிடையாது.

''ரஜினியோடு எனக்கிருக்கும் தோழமையை மனத்தில் பொத்தி வைத்து அனுபவிக்க விரும்புகிறேன். அதைப் பற்றி பத்திரிகைகளுக்குச் சொல்வது என்பது கூட சரியாக வராது!'' என்கிறார் டைரக்டர் நட்ராஜ். திரைப்பட கல்லூரி நட்பு இன்னும் தொடர்கிறது. இரண்டு படங்களை டைரக்ட் செய்யும் வாய்ப்பை நண்பனுக்குக் கொடுத்திருக்கிறார் ரஜினி.

பழைய பெங்களூர் நண்பர்களையும் மறந்து விடவில்லை. அங்கு போனால் எல்லோருக்கும் தகவல் கொடுத்து, வரச் சொல்லி விடுவார்.


தமது ரசிகர்கள் வெறித்தனமான சினிமா ரசிகர்களாக மட்டும் இருக்கக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருக்கிறார் ரஜினி. ''கல்யாணமாகாதவன் என்றால் தாய் தந்தைக்கு நல்ல மகனாகவும், கல்யாணம் ஆனவன் என்றால் மனைவிக்கு நல்ல கணவனாகவும் தமது ரசிகர்கள் இருக்க வேண்டும் என்பதே ரஜினியின் நோக்கம்!'' என்கிறார் ரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணா. ரசிகர்களின் நலனுக்காகவே ஏழை ரசிகர்களுக்கு ஆண்டு தோறும் சொந்தச் செலவில் தமது மண்டபத்தில் திருமணம் செய்து வைக்கிறார் ரஜினி.

ரஜினியின் திரையுலக வாழ்க்கையில் சர்ச்சைக்கிடமான ஒரு திருப்பம் என்று 'பாட்சா' படத்தைச் சொல்லலாம். 'ரஜினிக்கும் அரசியலில் நுழையும் ஆசை இருக்கும் போலிருக்கிறதே' என்று மக்களை நினைக்க வைத்த படம் அது. ஜெயலலிதா தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த அந்தக் கால



''டாக்டருக்கு பணத்தேவை அதிகமாயிருக்கலாம். அதுக்காக ஜலதோஷத்துக்குப் போய் ஆபரேஷன் செய்யணும்னு சொல்றது கொஞ்சங்கூட நல்லாயில்லே.''

— தாரமங்கலம் அ. முத்துசாமி


விழாக்காலம்
கோ-ஆப்டெக்ஸ் காலம்
20% முதல்
60% வரை
தள்ளுபடி
கடன் வசதி உண்டு
பட்டுப்புடவை சேமிப்பு திட்டத்தின் மூலம் பயன் பெறுங்கள்
தீபாவளி வரை, அனைத்து நாட்களிலும் ஷோரூம்கள் திறந்திருக்கும்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

காந்திக்கு என்ன ஆச்சு?

ரிச்சர்டு அட்டன்பரோ எடுத்த காந்தி படத்தை, இந்தியாவில் விநியோக உரிமை பெற்றுள்ள தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம், தமிழில் டப்பிங் செய்யத் திட்டமிட்டு, டாகுமெண்டரி மற்றும் டி.வி. தொடர் தயாரிப்பாளரான அருண் வீரப்பனிடம் ஒப்படைத்தது.



அவரும் டப்பிங் பணியை முடித்து விட்டார். காந்திக்குக் குரல் கொடுத்திருப்பவர் டைரக்டர் வசந்த்! போன காந்தி ஜெயந்திக்கே படம் ரிலீசாகும் என்று சொன்னார்கள். ஒருவருடம் ஓடிவிட்டது. பேச்சு மூச்சையே காணோம். காந்திக்கே இந்தக் கதியா?

– பாரதி

கட்டத்தில் நடந்த சில சமூக நிகழ்வுகள் ரஜினியை மிகவும் பாதித்தன. அதன் விளைவாக பாட்சா வெற்றி விழாவில் 'தமிழகத்தில் வெடிகுண்டு கலாசாரம் உருவாகி விட்டது' என்று பேசி பரபரப்பின் மையத்துக்கு வந்தார் ரஜினி. 1996 தேர்தலில் ரஜினி பின்பலமாக இருக்க ஜெ.வை தோற்கடித்தது தி.மு.க.-த.மா.கா. கூட்டணி.

'பாட்சா'வுக்குப் பிறகு 'முத்து', 'அருணாசலம்' ஆகிய படங்கள் வெளிவந்த போது, அந்தப் படங்களில் பேசிய சில வசனங்கள், பாட்டுக்கள் ஆகியவற்றில் பொதிந்திருந்த அரசியல் நெடி ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது மட்டுமல்லாமல், "தலைவர் வந்து விடுவார் அரசியலுக்கு" என்ற ஆர்வத்தைத் தூண்டின. இதன் தொடர்ச்சியான உச்சகட்டம் தான் படையப்பா.

"ரஜினி அரசியலுக்கு வந்து முதல்வரானால் மிக நன்றாகவே ஆட்சி நடத்துவார் என்று சோ சொல்லி இருக்கிறார். அதை நான் வழி மொழிகிறேன்" என்கிறார் பாலசந்தர்.

"ரஜினியின் மனோபாவம் நமது அரசியலுக்குக் கொஞ்சம் கூடச் சரிப்பட்டு வராது. அரசியலுக்கு வந்தால் பணம், புகழ், நிம்மதி ஆகிய மூன்றையும் அவர் இழந்து விடுவார்!"என்று சொல்கிறார் ரஜினியை ஆய்வு நோக்கில் பார்த்து பல பத்திரிகைகளில் அவரைப் பற்றிய தொடர்களை எழுதிய பத்திரிகையாளர் விஜயன்.

"ஒண்ணே ஒண்ணு மட்டும் என்னால் சொல்ல முடியும். அரசியலில் நுழைய ஒரு அருமையான சூழல் வாய்த்திருந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பதன் மூலம் தாம் ஒரு great man என்பதை அவர்(ன்) உணர்த்தி விட்டார்(ன்)" என்றார் கே. பாலசந்தர்.

பல விஷயங்களில் மற்றவர்களின் அபிப்ராயங்களைக் கேட்டாலும் தாம் மனத்தில் என்ன வைத்திருக்கிறார் என்பதைச் சொல்ல மாட்டார் ரஜினி. சமீபத்தில் நடந்த தேர்தலில் தமது பெயரையோ, படத்தையோ யாரும் உபயோகிக்கக் கூடாதென்று சொல்லி விட்ட அதே நேரத்தில் "தேர்தலுக்குக் காரணமானவர்களைத் தண்டியுங்கள்!" என்று அவர் சொன்னதை சிலாகிக்கிறார்கள் அவரது ரசிகர்கள்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் என்று இந்த 25 வருட காலத்தில் 150 படங்கள் நடித்து விட்டார் ரஜினி. இந்த நிலையில்தான் கணவருக்கு விழா எடுக்கிறார் லதா. வேறு யாராவது 'விழா' என்று பேச்சைத் துவக்கியிருந்தால் எடுத்தவுடன் மறுத்திருப்பார் ரஜினி. ஆனால் நடத்தப் போகிறவர் மனைவியாயிற்றே!

டிசம்பரில் ரஜினி திரைப்பட விழா, கண்காட்சி, ம்யூஸிகல் நைட் என்று ஒரு கலக்கல் காத்திருக்கிறது. ரஜினி ரசிகர்களை ஒருங்கிணைக்கும் இந்த நிகழ்ச்சிகள், அவர்களை அரசியலுக்கு ஆயத்தப்படுத்தும் துவக்க கட்டமோ என்று சந்தேகப்படுபவர்களும் இருக்கிறார்கள்!

— ப்ரியன்





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர், (வழி) தாம்பரம், சென்னை-63.
Tel & FAX: 2376129, Cell Ph: 98410-53309
E.mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பேரன்புடையீர் ! வணக்கம், வரும் தீபாவளி திருநாளில் தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் அன்பினாலும், ஆதரவினாலும், குருகுலத்தில் 137 மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் படித்து வருகின்றார்கள். குருகுல மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உயர்நிலைப்பள்ளியும் மற்றும் 13/09/99 விநாயக சதுர்த்தி அன்று கம்ப்யூட்டர் பயிற்சி மையமும் துவக்கப்பட்டுள்ளது.

தீபாவளி திருநாளில்

* குருகுல மாணவர்களோடு உங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளுங்கள்.
* குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்திர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (137 பேருக்கு)	ரூ	750/-
• மதிய உணவு (இனிப்புடன்)	ரூ	1,500/-
• இரவு சிற்றுண்டி	ரூ	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ	500/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ	6,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ	1,50,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque/ DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



— பாரதிராஜா சிறப்பு பேட்டி —

தாஜ்மஹால்

இரவு கண் விழித்து எடிட்டிங் முடித்துவிட்டு, ஜெமினி வளாகத்தில் உள்ள தமது அலுவலகத்துக்கு பாரதிராஜா வந்தபோது அதிகாலை மணி நாலு. ஆனாலும் நாம் பேட்டிக்குக் காலையில் சென்றபோது, குளித்து, சாமி கும்பிட்டு விட்டு, புத்துணர்ச்சியுடன் தயார். கேள்விகளுக்கு மடமடவென்று பதில் சொன்னார்...

கல்கி : உங்களுடைய முந்தைய படத்துக்கும், இந்த தாஜ்மஹால் படத்துக்கும் இடையில், இதுவரை இல்லாத மிக நீண்ட இடைவெளி ஏற்பட்டு விட்டதே, என்ன காரணம்?

பாரதிராஜா : நான் டைரக்டர் ஆனதிலிருந்து வருடத்துக்கு ஒரு படம் அல்லது இரண்டு வருடங்களுக்கு மூணு படம் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் கடந்த இரண்டு வருடங்களாகப் பார்த்தீர்கள் என்றால், சினிமாத் துறையிலேயே சில பிரச்னைகள். சுமார் ஒன்றரை வருடங்கள் நான் என் வேலை எதையும் பார்க்காமல், யூனியன் சம்பந்தப்பட்ட வேலைகளிலேயே ஈடுபடும்படி ஆகிவிட்டது. அது ஒரு காரணம். அடுத்தபடியாக, என் படத்தில் என் மகனையே அறிமுகப்படுத்த முடிவு எடுத்ததும் ஒரு காரணம். அந்த அறிமுகம், திட்டமிட்டு, சரியானபடி அமைய வேண்டுமல்லவா? பதினாறு வயதினிலே போல, இந்தப் படம் எனக்கு ஓர் இரண்டாவது பிறவி என்று கருதுகிறேன். எனவே, டிஸ்கஷன், கதைத் தேர்வு என்று தாமதமாகி விட்டது. தவிர, இந்தப் படத்துக்காக, வறட்சியான சில பகுதிகளில் ஷூட்டிங் நடத்த வேண்டியிருந்தது. எனவே லொக்கேஷன் தேட வேண்டியிருந்தது. இதெல்லாம் சேர்ந்து, போன படத்துக்கும், இந்தப் படத்துக்கும் இடையே இரண்டரை மூணு வருட இடைவெளி விழுந்து விட்டது.

கல்கி : வழக்கமாக, நீங்கள் கதாபாத்திரங்களுக்கேற்பத்தான் புதுமுகங்களைத் தேடுவீர்கள். இந்தத் தடவை, அதற்கு மாறாக, உங்கள் மகன் மனோஜ்தான் ஹீரோ என்று தீர்மானித்துக் கொண்டு, கதையை உருவாக்கியிருக்கிறீர்களே?

பாரதிராஜா : ஆமாம்! வழக்கமாக கேரக்டர்களுக்காக நான் ஆள் தேடுவேன். ஆனால், இந்தப் படத்தில், இவனுக்குள் (மகன் மனோஜ்) நான் ஒரு கேரக்டரைப் புகுத்தியிருக்கிறேன். இவனுடைய ஒரிஜினல் கேரக்டருக்கேற்பவும் என்னால் கதையை உருவாக்கியிருக்க முடியும். ஆனால் நான் அதுபோலச் செய்யவில்லை. அப்படிச் செய்து அவன் வேலையை எளிதாக்கி விட்டால் அவன் பிற படங்கள் பண்ணுகிறபோது, அந்த கேரக்டர்கள் பண்ணுவதற்கு சிரமப்படுவான். எனவே இவன் மீது ஒரு கேரக்டரைத் திணித்து, அதற்கேற்ப மோல்டு பண்ணி, வேறு எந்தக் கேரக்டரையும் செய்ய இவனைத் தயார் பண்ணியிருக்கிறேன்.

கல்கி : முதலில் மணிரத்னத்திடம் அஸிஸ்டென்டாக அனுப்பினீர்கள், அப்புறம் மும்பைக்கு அனுப்



• ஷூட்டிங்கின் போது...

• தாஜ்மஹாலில்
னோஜ், ரியாசென்



பினீர்கள். கடைசியில் மனோஜ் நடிக்க வந்து விட்டார். இப்போது இந்த அளவுக்குப் பிர யத்தனம் பண்ணும் நீங்கள், இந்த முயற் சியை சற்று முன்பே துவக்க ஏன் தவறி விட்டீர்கள்?

பாரதிராஜா : அவன் படிப்பை முடித்த போது, 'என்னடா பண்ணப் போகிறாய்?' என்று கேட்டேன். 'டைரக்ஷன்தான் என் லட்சியம். மணிரத்னத்திடம் அசிஸ்டென்ட் டாகச் சேர்த்து விடு' என்றான். சேர்த்து விட்டேன். ஒன்றரை வருடம் போல இருந் தான். சினிமா நுணுக்கம் கற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் மும்பை ஸ்கூலுக்குப் போன வன், அங்கே இருந்த சூழ்நிலை பிடிக்காமல் திரும்பி வந்து விட்டான். அவனுக்குத் திடீ ரென்று மியூசிக்கில் ஆர்வம் வந்தது. நிறைய மியூசிகல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் வாங்கிக் கொடுத்தேன். அதே சமயம், 'நீ மியூசிக் கற் றுக் கொண்டு, என்ன பெரிசாய் சாதிக்கப் போகிறாய்? ஆனாலும் உன் இசை பற்றின ஞானம், உன் டைரக்ஷனுக்கு உபயோகமாக இருக்கும்' என்றேன். ஒரு கட்டத்தில், வேறு ஒரு புது இடத்துக்குப் போனால் அவனுக்கு உபயோகமாக இருக்கும் என்று, அமெரிக் காவுக்குச் சில மாதங்கள் அனுப்பி வைத் தேன். ஃப்ளோரிடாவில் என் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருந்த சமயம், 'தானா கவே, ஒரு சினிமா தொழில்நுட்ப இன்ஸ்டி டியூட்டில் சேர்ந்து படித்தான். ஆனால், இவ னுக்குள்ளே ஒரு பொட்டன்ஷியல் உள்ள ஒரு நடிகன் இருக்கிறான் என்று எனக்கு அடிக்கடி தோன்றும். எனவே, "டைரக்ஷன் எல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்; நீ நடிக்க வா" என்று சொன்னேன். அவ னுக்கு இஷ்டமில்லை. அவனை மூளைச் சலவை செய்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். கடைசியில் சம்மதித்தான். இனி அவன் நடிகன்தான். அதற்கேற்ப அவனை மோல்டு பண்ணியிருக்கிறேன்.

கல்கி : பாரதிராஜாவின் படங்களில், ஹீரோ பாரதிராஜாதான். மற்ற எல்லாமே இரண்டாம்பட்சம்தான். ஆனால், இந்தப் படத்தில் மணிரத்னம், ராஜீவ்மேனன், ஏ.ஆர். ரஹ்மான் என்று பிரபலங்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? கமர்ஷியல் வெற்றி பற்றின பயமா?

பாரதிராஜா : பாரதிராஜாவே பிரபலம் தான். எனவே என் கூட மணிரத்னத் தையோ, பாலசந்தரையோ, ராஜீவ்மேன னையோ, பிரபலத்துக்காகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. எனக்கு அடுத்த தலைமுறையினரின் திற மையை நான் கவனித்து, ரசித்துக் கொள் வதில் எந்தத் தவறும் இல்லை. லேட்டஸ்ட் டாக வரும் எழுத்தாளரிடம், புதுப்புது சிந் தனைகள் இருக்கும். இது, பழைய ஆற்றில் வந்து சேருகிற புது ஊற்றுத் தண்ணீர் போல. எனக்கு முந்தைய தலைமுறையில், நான் பிரமித்து நோக்கியவர்கள் ஸ்ரீதரும், பால சந்தரும். எனக்கு அடுத்த தலைமுறையில் என்னை பிரமிக்க வைத்தவர்களில் மணி ரத்னம் முக்கியமானவர். அவருடைய தொழில்நுட்பத்தைக் கண்டு நான் வியக் கிறேன். தாம் நினைப்பதை அவர் அப் படியே அற்புதமாகத் திரையில் கொண்டு வரும் முறையைக் கண்டு வியக்கிறேன். ஒருகாலத்தில் என்னிடம் கதை சொல் கிறேன் என்று வந்தவர் மணிரத்னம். இன்று நான், அவரோடு ஃபீல்டு ஒர்க் பண்ணலாமா என்று நினைக்கிறேன். அதற்கு நான் அவரி டம் அசிஸ்டென்ட் ஆக வேலை செய்வது சாத்தியமில்லை. எனவே, அவருடன் இணைந்து பணியாற்றுவதைப் பெருமையாக நினைக்கிறேன். இன்று அவருக்கு அடுத்து, இன்னும் ஒரு தலைமுறை வந்து விட்டது. புதுப் பையன்கள் எல்லாம் பிரமாதமாகப் படம் பண்ணுகிறார்கள். ஜன்னல்களை சாத்திக் கொண்டு, நாலு சுவருக்குள்ளே உட்கார்ந்திருந்தால், அப்படியே அமுங்கிப் போய் விட வேண்டியதுதான்! ஜன்னலைத் திறந்து வெளியே பார்க்கணும்; ரசிக்கணும்; கற்றுக் கொள்ளணும். நாடுகளைக் கடந்து, இலக்கியப் பரிவர்த்தனை நடப்பது போல நான் செய்வது, ஒருவித கலை பரிவர்த் தனை. இதிலே ஈகோ செத்துப் போகிறது.


●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

"எதெதுக்கு வாழ்த்து அடிச்சு ஒட்டறதுன்னு விவஸ்தை இல்லாம போச்சு!"

"ஏன் என்னாச்சு?"

"தலைவர் திருமணத்துக்கு மறுநாள் 'முதலிரவு கண்ட தலைவரை வாழ்த்து கிறோம்'னு தொண்டர் ஒருத்தர் போஸ்டர் அடிச்சு ஒட்டியிருக்கார்!"

– சீர்காழி வி. ரேவதி



மணிரத்னத்திடமிருந்து, ராஜீவ் மேனனிடமிருந்து, சேரனிடமிருந்து, இன்னொரு புதிய குப்புசாமியிடமிருந்து நான் கற்றுக் கொள்கிறேன். அதுபோல அவர்களும் ஏதாவது கற்றுக் கொண்டிருக்கலாம்.

கல்கி : உங்களுக்குக் கைவந்தது கிராமத்துக் காதல். இந்த தாஜ்மஹால் என்பது எந்த மாதிரியான காதல் கதை?

பாரதிராஜா : ஆக்ரா தாஜ்மஹால் இறந்த மனைவிக்காக, காதலை வெளிப்படுத்தக் கட்டப்பட்டது. இந்த செலுலாயிட் தாஜ்மஹால் உயிரோடு வாழுகின்ற காதலர்களுக்காகக் கட்டப்பட்டது. அது இறந்தவர்களுக்கான நினைவுச் சின்னம். இது வாழும் கிராமத்துக் காதலின் ஆழமான அடையாளம்.

கல்கி : அப்படியெனில் ஆக்ரா தாஜ்மஹாலுக்கு, தலைப்பைத் தவிர இந்தப் படத்தில் வேறு எந்தப் பங்கும் இல்லையா?

பாரதிராஜா : எல்லாரும் ஆக்ரா போய், தாஜ்மஹாலை விதம்விதமாகத் திரையிலே காட்டினார்களில்லையா? அதனால்தான் நான் தாஜ்மஹாலையே காட்டவில்லை. அதுதான் வித்தியாசம். அதே நேரம், இது முழுக்க கிராமத்து மண்ணின் மணம் வீசும் படமும் இல்லை. கொஞ்சம் fantasyயும் இருக்கும். இதுவரை பார்த்திராத பின்புலம், இதுவரை பார்த்திராத கிராமம், இதுவரை பார்த்திராத கதாபாத்திரங்களை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். இருபது இருபத்தி இரண்டு வருடங்களாக நான் காட்டியுள்ள கிராமங்களிலிருந்து இது மாறுபட்ட ஒன்று. இதுவரை நீங்கள் பார்த்திராத ஒன்று.

கல்கி : உங்கள் மகனை, வேறு இயக்குனர்கள் மூலம் திரையில் அறிமுகம் செய்யாமல், நீங்களே அறிமுகப்படுத்தியதற்குப் பிரத்யேகக் காரணம் ஏதும் உண்டா?

பாரதிராஜா : வேறு யாராவது அறிமுகப்படுத்தினால் நல்லது என்று கூட நான் யோசித்தது உண்டு. ஆனால், நான் அறிமுகப்படுத்துவதுதான் சரி என்று பின்னர் முடிவு செய்தேன். ஒரு பெண்ணுக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்துத் தயார் பண்ணி, புகுந்த வீட்டுக்கு அனுப்பி வைப்பது ஒரு தாயின் கடமை. ஒரு மகனுக்கு, தன் தொழிலின் எல்லா அம்சங்களையும் சொல்லிக் கொடுத்து, அவனை முழுமையான மனிதனாக்கி, இந்த சமூகத்துக்கு அளிப்பது ஒரு தந்தையின் கடமை. அதை நான் சரியாகத்தான் செய்திருப்பதாக நினைக்கிறேன். நாளைக்கு வேறு ஒருவர் டைரக்ஷனில் நடிக்கிறபோது, 'என்ன பாரதிராஜா பையன் இப்படி இருக்கிறானே!' என்று யாரும் சொல்லிவிடக்கூடாது. அதற்கு இதுதான் சரியான முறை என்பது என் எண்ணம்.

கல்கி : வேறு பல புதுமுகங்களை இயக்கியதற்கும் மனோஜை இயக்கியதற்கும் என்ன வித்தியாசம் உணர்ந்தீர்கள்?

பாரதிராஜா : ஒரு டைரக்டராக மற்றவர்களை இயக்கிக் கொண்டிருந்தபோது, நடிப்பவர்களின் கஷ்டத்தை நான் உணர்ந்ததில்லை. கடினமான, ஆபத்தான காட்சிகளில் கூட, ''இதைச் செய்துதான் ஆக வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறேன். ஆனால், மனோஜ் விஷயத்தில், டைரக்டரின் கட்டளைப்படி அவன் செய்கிறபோது, அவன் கஷ்டப்பட்டாலோ, அவனுக்கு ஏதாவது ஒன்று என்றாலோ அப்பா பாரதிராஜா பதறிப் போனார். ஷூட்டிங்கில் குளத்தில் மூழ்கினபோதும், வேறு ஒரு சமயம் குதிரையிலிருந்து விழுந்து



நமது சென்சார் போர்டு சில சமயம் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறது என்பதற்கு ஓர் உதாரணம்...

1963ம் ஆண்டு, ஜேம்ஸ்பாண்டு படமான '∴ப்ரம் ருஷ்யா வித் லவ்' என்ற படம் இந்தியாவுக்கு வந்தது. அந்தத் தலைப்பை அனுமதிக்க சென்சார் போர்டு மறுத்து விட்டது. ஆகவே, படத்துக்கு ''007 வித் லவ்' என்று பெயரிட வேண்டியதாகிவிட்டது.

இன்னும் ஓர் உதாரணம். உலகப்புகழ்பெற்ற காமெடியன் உடி ஆலன் நடித்த படம் ஒன்றில், ''ஒரு விஷயம் தெரியுமா? ரிச்சர்டு நிக்ஸனை, (ஜனாதிபதியாவதற்கு முன்பு) வெள்ளை மாளிகையில் விருந்துக்கு அழைத்தார்கள். அவர் சாப்பிட்டு விட்டுப் போனபின் வெள்ளி ஸ்பூன்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தார்கள்'' என்று ஒரு வசனம் வரும். படத்தில் இந்த வசனத்தைக் கேட்டு உலகமே சிரித்தது. இந்தியா தவிர. காரணம் இங்கே அந்த வசனத்தை வெட்டச் சொல்லிவிட்டது சென்சார்போர்டு. அமெரிக்காவிலேயே அனுமதிக்கப்பட்ட, மக்களால் ரசிக்கப்பட்ட இந்த வசனத்தை வெட்டியதற்கு இந்திய சென்சார்போர்டு சொன்ன விளக்கம்: ''அமெரிக்கா–இந்திய உறவை அது பாதிக்கும்!''.

– சி.எம்.

'தாதா' காதல்!



படத்திலிருக்கும் அழகி பெயர் மீரா. பாகிஸ்தானிய சினிமா நடிகை. இவரது அழகில் மயங்கி விட்டார் இந்திய அரசாங்கத்தால் தேடப்பட்டு வரும் பெரும்புள்ளி ஒருவர். விளைவு? நடிகையின் சகோதரியின் திருமணத்துக்கு அன்பளிப்பாக பத்து லட்சம், நியூயார்க்கில் நடிகைக்கு ஒரு அபார்ட்மெண்ட், அடுத்து இந்தி சினிமா சான்ஸ் என்று ஒரே கவனிப்புதான். இப்படி விழுந்து விழுந்து நடிகையை கவனிப்பவர் யார் தெரியுமா? தாவூத் இப்ராஹீம்! இதுதான் மும்பை ஹாட் நியூஸ்.

– சி.எம்.

எழுந்திருக்காமல் கிடந்தபோது பதறிப் போனேன்.

இது போல் எல்லாம் ரிஸ்க் எடுத்து, என் மகன் நடிகனாக இருக்க வேண்டுமா என்று கூட சில சமயங்களில் நினைத்தேன். ஆனால், உடனேயே 'எந்தத் தொழிலில்தான் ஆபத்து இல்லை? இதுவரை யார் வீட்டுப் பிள்ளைகளை எல்லாமோ வேலை வாங்கிய போது, இந்த உணர்வு எனக்கு வரவில்லையே' என்றும் எனக்குத் தோன்றியது. அப்புறம், தந்தை என்ற ஸ்தானத்தை நான் கேமரா முன் நிற்கிறபோது கழற்றி வைத்து விட்டேன். இறுதியில், மனோஜின் அப்பா பாரதிராஜாவை, டைரக்டர் சமாதானப் படுத்திவிட்டு, டைரக்டர் பாரதிராஜா தாம் விரும்பியபடி பந்த பாசக் குறுக்கீடுகள் இல்லாமல், மனோஜிடம் வேலை வாங்கியதாகத்தான் கூற வேண்டும். ஆனாலும் இது ஒரு புது அனுபவம்தான்.

கல்கி : வீட்டுக்குள்ளேயே, ஹீரோ பிடித்துவிட்ட நீங்கள் ஹீரோயின் தேடி வடக்கே போனது ஏன்?

பாரதிராஜா : வீட்டுக்குள்ளேயே ஹீரோயின் தேட முடியுமா? (சிரிப்பு! சில விநாடிகளுக்குப் பின்) இங்கேயே எவ்வளவோ தேடினேன். அது ஒரு வித்தியாசமான பெண் கேரக்டர். எனவே ஒருவரும் இங்கே கிடைக்கவில்லை. கடைசியில் ஆல்பத்தில் ரியாசென் படத்தைப் பார்த்தேன். கேரக்டருக்கு ஏற்ற முகமாகத் தோன்றியது. முடிவு செய்தேன்.

கல்கி : மனோஜின் பெயரை மணிபாரதி என்று மாற்றி, மறுபடி மனோஜ் என்று ஆக்கி, ஏன் இந்தக் குழப்பம்?

பாரதிராஜா : மணிரத்னம், பாரதிராஜா இரண்டையும் இணைத்து, மணிபாரதி என்று வைத்துக் கொள்ள விரும்புவதாக அவன் சொன்னபோது, சரி என்றேன். நான் எத்தனையோ பேருக்குப் பெயர் சூட்டியிருக்கிறேன். அந்தப் பெயர்கள் நிலைத்து நின்றுள்ளன. ஆனால், மனோஜ் என்று அவனைக் கூப்பிட்டு எல்லோருக்கும் பழகி விட்டது. மணிபாரதி என்று எனக்கே கூப்பிட வரவில்லை. எனவே பழையபடி, மனோஜ் ஆக்கிவிட்டேன். மனோஜ் என்பதும் நான் வைத்த பெயர்தானே?

கல்கி : ஆக, இந்தப் படம் உங்களுக்கு முற்றிலும் புதிய அனுபவத்தைத் தந்தது என்று சொல்லலாமா?

பாரதிராஜா : மகனை இயக்கியது ஒருபுறம் என்றால், மணிரத்னம், ரஹ்மான், வைரமுத்து, கண்ணன் என்று அனைவருடனும் பணியாற்றியது, உடன் பிறந்தவர்களுடன் இருக்கிற குடும்பச் சூழ்நிலையை நினைவூட்டியது. இவர்கள், எனக்குத் தொழில்ரீதியாகத் தெரியவில்லை. ஆத்மார்த்தமான நண்பர்களாகத்தான் தெரிந்தார்கள். எனவேதான் படத்தில் கூட, இவர்கள் அனைவரையும் தொழில்ரீதியிலான அடைமொழிகள் ஏதுமின்றி 'என் உயிரினும் இனிய நண்பர்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

கல்கி : தாஜ்மஹால் பட ரிலீஸ், அப்பா, டைரக்டர் என்று வழக்கத்தை விட இரு மடங்கு டென்ஷனைக் கொடுத்துள்ளதா?

பாரதிராஜா : இல்லை. அப்பா என்கிற முறையில் டென்ஷன் ஏதுமில்லை. டைரக்டர் என்கிற முறையில் டென்ஷன் என்பது வழக்கமான ஒன்றுதான். புதிதாக ஏதுமில்லை.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**
வண்ணப்படம் : **யோகா**





1999 அக்டோபர் 31
பிரமாதி ஐப்பசி 14
மலர் : 58
இதழ் : 14

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தட்டிக் கேட்கிறது த.மா.கா!

ஆந்திராவில் ஒரு மூட்டை சிமெண்டின் விலை 110 ரூபாய். குஜராத்தில் 95, டெல்லியில் 120, மும்பையில் 135, சிமெண்ட் தொழிற்சாலையே இல்லாத கேரள மாநிலத்தில் கூட அதன் விலை 140 ரூபாய்தான். ஆனால், தமிழகத்தில் மட்டும் ஒரு மூட்டை சிமெண்ட் 200 ரூபாய்க்கு விற்கிறது! இவ்வாண்டின் தொடக்கத்தில் 110 ரூபாயாக இருந்த அதன் விலை ஏன் இவ்வளவு ஏற வேண்டும்?

சிமெண்ட் நிறுவனங்களிடமிருந்து எந்தவிதமான விளக்கமும் இல்லை.

தமிழக அரசு தரப்பில் திருப்திகரமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.


த.மா.கா. இந்த மெத்தனத்தைத் தட்டிக் கேட்டுள்ளது.

அ.இ.அ.தி.மு.க., கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து இந்த விலையுயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்தவிருக்கிறது.

அநியாயமான இந்த விலையுயர்வினால் மாநிலத்தில் கட்டடத் தொழிலே பாதிக்கப்பட்டு ஸ்தம்பித்து நிற்கிறது. அத்துறை பிரதிநிதிகள் கொதித்துப் போய் அரசைச் சாடுகிறார்கள். தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விட்டதாகப் புலம்பும் இவர்கள், அரசின் பேரில் பெரியதொரு குற்றமும் சாட்டுகிறார்கள் :

சிமெண்ட் உற்பத்தியாளர்களும் அரசியல் தலைவர்களும் ரகசிய ஒப்பந்தப்படி சிமெண்ட் விலையை ஏற்றிவிட்டு, கிடைத்த கூடுதல் தொகையைத் தேர்தல் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதாக பகிரங்க குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழக ஆளுங்கட்சி அரசியல்வாதி ஒருவருக்கு சிமெண்ட் நிறுவனம் ஒன்றில் முதலீடு



இருப்பதால் அந்த நிறுவனம் மூலம் விலையுயர்வு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதும் குற்றச்சாட்டு. செல்வாக்குள்ள அந்த நிறுவனம் நியமித்த விலைக்கு மற்றவையும் ஒப்புக் கொண்டன.

சிமெண்டின் விலை காரணமின்றி ஏறியிருப்பதைப் பார்க்கையில் இந்தக் குற்றச்சாட்டுகளை இலேசில் ஒதுக்கிவிட முடியாது. இவற்றுக்குத் தமிழக அரசு இன்னும் பதிலெதுவும் கூறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மின் கட்டணம், பஸ் கட்டணம், பால் விலை, ரேஷன் பொருட்களின் விலை என எதுவானாலும் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் குறைவுதான் என்று அடிக்கடி ஒப்புநோக்கி கணக்கு காண்பித்துப் பெருமைப்பட்டுக் கொள்ளும் முதல்வருக்கு, சிமெண்ட் விலை மட்டும் கண்ணில் படாமல், காதில் விழாமல் போனதன் காரணமென்ன?

அரசு தரப்பில் திருப்திகரமான விளக்கமோ நடவடிக்கையோ இல்லாத வரையில் தேர்தல் நிதி திரட்ட இது ஒரு நூதன யுக்தி என்றே சந்தேகிக்க வேண்டியிருக்கும்.

செயற்கையாய் உயர்த்தப்பட்ட சிமெண்டின் விலையை உடனடியாகக் குறைத்து, பழைய நிலைக்குக் கொண்டுவர முதல்வரின் தலையீடும் அவசர நடவடிக்கையும் மிக அவசியம்.


திரும்பிப் பார்ப்பதற்குள் ஓர் ஆண்டு ஓடி, சட்டமன்றத் தேர்தல்கள் நெருங்கி விடும். சிமெண்ட் விலை ஏற்றமும் அதன் பின்னணியும் எதிர்க்கட்சிகளின் கைகளில் வலுவான ஆயுதங்களாகி விடுகிற வாய்ப்பு நிறையவே இருக்கிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி உயர்வால் தவித்துக் கொண்டிருக்கும் வாக்காளர்களுடைய அதிருப்தி, எதிர்ப்பாக மாறாமல் இருக்க வேண்டுமானால், தி.மு.க. அரசு கறைபடியாத அரசாக விளங்க வேண்டும்.

அநாவசிய வேலை நிறுத்தம்!

டீசல் விலையின் அபரிமிதமான உயர்வு வயிற்றில் அடிப்பதாக அமைந்துள்ளது என்று சொல்லத் தேவையில்லை.

ஆனால், லாரி உரிமையாளர்கள் நினைப்பது போல் அது அவர்கள் வயிற்றில் மட்டும் அடிக்க



வில்லை; நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் பிழிந்தெடுக்கிறது.

டீசல் விலை ஏற்றத்தின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் பஸ் கட்டணங்கள் ஏறி விட்டன. சமையல் காஸ், பெட்ரோல் மற்றும் உணவுப் பண்டங்களின் விலைகளும் உயரும் என்று எதிர்பார்க்கலாம்.

டீசல் விலை உயர்வு மக்களை வாட்டி வதைப்பது எனினும் தவிர்க்க முடியாததும் கூட. சர்வதேச விலை உயர்ந்ததால் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு நாம் தரும் விலையும் உயர்ந்திருக்கிறது. ஏற்கெனவே பெட்ரோலியப் பொருட்கள் சலுகை விலையில் தரப்பட்டு வந்ததால் நேர்ந்த நஷ்டத்தை அரசு தாங்கி வந்தது. அதோடு, சர்வதேசச் சந்தையில் ஏற்பட்டுள்ள விலை உயர்வையும் அரசே தாங்குவது என்பது நடக்காத காரியம். அப்படியே தாங்கினாலும் வேறுவிதமான வரி விதிப்புகள் மூலம்தான் அந்தச் செலவை சமாளிக்க முடியும்.

ஆக, எப்படிப் பார்த்தாலும் பெட்ரோலியப் பொருட்களுக்கு உரிய விலையைப் பொது மக்கள்தான் கொடுக்க வேண்டிவரும்.

தவிர்க்க முடியாத விலை உயர்வைச் சமாளிக்க உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருளின் விலையை ஏற்றுவார்கள்; சரக்கு போக்குவரத்து நிறுவனங்கள் சரக்குக் கட்டணங்களை உயர்த்தும்.

இந்த விலைவாசிச் சங்கிலித் தொடரில் உள்ள முக்கியமான கணுவான சரக்கு போக்குவரத்துக்காரர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக முடிவெடுத்திருப்பது, உணர்ச்சிபூர்வமாக சரியாக இருக்கலாம். ஆனால் விவேகமாகாது. இதனால் உற்பத்தி பாதிக்கப்படும்; தொழில் - வர்த்தகம் நலிவுறும்; காய்கறி, பழம் போன்ற அழுகும் பொருள்கள் தேங்கிப் போய் நஷ்டம் ஏற்படும். இதனாலெல்லாம் விலைவாசி இன்னும் ஏறத்தான் செய்யுமேயொழிய பிரச்னை தீராது; குறையாது!

இது புரியாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் லாரி உரிமையாளர்கள் உடனே அதை வாபஸ் வாங்கியாக வேண்டும்.

டீசல் விலை உயர்வால் ஏற்படும் நஷ்டத்தையாவது உற்பத்திப் பெருக்கம் மூலமும் கூடுதல் உழைப்பு மூலமும் மீட்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால், சரக்கு போக்குவரத்து நின்று போவதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டவே முடியாது. உழைப்பின்றிக் கழியும் ஒருநாள் போனால் போனதுதான்; உற்பத்தி இன்றிக் கழியும் ஒரு தினம் கடந்தால் கடந்ததுதான். வேலை நிறுத்தம் காரணமாக வீணாகும் எந்தப் பொருளையும் மீட்க முடியாது.

தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக எண்ணும் லாரி உரிமையாளர்கள், நாட்டுக்கு அநீதி இழைக்கலாகாது. ○

"ஜெயலலிதா புண்ணியத்தில் ஆரம்பித்த நிகழ்ச்சி!"

தினமும் இரவு பத்து மணியானால், விஜய் டீவி.யை பார்த்தபடி, வயிறுகுலுங்க சிரிக்க முடிகிறது. காரணம், யூகி சேது நடத்துகிற நையாண்டி தர்பார் நிகழ்ச்சி. கிண்டலோ கிண்டல். அப்படி ஒரு கிண்டல். அதுவும் தேர்தல் சீசனில் கேட்கவே வேண்டாம்.

"பார்த்தால் படு சீரியஸ் மனிதர் போலத் தோற்றமளிக்கும் யூகிசேதுவுக்குள் இப்படி ஒரு நையாண்டி பர்சனாலிடியா?" என்று கேட்டால், "என் முகம் கொஞ்சம் சீரியஸ்; நான் எல்லாரிடமும் ரொம்ப கலகலப்பாகப் பழகிவிட மாட்டேன் என்பது உண்மைதான். ஆனால், நான் எவ்வளவு கிண்டலான பேர்வழி என்று என் நெருங்கிய நண்பர்கள் வட்டாரத்தில் கேட்டுப் பாருங்கள்" என்கிறார்.

"தமிழுக்கு இதுபோன்ற நையாண்டி புசுது! இந்த ஐடியா எப்படி வந்தது?"

"தமிழுக்கு இது புதுசில்லை. வில்லுப் பாட்டு, கதாகாலட்சேபம் இதெல்லாம் நமக்குப் பழகு. இது, கோட்டு சூட் போட்ட கதாகாலட்சேபம். நவீன இசைக் குழுவுடன் நடக்கிற வில்லுப் பாட்டு. தட்ஸ் ஆல்! இது ஒரு Talk Show. இத்தகைய நிகழ்ச்சிகள் நம் ஊர் டீவிக்குத்தான் புதுசு. மேற்கத்திய நாட்டு டெலிவிஷன்களில், இதுபோன்ற டாக் ஷோக்கள் ரொம்ப பாப்புலர். மக்கள் காசு கொடுத்து, டிக்கெட் வாங்கிக் கொண்டு போய், டாக் ஷோக்களில் பங்கேற்பார்கள். அவை 'லைவ்' ஆக டெலிவிஷனில் ஒளிபரப்பாகும்.

இங்கேதான் டாக் ஷோக்களில், நாலு பிரபலங்களையும், நாற்பது பங்கேற்பாளர்களையும் உட்கார வைத்துக் கொண்டு, இருதரப்பினரையும் அதிகம் பேச விடாமல், இடையில் ஒருவர் புகுந்து (நெறிப்படுத்துபவராம்) 'டாக்கிக்' கொண்டே இருக்கிறார். அல்லது அவை 'dog show'வாக மாறி கடித்துக் குதறிக் கொள்கிறார்கள்!" என்று கடகடவென்று பேசிக் கொண்டே போகிறார் யூகிசேது.

சில தமிழ்ப் படங்களில் நடித்திருக்கிறார். இத்தாலியப் படம் ஒன்றில் நடித்த அனுபவமும் உண்டு. ஒரு திரைப்பட விழா கூட விடாமல் உலகம் சுற்றியிருக்கிறார். இடையில் சில காலம் திரைப்பட விநியோகத்தில் ஈடுபட்டிருந்ததால், திரையில் காண முடியவில்லை.



• தர்பாரின் போது...

"நையாண்டி தர்பாரின் கதை என்ன?"

"நாலு வருடங்களுக்கு முன்பே, மின்பிம்பங்கள் பால கைலாசத்திடம் இந்த ஐடியாவை நான் சொன்னேன். ஐடியா அவருக்குப் பிடித்திருந்தாலும், உடனடியாய்ச் செயல்படுத்த முடியவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன், மாதிரிக்குக் கொஞ்சம் ஷூட் பண்ணினோம். அப்புறம் ஐடியா, டேக் ஆஃப் ஆகவில்லை. ஒருவழியாக ஜெயலலிதா புண்ணியத்தில் நிகழ்ச்சியை ஆரம்பித்து விட்டோம்."

"நையாண்டி தர்பார், விஜய் டீ.வி.யில்தானே வருகிறது? ஜெயா டீ.வி.யில் இல்லையே?"

"அது சரிதான்! ஜெயலலிதாவால்தானே இந்தத் தேர்தலே வந்தது. எனவேதான், சுறுசுறுப்பு வந்து, இதை ஆரம்பித்து விட்டோம். முதலில் நையாண்டி தர்பார் நிகழ்ச்சியில் திரையில் நான் தோன்றுவதாக இல்லை. டைரக்ஷன் மட்டுமே. ஆனால், இதை நடத்தித் தர முடியுமா? என்று நாங்கள் கேட்ட பிரபலங்கள் அனைவரும், 'ஐயோ சாமி! ஆளை விடு!' என்று கழன்று கொள்ள, புதுமுகங்களைப் போடலாமா என்று பார்த்தபோது, அவர்கள் நன்றாக நடித்தார்களே தவிர, இயற்கையாக வரவில்லை. அப்புறம் நானே களம் இறங்கி விட்டேன். முதலில் ஒளிப்பதிவு செய்த கேஸட்டைப் பார்த்து 'இத்தனை நாள் நீ எங்கேய்யா இருந்தே?' என்று பாராட்டினார் டைரக்டர் கே. பால சந்தர்."



• பூகிசேது

"நையாண்டியெல்லாம் உங்கள் சொந்த சரக்கா?"

"இல்லை. இல்லை. எல்லாம் நம் ஊர் அரசியல்வாதிகள் போடும் பிச்சை. தவிர, மூவர் குழு ஒன்று ஸ்கிரிப்ட் தயார் செய்கிறது. அதில் சிறு சிறு மாற்றங்களுடன் சொந்த கமெண்ட்களையும் நான் சேர்த்துக் கொள்கிறேன்."

"வாஜ்பாய், ரொட்டி சாப்பிட்டதற்காக, தமிழக கூட்டணிக் கட்சிகள் கோபம் கொண்டு மத்திய அரசுக்குத் தொல்லை தருவது என்பது கற்பனை என்றாலும் ரொம்ப ஓவர் இல்லையா?"

"நான் வாஜ்பாய் என்கிற தலைவரைக் கிண்டல் செய்யவில்லை; கூட்டணி ஆட்சியில் சந்திக்கக்கூடிய பிரச்னைகள் என்கிற கருத்தைத்தான் நையாண்டி செய்தேன்."


"நிஜமாகவே உங்களுக்கு அரசியல்வாதிகள் என்றால் வெறுப்பா?"

"ஆமாம்! மக்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு, தாம் என்ன சொன்னோம் என்பதையே மறந்து விட்டு, அர்த்தமில்லாமல் உளறுவதே பலருக்கும் வழக்கமாகிவிட்டது. அதையெல்லாம் படிக்கிறபோது, எரிச்சல்தான் ஏற்படுகிறது. நையாண்டி செய்கிறபோது எனக்கு இந்த எரிச்சலும் கைகொடுக்கிறது."

டெயில் பீஸ் : நையாண்டி தர்பார் நிகழ்ச்சியில் தினம் ஒரு பிரபலத்தை விருந்தினராக அழைத்து சில நிமிடம் பேட்டி காண்கிறார் சேது. இதில் கிண்டல் ஏதுமில்லை. ஆனாலும், ஸ்ரீகலா பரத் (நடனக் கலைஞர்) வந்தபோது, 'இப்போது டான்ஸ் ஆடுங்களேன்' என்றார். அவரும் புடைவையை இழுத்துச் செருகிக் கொண்டு அபிநயம் பிடித்தார். கிரிக்கெட்டர் சடகோபன் ரமேஷ், வீணை காயத்ரி ஆகியோரைப் பாட வைத்தார்!



'நையாண்டி தர்பார்' பூகி சேது



Salient Features

- 1300 Pages in two volumes
- Demy size - 22cm x 14cm
- Hard Bound Pack
- High quality Maplitho Paper
- Foreword given by Eminent Personalities; Former President of India Shri Shanker Dayal Sharma, Prof. V.C. Kulandaisamy
- Each Couplet (Kural) is followed by English Translation, Transliteration & Explanation with Cross Reference From all classic Literature in Tamil, Bible, Koran, Gita etc.
- Unimaginable - Affordable Price made easy by Arutchelvar Dr. N.M.'s Liberal Contribution

Published by :
Arutchelvar **Dr. N. Mahalingam**
President, Sri Ramananda Adigalar Foundation
Designed, Printed & Distributed by :
Varthamanan Pathippagam

Price of ONE Set	Rs. 500.00
Dr. N.M.'s Contribution	Rs. 150.00
	Rs. 350.00
Pre-Publication discount	Rs. 100.00
Net Price	**Rs. 250.00** Only

How to Order

By Post : Send Rs. 285/-
(Regd.Postage & Packing charges Rs.35/- included)
by M.O/D.D. before 30.11.99
book will be sent by Regd. from 1.1.2000.
(D.D. - infavour of VARTHAMANAN PATHIPPAGAM
Payable at Chennai)

In Person : Pay Rs.250/- by cash
in Varthamanan Pathippagam Office.
Date of Delivery mentioned in the receipt.

Overseas (Any part in the Globe) :

To get by Regd. Air Mail : Send US $ 50
by Regd. Sea Mail : Send US $ 15

M.O./ D.D. should be sent to :

VARTHAMANAN PATHIPPAGAM,
ARR Complex, 141, Usman Road, T. Nagar,
Chennai - 17. Near Panagal Park.
Business Hrs. : 9.30 a.m. - 6.30 p.m.
• No Lunch Break • Sunday Holiday •

Remember ! Offer & Booking Closes on 30.11.1999

அப்செட் ஆன மகாஜன்!

● அமேதி தொகுதியில்தான் சோனியா காந்தி ராஜிநாமா செய்வார் என்று நாம் எழுதியிருந்தோம். ஆனால் அதற்கு மாறாக பெல்லாரி தொகுதியில் ராஜிநாமா செய்து விட்டார். என்ன காரணம்? சோனியாவின் ராஜிநாமாவுக்குப் பிறகு அமேதியில் யார் போட்டியிடுவது? பிரியங்காவா, ராகுலா? பிதுரார்ஜித தொகுதியின் உரிமை தங்களுக்கே இருக்கிறதென்று இருவருமே வாதாட திகைத்து விட்டாராம் சோனியா. இந்த வாரிக உரிமைச் சண்டை வீதிக்கு வர விரும்பாத சோனியா, வேறு வழியின்றி பெல்லாரியை ராஜிநாமா செய்து விட்டாராம்!

● சென்றமுறை மாதிரியே இம்முறையும் அமைச்சரவை நிர்மாணத்தில் தாம் ஒரு முக்கிய பங்கு வகிப்போம் என்று கனவு கண்டு கொண்டிருந்தார் பிரமோத் மகாஜன். ஆனால் வாஜ்பாயிடமிருந்து எந்தவிதமான அழைப்பும் இல்லை. முக்கியத்துவம் வாய்ந்த தம்மை எப்படி ஒதுக்க முடியும் என்று தமது நண்பர்கள் வட்டாரத்தில் சொல்லிக் கொண்டிருந்தார் மகாஜன். பிறகு அமைச்சரவை எப்படி நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்று வாஜ்பாயிக்கு குறிப்பொன்றை எழுதியனுப்பினார். அதற்கும் பதிலில்லை. அமைச்சரவைப் பட்டியலை இறுதி செய்யும் பொறுப்பை அத்வானி, ஜஸ்வந்த் சிங், பிராஜேஷ் மிஷ்ரா ஆகியோரடங்கிய மூவர் குழுவிடம் ஒப்படைத்து விட்டார் வாஜ்பாய். மகாஜனுக்கு செய்தித் தொழில் நுட்பம் என்கிற புதிய இலாகா ஒன்று கொடுக்கப்படப் போவதாகக் கூறப்பட்டது. இதையறிந்த மகாஜன், புதிய இலாகா வேண்டாம்; ஏற்கெனவே புழக்கத்திலுள்ள ஒரு இலாகாவையாவது கொடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். இதற்கு அர்த்தம், தமக்கு விமானத்துறை வேண்டுமென்பது. அது கிடைத்தால் தாம் புதிதாக ஆரம்பித்திருக்கும் விமானக் கம்பெனிக்கு மிகவும் உதவிகரமாய் இருக்கும் என்று நினைத்தார். இதைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட வாஜ்பாய், நீர்வளம் மற்றும் பாராளுமன்ற விவகாரத் துறைகளைக் கொடுத்து விட்டார். அப்செட் ஆகி விட்டார் மகாஜன்.

● பிரதமர் அலுவலகத்தில் கஞ்சன் குப்தாவை விசேஷ அதிகாரியாக நியமித்ததில் அப்செட் ஆகிப் போனது ஆர்.எஸ்.எஸ். இவர் முதலில் பயனீர் பத்திரிகையில் இருந்தவர். அப்போது தம்மை இடதுசாரி என்று கூறிக் கொண்டிருந்தார். '96ல் பா.ஜ.க.வின் வளர்ச்சி பற்றிக் கணக்குப் போட்டவர், பா.ஜ.கவுக்குத் தாவினார். மெள்ள மெள்ள பா.ஜ.க. அலுவலகத்துக்குள் புகுந்து, ஜனா. கிருஷ்ணமூர்த்தியின் செல்லப் பிள்ளையானார். அப்புறம் 'பி.ஜே.பி. டுடே'




• சுஷ்மா



• சோனியா

என்கிற கட்சிப் பத்திரிகையின் ஆசிரியரானார். இப்போது விசேஷ அதிகாரியாகி விட்டார். ஆர்.எஸ்.எஸ். பத்திரிகையான 'ஆர்கனைசர்' ஆசிரியர் சேஷாத்ரி சாரி (தமிழர்)யும் அதன் இந்தி வடிவமான 'பாஞ்சஜன்யம்' ஆசிரியர் தருண் விஜய்யும் நீண்ட நாட்களாகவே தங்களுக்கு ஒரு பதவி பட்டம் கிடைக்காதா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், கஞ்சன் குப்தாவுக்குப் பதவி என்றால் ஆர்.எஸ்.எஸ். அப்செட் ஆகாமல் என்ன செய்யும்?

● மீண்டும் பெல்லாரியில் போட்டியிடுவாரா சுஷ்மா ஸ்வாராஜ்? ''ஓர் அந்நியர் இத் தேசத்தில் உயர் பதவி வகிக்கக் கூடாது என்கிற கொள்கை அடிப்படையிலேயே சோனியாவை எதிர்த்தேன். கட்சியும் அதற்காகத்தான் என்னை அனுப்பியது. இப்போது அந்த அவசியம் ஏற்படவில்லையே?'' என்கிறார் சுஷ்மா.



• வாஜ்பாய்



• மகாஜன்

● மிஸோராம் மாநிலம் முழுக்க முழுக்க கிறிஸ்துவர்களைக் கொண்ட மாநிலம். இம் மாநிலத்தின் ஒரே எம்.பி, வன்லால் ஸோமா. பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துத் தமது ஆதரவைத் தெரிவித்து விட்டார் இவர். "காங்கிரஸ் ஆளுகிற மாநிலங்களில்தான் கிறிஸ்துவர்களுக்கு எதிரான வன்முறை தூண்டி விடப்படுகிறது. பி.ஜே.பி.யும் அதுபோல் ஏதாவது வம்பு செய்தால் உடனடியாக எனது ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டு விடுவேன்!'' என்றார் நம்மிடம். "நீங்கள் ஒருவர் வாபஸ் பெறுவதால் என்னவாகி விடப் போகிறது?'' என்று நாம் கேட்ட போது, "ஒரு வோட்டு எத்தனை மதிப்பு வாய்ந்தது என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தவராயிற்றே பிரதமர். இதை பிரதமரிடம் கூறினேன்!'' என்றார் அமைதியாக.

● வன்லால் ஸோமா, தமது அகரவைத் தெரிவித்த சூட்டோடு, 'மிஸோராம் மாநிலத்துக்கு விசேஷ அமைதி போனஸ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்!' என்று அறிவித்தார் அத்வானி. வட கிழக்கு மாநிலங்களிலேயே கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக எந்தவிதமான வன்முறையும் இல்லாமல் அமைதியாக இருப்பது மிஸோராம் மட்டும்தான். இதற்காக விசேஷ அமைதி போனஸ் வழங்கப்படப் போவதாக சில ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்டது. இருந்தாலும் இதுவரை பைசா பெயரவில்லை. இப்போது அது விரைவு படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

— இந்த்ரப்ரஸ்தன்

இந்த மரத்தைச் சுற்றித்தான்

ஐந்து வருடங்களுக்கு முன்பு சூரஜ் பாரஜத்யா தமது, "ஹம் ஆப்கே ஹை கோன்" வாயிலாக விரித்த பாச வலையிலிருந்து, இந்தித் திரை உலகம் மீண்டதாகத் தெரியவில்லை. குடும்பம் – முக்கோணக் காதல் – இசை, இவைதான் வெற்றிக்கான ஃபார்முலா என்று நிச்சயமாக நம்புகிறது. 'ஹம் ஆப்கே ஹை கோனை' கல்யாண வீடியோ என்று கிண்டலடித்தவர்களெல்லாம் கல்யாணத்துக்கு மேல் கல்யாணமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ராஜா ஹிந்துஸ்தானி, தில் தோபாகல் ஹை, பியார் கியா தோ டர்னா க்யா, குச் குச் ஹோதா ஹை, ஹம் தில் தேசுகே சனம், ஹீரோ நெ: 1 எல்லாவற்றிலும் கொஞ்சம் குடும்பம், கொஞ்சம் காதல், கொஞ்சம் சோகம், கொஞ்சம் தியாகம், கடைசியில் உண்மைக் காதலுக்கு வெற்றி என்ற, காலத்தை வென்ற காதல் காவியங்கள் தான்.

அதற்கென்ன? சூரஜ் தமது காதலர்களை இந்திய மரங்களைச் சுற்றி ஓட விடுகிறார். ஏனையோர் சுவிட்ஜர்லாந்து, ஆஸ்திரேலியா அமெரிக்கா என்று அயல்நாட்டு தாவர இனங்களை வலம் வர வைக்கிறார்கள்.

படத்துக்குப் படம், "ஃபாமிலி வால்யூஸ்" என்று, அப்பா, அம்மாவுக்கு மரியாதை, அவர்கள் சொல்படி மணமுடித்தல் (வேறு யாரையோ காதலித்து விட்டு) என்பன போன்ற இடைச் செருகல்கள், இளைய சமுதாயத்துக்கு போனஸான நீதி போதனைகள். இடையே தேசப்பற்று ஒரு மின்னல் கீற்றாக வந்து போயிற்று. பார்டர், ஸர்ஃபரோஷ் போன்றவை கார்கில் பின்னணியில் பளிச்சிட்டன. ஒரு தீம் வெற்றி பெற்றால், அதே கோணத்தில் ஓராயிரம் தொடர வேண்டும் என்ற எழுதப்படாத சட்டத்தை ஒட்டி, காஷ்மீர் பிரச்னை, எல்லைத் தகராறுகளை வைத்து ஓர் அரை டஜன் படங்களாவது தொடர இருக்கின்றன.



• ஷியாமளன்



• ராம்கோபால் வர்மா

அரசியலை மையமாகக் கொண்டவை மட்டும், எந்தக் காலத்திலும் பாலிவுட்டில் எடுபட்டதில்லை. பெண் அரசியல்வாதியைச் சுற்றிப் பின்னப்பட்ட 'ஆந்தி' ஓரளவு தலைநிமிர்ந்ததே என்று (இந்திரா காந்தியைப் பிரதிபலித்ததால்) இப்போது ஷபானாவை வைத்து 'காட் மதரை' முயன்றிருக்கிறார்கள்.

ஆனால் அதற்கு, தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸுக்கு ஏற்பட்ட நிலைமைதான்! குறிஞ்சி மலராக, எங்கிருந்தோ ஒரு 'சத்யா' விரிந்து, வாகைசூடியதற்கு, அதில் காட்டப்பட்ட அண்டர்வர்ல்டின் அட்டகாசம் சத்தியமாகக் காரணமல்ல. மும்பையின் யதார்த்த வாழ்வை, சத்தியத் தன்மையுடன் பிரதிபலித்ததன் எதிரொலி தான்!

இதில் 'கஜகாமினி' போன்ற கலை (மாதுரி?) உலக அர்ப்பணங்கள் ஒரு தனி வகை. கொஞ்சம் 'கலை'த்தன்மை வீசிய "தால்" கூட பெரும் வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியாது – தோல்வியில் வெற்றி வகைதான்.

ஆனால், வர இருக்கும் பெருவாரியான படங்களை வைத்து எடைபோட்டால், காதல் கதைகளுக்குத்தான் 'கிராக்கி' அதிகம்!

பாலிவுட்:

இயக்குனர்கள் :

இந்தித் திரையில் சுபாஷ்காய், அனில் தவன், குல்ஜார் போன்ற இயக்குனர்கள் ஓரளவு ஸ்திரத்தன்மை அடைந்து விட்டாலும், இளையதலைமுறை இயக்குனர்கள் வரிசையில் அதிகபட்ச "ஹிட்"களை அளித்து மக்கள் மனத்தில் ஓர் இடத்தை பிடித்திருப்பவர்கள் சூரஜ் பாரஜத்யாவும், ராம் கோபால் வர்மாவும்! 'மைனே ப்யார் கியா', 'ஹம் ஆப்கே ஹை கோன்' போன்ற சூப்பர் ஹிட்களை அளித்த சூரஜ், "ஹம் சாத் சாத் ஹை"யை தீபாவளி விருந்தாகப் படைக்க இருக்கிறார்.

ஓடுகிறார்கள்...

கொள்ளுத் தாத்தாவிலிருந்து, நாத்தனார், மன்னி, சித்தி, பெரியம்மா, மாமி... பேரன் வரையிலான 48 குடும்பக் காரெக்டர்கள். கரிஷ்மா கபூர், தபு, சோனாலி பிந்த்ரே, மோனிஷ் பஹல், சல்மான்கான், ஸாயிஃப் அலிகான் என்று ஒரே நட்சத்திரக் குவியல். 450 பிரிண்டுகளுடன் பிரதான தியேட்டர்களை எல்லாம் முற்றுகையிடப் போகும் இந்த மெகா தீபாவளி ரிலீசுக்குப் பயந்து, பல தயாரிப்பாளர்களும், விநியோகிப்பாளர்களும் தங்கள் ரிலீசுகளை அடுத்த வருடத்துக்கு ஒத்திப் போட்டிருக்கிறார்கள்! ஹெச்எம்வி, ஆறு கோடிக்கு இதன் ஆடியோ உரிமைகளைப் பெற்றிருக்கிறதாம். கிட்டத்தட்ட ராமாயணத்தை மாடர்னைஸ் பண்ணியது போன்ற கதை.

''நான் பிறந்து வளர்ந்த கட்டுப்பெட்டித்தனமான சூழ்நிலை, எங்கள் கூட்டுக் குடும்பத்தில் அடிக்கடி நடக்கும் விசேஷங்கள், அந்தாக்ஷரி விளையாட்டுக்கள், ஆடல் பாடல்களெல்லாம் என் மனத்தில் ஆழமாகப் பதிந்து, அவையே என் படக் காட்சிகளாக இடம்பெறுகின்றன'' என்கிறார் சூரஜ் பாரஜத்யா. கூட்டுக் குடும்பங்கள் குறைந்து, குடும்ப விழாக்களும் நலிந்து விடுவதால், திரையிலாவது இவற்றைப் பார்த்து திருப்திப்பட்டு மகிழ்கிறார்கள் மக்கள். குடும்ப சென்டிமெண்ட், மெகா பட்ஜெட், இவற்றை வைத்தே இவர் எளிதில் வென்று விடுகிறார்.

"வீட்டுப் பிரச்னைகள் எனக்குப் போரடிக்கும்" என்கிறார் வெளிப் பிரச்னைகளில் ஆர்வம் செலுத்தும் ராம்கோபால் வர்மா. 'சிவா'வில் தொடங்கி, 'ரங்கீலா'வில் அறிமுகமாகி, 'தௌட்' 'சத்யா', 'கோன்' என விதவிதமான வர்ணங்களில் பிரகாசித்தவர் வர்மா. சிவில் இன்ஜினீயரிங்கை நிதானமாகப் படித்துத் (இருமுறை ஃபெயில்) தேறியிருந்தாலும் படம் எடுப்பதில் படு சுறுசுறுப்பு.

இவரது 'மஸ்த்'தைப் பற்றிப் பரபரப்பாக இன்று பேசப்படுகிறது. "சின்ன வயதில் நான் ஸ்ரீதேவியின் பயங்கர ஃபேன்! ரூம் முழுதும் அவரது போஸ்டர்கள் ஒட்டியிருப்பேன். என் நண்பர்கள் சிலர் போஸ்டருடன் உரையாடுமளவுக்குப் பைத்தியங்கள். ஸ்ரீதேவி படத்துக்கு, முதல் நாளே கால்கடுக்க க்யூவில் நின்று, டிக்கெட் வாங்கி விடுவேன். வளர்ந்த பின், "க்ஷணம் க்ஷண" (தெலுங்குத்தில் அவரை முதன் முதலாக டைரக்ட் செய்தபோது, நான் கற்பனை செய்திருந்த நடிகை ஸ்ரீதேவிக்கும், கண்ணெதிரே காணும் நிஜ ஸ்ரீதேவிக்கும் சம்பந்தமேயில்லை என்பது தெரிந்தது. இதுதான் 'மஸ்த்'தின் வித்து. கதாநாயகனாக புதுமுகம் அஃப்தார், நடிகையாக ஊர்மிளா, இந்த எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றனர்.

"எந்தெந்த சமயங்களில் எந்தெந்த விஷயங்



• கரிஷ்மா, தபு, சோனாலி

கள் என்னை பாதிக்கின்றனவோ, அந்தந்த நேரங்களில் சம்பந்தப்பட்ட விஷயங்களை நன்கு ஆராய்ந்து, தெளிந்து, 'அது பற்றிப் படம் எடுத்து விடுவேன். ஒரு படத்தை எடுத்தபின், அதைப் பற்றிச் சொல்ல இனி எதுவும் பாக்கியில்லை என்கிற அளவுக்கு என் மனத்தில் உள்ளதை எல்லாம் கொட்டி விடுவேன். அப்புறம் முற்றிலும் வேறான அடுத்த ப்ராஜக்டுக்குத் தாவி விடுவேன்'' என்கிறார் வர்மா.

சின்ன வயதில், ஸ்ரீதேவி ஆக்கிரமித்த இடத்தை இப்போது ஊர்மிளா பிடித்திருக்கிறார் - (வர்மா படங்களின் பர்மனென்ட் கதாநாயகி).

சொல்ல விரும்புவதை முழுமையாக அலசி, ஆராய்ந்து, எல்லா கோணங்களையும் வெளிப்படுத்துவதுடன், தோல்விக்கான கமையையும், சாக்குபோக்குச் சொல்லாமல் ஏற்பதே இவரது வெற்றியின் இரகசியம். சர்வர் சுந்தரம் ஸ்டைலில், தோல்வியுற்ற 'தௌட்' பட ஸ்டில்களையே தமது அறையில் மாட்டி வைத்திருக்கிறார்.

குவிஸ் போட்டி – 10 முடிவு!

சரியான விடைகள்:

1) தனுஜா 2)சந்தியா 3) இரின்
4) சண்முகவடிவு 5) ஐஸ்வர்யா
6) ஸ்ரீவித்யா 7) புரோதிமா 8) கனகா

சரியான விடைகளை ஏராளமான வாசகர்கள் எழுதியிருந்தார்கள். அவர்களுள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 200 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

தா. இராஜேஸ்வரி பழநி,
21, குமரப்பா தெரு,
சென்னை – 600 034

ஆனால் இவர்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடும் வகையில் ஒரு NRI டைரக்டர் பற்றி மிகவும் பரபரப்பாக இன்று பாலிவுட் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ஊஹூம்... தீபா மேத்தா, ஷேகர் கபூரெல்லாம் இல்லை; இவர் அமெரிக்காவையே ஒரு கலக்கு கலக்கியவர், ஹாலிவுட் ஸூப்பர் ஸ்டார் ப்ரூஸ் வில்லிஸையே இயக்கியவர். இவர் திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்த "த ஸிக்ஸ்த் ஸென்ஸ்" தொடர்ந்து, ஆறு வாரங்களாக, யு.எஸ். சார்ட்டுகளில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது.

மனோஜ் நைட் ஷியாமளன். பாண்டிச்சேரியில் பிறந்த ஃபிலடெல்ஃபியாக்காரர். இரண்டு மாதக் குழந்தையாக இருந்தபோதே, அப்பா ஷியாமளனும் அம்மா ஜெயலக்ஷ்மியும் இவரை எடுத்துக் கொண்டு அமெரிக்கா பறந்து விட்டனர்.

அவர்கள் ஸ்டெதெஸ்கோப் ஏந்தியிருக்க, இவர் சினிமாஸ்கோப்புக்கு மாறியது விசித்திரம்தான். ஏற்கெனவே 12 டாக்டர்கள் குடும்பத்தில் இருந்ததால், இவர் ஆபரேஷன் தியேட்டரை விடுத்து, சினிமாத் தியேட்டர் மீது பார்வையைப் படர விட்டார். 16 வயதுக்குள் 45 சிறு படங்களை எடுத்திருக்கிறார். இன்று, மூன்றாவது முழு நீளப் படத்துக்குப் பின் ஆஸ்கர் கனவுகளுடனிருக்கும் இந்த 20 வயதுக்காரருக்கு, சின்ன வயதிலிருந்தே பேய் பிசாசுக் கதைகளில் ஆர்வமாம். மலையாளப் பின்னணி வேறு ஆவியுலகுக்குத் தூபம் போட்டது.

மரித்தவர்களைக் காணும் ஒரு எட்டு வயதுச் சிறுவன், ஒரு குழந்தை மனநல மருத்துவர் (ப்ரூஸ் வில்லிஸ்) இருவரையும் சுற்றிப் புத்திசாலித்தனமாகப் பின்னப்பட்ட அனாயாச த்ரில்லர்; அதன் எதிர்பாராத முடிவு, மக்களை மீண்டும் மீண்டும் ஈர்க்கிறதாம்.

175.5 மில்லியன் டாலர்களைத் தாண்டி, வசூலில் சாதனை படைத்துக் கொண்டிருக்கும் இந்தப் படத்துக்காக ப்ரூஸ் வில்லிஸ் தமது ரேட்டை (20 மில்லியன் டாலர்) பிரத்யேகமாகக் குறைத்துக் கொண்டிருக்கிறார். "என் வாழ்க்கையிலேயே, மூன்றே மூன்று ஸ்க்ரிப்டுகளைத்தான் படித்தவுடனேயே, 'இதில் நடிக்க வேண்டும்' என்ற உத்துதலுக்கு உண்டாகியிருக்கிறேன். அதில் இதுவும் ஒன்று என்றாராம் ப்ரூஸ் வில்லிஸ். 'நெல்லியட்டு' என்ற நடுப்பெயர் அமெரிக்க நாவுகளை சுளுக்கிக் கொள்ளச் செய்வதால், 'நைட்' என்று சுருவாக்கியிருக்கிறார்."

மனைவி பாவனா (சைக்காலஜிஸ்ட்) மகள் சுலேகாவுடன் அவ்வப்போது சென்னை வருகிறார். ஆனால் இந்த வருடம் வர இயலாது - குட்டி ஷியாமளன் பிறக்க இருக்கிறானாம்!

— ஜெயஸ்ரீ ராஜ்

முழுமையான சுதந்திரம்



பவர்ஃபின் நிதி நிறுவனத்தில் நீங்கள் முதலீடு செய்யும்போது. அதன் பலன்களை நீங்கள் முழுமையாக பெற்று அனுபவிக்க முடியும். நீங்கள் விரும்பும்போது முதலீட்டுத் தொகையிலிருந்து குறிப்பிட்ட தொகையை பெறவோ, கடனாக வாங்கவோ அல்லது முதலீடு முதிர்வடைவதற்கு முன்பே முதலீட்டுத் தொகையை திரும்பப்பெற முடியும்.

13.14%	**18.18%**
36 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மாதாந்திர வட்டி 13% 12 மாதங்கள் & 1 நாளுக்கு 12.12% 25 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 12.63%	**60 மாதங்களுக்கு** (மாதாந்திர கூட்டுவட்டி ஆண்டிற்கு 13%)

- வட்டி மாதாந்திர அடிப்படையில் கூட்டப்படும்.
- **வட்டிக்கான காசோலைகள் இந்தியாவில் உள்ள குறிப்பிட்ட பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகளில் சமத்தொகையில் மாற்றத்தக்க விதத்தில் வழங்கப்படும்.**
- இந்நிறுவனம் வங்கிப்பணி சாராத நிதி நிறுவனமாக ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் : 07. 00389 ஆகும்.
- **முழுமையான பாதுகாப்பிற்கு CRISIL வழங்கியுள்ள FA+ மதிப்பீடு.**
- **வருமான வரிச் சட்டப்பிரிவு 80L-ன் கீழ் வரிச் சலுகையும் உண்டு.**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894
மின் அஞ்சல் : powerfin@md3.vsnl.net.in

DIPR/1308/DISPLAY/99

28-9-99 தேதியிட்ட 'எகனாமிக் டைம்ஸ்' இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது

1999 - தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை ஆண்டு.



சுமி சூப்பர்மார்க்கெட்

"உலக ஒழுக்கத்துக்கு மாறுபட்ட செய்திகள், பொருள் சிறப்புடன் நல்ல முறையில் கூறப்பட்டால், அவற்றையும் இலக்கியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!"

"புதிய சிந்தனையாக இருந்து, அதைத் தெரிவிக்கப் பழைய மரபு போதாவிட்டால் புதிய இலக்கிய மரபைத் தோற்றுவிக்கலாம்!"

- என்னடா இவ, திடீர்னு இப்படி சோடா குடிக்காம பிரசங்கம் பண்றாளேன்னு தோணுதா?

இதைச் சொன்னது நான் இல்லை. வேற யாராவது புரட்சிகர நவீன இலக்கியவாதியான்னு கேட்டா அதுவும் இல்லை. டெஃபனட்டா, உங்களால நம்ப முடியாது - தொல்காப்பியர்!

கடுமையான சட்டதிட்டங்களைச் சொல்ற ஆதார



இலக்கண நூலாசிரியர் இப்படியொரு ஸ்டேட்மெண்ட் - போல்டா சொல்லியிருக்கறதா படிச்சப்ப, ரியலி, ரொம்ப ஆச்சர்யமா இருந்தது.

"அறக்கழிவு உடையன பொருட்பயம் படவரின்
வழக்கென வழங்கலும் பழித்தன்றென்ப"

- இது ஒரு பீஸ். அடுத்தது.

"விருந்தே தோறும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே."

ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி இந்திரா பார்த்தசாரதி எழுதின ஒரு கட்டுரைல இதை எடுத்துக் கையாண்டிருக்கார்.

இப்ப நான் இதைச் சொல்றது, குஷ்வந்த் சிங்குக்கும் சாரு நிவேதிதாவுக்கும் ஒரு பாயின்ட் பிடிச்சிக் குடுக்கறதுக்காகத்தான்னு நீங்க நினைச்சீங்கன்னா, அதுக்கு நான் பொறுப்பில்லை!

திருநெல்வேலில மறுபடியும் ஒரு கலவரம் நடந்திருக்கு. கொலைதான் நடக்கலையே தவிர, அடிதடி வரைக்கும் போயிருக்கற இந்தக் கலவரத்து நாயகர்கள், அரசியல்வாதிகள் இல்லை; இலக்கியவாதிகள்.

நாலஞ்சு புஸ்தகங்கள் பத்தின ஒரு விவாதக் கூட்டம் ஏற்பாடு பண்ணியிருக்காங்க. கலந்துக்கிட்டவங்கள்ல சிலர் இலக்கியவாதிகள்; சிலர் குஸ்தி பயில்வான்கள்.

விளைவு!

மேடைலேயே மோதி, ரிலே ரேஸ் மாதிரி தொடர்ந்து வீதி வரைக்கும் வந்துட்டதா போயிட்டு வந்த என் ஃப்ரெண்ட் ஒருத்தர் சொன்னார். ஹாரிபிள்!

கருத்து மோதல்கள், லிட்ரரி ஃபீல்டுல சகஜம். இந்த 'மிரட்டு' மோதல்கள் ரீஸண்டா டெவலப் ஆகியிருக்கற கல்சர் போலருக்கு. அடிபட்ட இலக்கியவாதிகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். இந்தக் கலவரத்துக்கெல்லாம் யாரும் விசாரணைக் கமிஷன் வெக்கப் போறதில்லைன்னு நினைக்கறேன்.

விஜயதசமி அன்னைக்கு முசிறி சுப்ரமண்ய அய்யருக்கும் சரோட் மேதை அலாவுதீன் கானுக்கும் ஸ்டாம்ப் ரிலீஸ் ஃபங்ஷன் மியூசிக் அகாடமியில நடந்தது. மேடையில மினிஸ்டர்ஸ், மியூசிஷியன்ஸ், ஆஃபீஸர்ஸ் எல்லாரும் பேசினதையெல்லாம் விட, முசிறியோட ஸ்டூடண்டா இருந்த கருணா புருஷோத்தமன் எங்கிட்டே சொன்னதுதான் ரொம்ப டச்சிங். தேசிய ஸ்காலர்ஷிப் கிடைச்ச அவங்க முசிறிகிட்டே சேர்ந்தப்போ மாசம் இருநூத்தம்பது ரூபா கவர்மெண்ட் பணம் வருமாம். அதை அவர்கிட்டே கொடுத்தா, ஹன்ட்ரட் ருபீஸ் மட்டும் எடுத்துக்கிட்டு மீதியை ஸ்டூடண்டுக்கே திருப்பிக் கொடுத்துடுவாராம்! அந்த தாராள மனசு, கத்துக் கொடுக்கறதுலயும் அவருக்கு இருந்ததுன்னாங்க.

மனசு இப்படி ஈரமா இருந்ததாலதான் அவர் மியூசிக்கும் ரொம்ப உருக்கமாயிருந்தது போலிருக்கு!

ஒருத்தன் முட்டாளா, இல்லையான்னு கண்டுபிடிக்கச் சுலபமான வழி -

ஒரு ப்ளெயின் ஒயிட் பேப்பர்ல ரெண்டு பக்கமும் 'PTO' ன்னு போட்டு அவன் கையில குடுத்துடறது.

திருப்பிப் பார்த்தான்னா, அவன் முட்டாள்!


- இது இன்டர்நெட் கண்டுபிடிப்பு.

ஆனா பெல்லாரி வோட்டர்ஸ்கிட்டே இந்த எக்ஸ்பெரிமென்டே வேண்டாம். சோனியாதான் அவங்களுக்குப் 'பட்டம்' கட்டிட்டாங்களே!

— சுமி

தொல்காப்பியரும் குஷ்வந்த்சிங்கும்!

அக்னிசர்மா பக்கம்




மேஷம் : (அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

பிரச்னை எதுவும் வெளியிலேருந்து வர்றதில்லைங்க. எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். உங்களைவே எடுத்துக்கங்க. வீண் குழப்பங்களுக்கும் கவலைகளுக்கும் இடம் குடுத்துட்டு, எப்பவும் சோகமாவே இருக்கீங்க. இப்ப நீங்க எடுக்கப் போற ஒரு முக்கிய முடிவுதான் உங்க வாழ்க்கையையே பிரகாசமா அமைக்கப் போகுது. தடங்கல்கள் இருக்கத்தான் செய்யும். கவலைப்படாம முன்னேறும் வழியைப் பாருங்க. வாழ்க்கைத் துணைவர்/துணைவி பக்கபலமா இருப்பாங்க. பணப் பிரச்னையும் இருக்காது. பெரியவங்களை அனுசரிச்சி நடந்துக்கறது மூலமா பல லாபங்களை நீங்க அடைய முடியும்!




ரிஷபம் : (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)

ரொம்பச் சிக்கலான வேலை ஒண்ணுல மாட்டிக்கிட்டிருப்பீங்களே. கவனம்! எட்டுல செவ்வாய் இருக்கான். கொஞ்சம் பதறினாக் கூட காரியம் சிதறிடும். ஒரு பத்து நாள் டென்ஷனுக்கு இடம்கொடுக்காம, மனசை அமைதியா வெச்சுக்க வேண்டியது அவசியம். டூ வீலர் பயணம், விம்கா, கின்னஸ் ரெக்கார்டுக்கு முயற்சி பண்றது, ஷேர் போர்டு டிராவல்- இதெல்லாம் இப்ப வேணாம். வீடு கிடு வாங்கற வேலையும் வேணாம். முக்கியமான சமாசாரம் கடன் கொடுக்காதீங்க, யாருக்கும். சிலருக்கு ஆன்மிக நாட்டம் அதிகமா இருக்கும். நல்லது தான். தினமும் ஏழை யாருக்காவது ஒரு ரூபாய் தானம் பண்ணிட்டு, அன்றைய காரியங்களைத் தொடங்கினா, கண்டிப்பா சக்ஸஸ் ஆகும்.




மிதுனம் : (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)

சுகவாசி சார் நீங்க! பெரும்பாலான கிரகங்கள் உங்களை ஸ்ட்ராங்கா சப்போர்ட் பண்றதால வெற்றி மீது வெற்றி வந்து உம்மைச் சேரும்! குறிப்பா, நீங்க ஒரு கலைஞரா இருக்கீங்கன்னா கேட்கவே வேண்டாம். தொட்டதெல்லாம் துலங்கற நேரம் வந்தாச்சு. போட்டி, பந்தயங்கள்ல வெற்றி உறுதி. வழக்குகள் சாதகமாவே தீர்ப்பாகும். வராத கடன் பாக்கிகள் வந்து சேரும். தெய்வீகக் காரியங்களிலேயும் மனசு லயிக்குமே! நடத்துங்க. தான தருமங்கள் செய்யறது மூலமாவும் மனமகிழ்ச்சி கூடும். ஒரே ஒரு விஷயம்; எப்பவும் பதற்றமடையாம இருக்கணும். அவ்வளோ தான்!



கடகம் : (புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)


தெளிவும் தன்னம்பிக்கையும் மேலோங்கியிருக்கும். அரசு ஊழியர்களுக்குப் பணவரவு கூடுதலாக மகிழ்ச்சி தர்றதா இருக்கும். வழக்குகள் சாதகமா தீர்ப்பாகும். சில முக்கியஸ்தர்கள் தொடர்பும் அனுகூலமும் உண்டு. வெளிநாட்டுலேருந்து ஏதாவது நல்ல சேதி வரலாம். சிலருக்குப் பதவி உயர்வும் இட மாறுதலும் ஒண்ணா வரும். கலைத் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் கூடும். வீண் அலைச்சல் - செலவை மட்டும் தவிர்க்க முடியாது. வீட்டுல சில்லறை மனஸ்தாபங்கள் ஏற்பட்டு விலகும். சிலருக்குப் பொருள் இழப்பு, பிக்பாக்கெட் மூலம் ஏற்படலாம், உடனே!



சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

முக்கியமான பல காரியங்கள் இப்ப வெற்றிகரமா நிறைவேறும். பொருளாதாரத்தில நல்ல வளர்ச்சி உறுதி. வீட்டுல சில சுபகாரியங்கள் நடக்கறதுக்கான சந்தர்ப்பங்கள் கூடி வரும். தெய்வப் பணிகள்லேயும் சமூகப் பணிகள்லேயும் நாட்டம் ஏற்படும். சிலருக்குக் குழந்தைப்பேறு உண்டாகலாம். ஆசிரியர்களுக்கும் ஆன்மீக சொற்பொழிவாளர்களுக்கும் புகழ் ஓங்கும். கலைத் துறையினருக்குத் தொட்டதெல்லாம் பொன்னாகும். ஆனாலும் இரவுப் பயணங்கள், ஹோட்டல் சாப்பாடு, கண்ட தண்ணி குடிக்கறது இதையெல்லாம் தவிர்க்கறது மூலமா சில உடல் அசௌகரியங்களையும் தவிர்க்கலாம்.

நடக்குமென்பார்




கன்னி : (உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)

வியாபாரத்துல ஈடுபட்டிருக்கறவங்களுக்கு வளர்ச்சி உறுதி. விஞ்ஞானிகளும் பத்திரிகையாளர்களும் கூடத் தம் நிலை உயரப் பெறுவாங்க. பணப் பிரச்னை இந்த வாரம் இருக்காதுன்னாலும் செலவைக் கட்டுக்குள்ள வெச்சிக்க வேண்டியது அவசியம். சிலருக்கு அநாவசியமான செலவுகள் பல மலையா வந்து சேரும். உடல்நலத்துலயும் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். சிலருக்கு வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். பெண்களுக்குத் திருமணம் ஆகும் யோகம் இருக்கு. காதல் அனுபவங்கள் தித்திக்கும்.


அக்டோபர் 27 முதல் நவம்பர் 2 வரை

காதலுக்கு வீட்டுல பச்சைக் கொடி காட்டுவாங்க. சிலருக்கு தலயாத்திரைக்கான வாய்ப்பு கூடி வரும்.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

பிரமாதமான நேரம். நீங்க ஒரு பிசினஸ்மேனாகவோ, சிறுதொழில் முதலாளியாவோ இருந்தா இப்ப பணம் கொழிக்கும். தொழிலாளிகள் நலலா சப்போர்ட் பண்ணுவாங்க. எதிர்பார்க்கற உதவி, எதிர்பார்க்கும் இடத்துல கண்டிப்பா கிடைக்கும். வழக்குகள் சாதகமா தீர்ப்பாகும். வீட்டுல மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. சில விசேஷங்கள் கூட நடக்கப் போவதுன்னா பார்த்துக்கங்களேன். விளையாட்டு வீரர்களும் எழுத்தாளர்களும் பரிசும் பாராட்டும் குவிக்கப் போறது உறுதி. ஆனா சிறு காயங்கள் ஏற்படறதைப் பலரால தவிர்க்க முடியாது.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*


குரு வக்கிரமடைந்திருக்கறது உங்களைப் பொறுத்த வரை நல்லதுதான். நினைச்சது



நடக்கும்!



நடக்கற வாரம் இது. கடிதம் மூலமாவோ, போன் மூலமாவோ ஒரு நல்ல செய்தி வந்து உங்களை இப்ப குஷிப்படுத்தும். எதிர்பார்த்த பதவி உயர்வு கூடிய சீக்கிரம் வரும். விருந்துகள்ல கலந்துக்கற வாய்ப்பும் கூடி வரும். ஆனா வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்க வேண்டியது ரொம்ப அவசியம் - எதிர்பாராத தண்டச் செலவுகளையும். பெண்களுக்குப் புகழ் கூடும். பதவி உயர்வும் ஊதிய உயர்வும் உறுதி.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

பணவரவும் செலவும் அதிகரிக்கும். விருந்தினர்கள் பலர் இப்ப உங்க வீட்டுக்கு வருவாங்க. உத்யோகரீதில இடமாறுதலுக்குத் தயாரா இருக்கறது நல்லது. சிலருக்குத் திருமணம் நடக்கும். வியாபாரிகளும் விவசாயிகளும் வருமானம் அதிகரிக்கப் பெறுவாங்க. அரசியல்வாதிகள் பாடுதான் கொஞ்சம் டேஞ்சர். ஜால்ரா அடிக்கறவங்க சமயத்துல கவிழ்த்துடத் தயாரா இருக்காங்க. கவனமா இருங்க.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*


செலவைக் குறைக்க வேண்டியது அவசியம். இப்ப எக்கச்சக்கமான செலவுக்கான சாத்தியங்கள் தெரியுது. சிலருக்கு உடல்நலக் குறைவு ஏற்படலாம். குறிப்பா, பெண்களுக்கு வயிறு, தோள் சம்பந்தமான உபாதைகள் ஏற்படும். வெளியிடங்கள்ல சாப்பிடாதீங்க. இரவுப் பயணம், பகல் உறக்கம் அறவே கூடாது. உழைப்பு அதிகமாகவும் பலன் குறைவாகவும் இருக்கற வாரம் இது. சிலருக்கு வெளிநாட்டுலேருந்து ஏதாவது நல்ல செய்தி வரலாம்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

குடும்பத்துல அதிக அக்கறை உள்ள உங்களுக்கு இப்ப நல்ல காலம்தான்! எதிர்பாராத பணவரவு, தெய்வ தரிசனம், மகான் தரிசனம் ஏதாவது கிடைக்கலாம். அதே சமயம் அடிக்கடி வெளியூர் போற நிர்ப்பந்தங்களும் நேரலாம். வாரக் கடைசில ஒரு முக்கியமான முடிவெடுத்து வீட்டுல ஒரு நல்ல காரியம் நடக்க நீங்க காரணமாகப் போறீங்க. உங்க ரகசியத் திட்டத்தை வேற யார்கிட்டேயும் சொல்லாதீங்க.

கும்ப ராசிக்காரரான பட்டிமன்றப் பேச்சாளர் நிர்மலா மோகனுக்கு தெய்வ தரிசனத்தோடு மகான் தரிசனமும் கிடைக்கலாமாம்!



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

வீடு மனை வாங்க ஏற்ற காலம். வேண்டிய சகாயமும் பண உதவியும் தாராளமா கிடைக்கும். ஆனா, அறிமுகமில்லாதவங்களை அதிகம் நம்பாதீங்க. ஆபீஸ்ல மேலதிகாரிகள் உங்க மேல அன்பைப் பொழிவாங்க. புரமோஷனுக்கும் சான்ஸ் இருக்கு. வெற்றி வாய்ப்புகள் பிரகாசமா இருக்கறதால துணிஞ்சு, எந்தப் புது முயற்சிகள்லேயும் தாராளமா இறங்கலாம். பெண்கள்ல சிலருக்கு, திருமணம் நடக்கற வாரம் இது.

8

"அக்கா! அக்கா!" - பதிலில்லை.

அப்போதுதான் அதைக் கவனித்தான் ரஷ்ஷ¬. ராக்கெட்டிலிருந்து வரும் அவள் இணைப்பு அறுந்து, அந்தரத்தில் ஆடிக் கொண்டிருந்தது. இனி அவளிடம் பேச முயற்சி செய்வது அறிவீனம். மூச்சுவிட காற்று இல்லாமையால் வேகமாய் செத்துக் கொண்டிருக்கிறாள்.

"ஓ! அக்கா!" - அடுத்து அவன் செயல்கள் மிக வேகம் கொண்டதாயிருந்தன. தன் தோள் பக்கமிருந்த சின்ன ராக்கெட் கன்னை இயக்கியபடி சர்ரென்று வேகமாய்த் தவழ்ந்து வந்து அவளை உறுதியாய்ப் பற்றவும் அந்தரத்தில் ஆடிக்கொண்டிருந்த சூர்யாவின் இணைப்புக் குழாய்கள் இழுபட்ட வேகத்தில் கீழ்நோக்கி வரவும் சரியாயிருந்தது. சூர்யாவுக்கு இப்போது வெட்டி வெட்டி இழுப்பது சற்று அடங்கி விட்டிருந்தது.

'ஐயோ! அக்கா செத்து விடுவாயோ?' ரஷ்ஷ¬ அவளை இழுத்து அணைத்தபடி இடுப்பு ராக்கெட் கன்னை இயக்கி, மெது மெதுவாய் ராக்கெட்டிற்குள் இழுத்துச் சென்று... ஆயிற்று உள்ளே நுழைந்தாயிற்று. இதற்குள் இரண்டு நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் ஆக்ஸிஜன் இன்றி அவள் மூளையின் செல்கள் ஒவ்வொன்றாய் சாகப் போகின்றன.

"அக்கா... அக்கா!" - அவளை உசுப்பிக்



உயிர்களைத் தேடித் தேடி...

கொண்டே அசுரவேகத்தில் அவளைக் கிடத்தி ஸ்பேஸ் ஸூட்டைக் கழற்ற...

"என்னாச்சு ரஷ்ஷு?"

"ஹேய் ஹர்ரி அப்! ஆக்ஸிஜன் பாக்கெட் வித் மாஸ்க் கொண்டு வா! க்விக்... சூர்யா செத்துக் கொண்டிருக்கிறாள்" - ரஷ்ஷு காட்டுக் கூச்சல் போட்டான். சில நொடிகளில் அவள் உடைகள் உருவப்பட்டு முகத்தில் ஆக்ஸிஜன் மாஸ்க் பொருத்தப்பட்டது. ரஷ்ஷு அவளுக்கு செயற்கை சுவாசம் அளிக்க முயன்று கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் வரை அசைவு எதுவுமில்லை. அப்புறம் சற்று இடைவெளி விட்டு திணறலுடன் ஒற்றையாய் நீண்ட பெருமூச்சு. அதைத் தொடர்ந்து ஒரு பெரிய தும்மல் போட்டாள்.

'அப்பாடா!' - ரஷ்ஷு நிம்மதிப் பெருமூச்சு விட்டான். கோபக்ஸ் வந்து அவன் தோளைத் தட்டியது. அவர்கள் பார்த்துக் கொண்டேயிருக்க, கொஞ்சம் கொஞ்சமாக அவள் சுவாசம் சீராகி நார்மலுக்கு வந்தது. பத்து நிமிடங்கள் கழித்து பலவீனமாய்க் கண்ணைத் திறந்தாள்.

''ரஷ்ஷு... ரஷ்ஷு!'' - வெடவெடவென்று நடுங்கினாள்.

"ஓ.கே... ஓ.கே. அழாதே!"

''எனக்கு என்னாச்சு ரஷ்ஷு?''

''ராக்கெட்டுடனிருந்த உன் இணைப்பு அறுந்து விட்டது. பவர், காற்று எல்லாம் அதன் மூலந்தானே வருகிறது. எனவே சுவாசிக்கக் காற்று இல்லாமல் மயங்கி விட்டாய்."

எழுந்து ரஷ்ஷுவைக் கட்டிக் கொண்டாள்.

"நீ மட்டுமில்லாதிருந்தால்... சரி அவ்வளவு சுலபத்தில் இணைப்பு அறுந்து விடுமா என்ன?"

"எனக்கும் அதுதான் யோசனையாக இருக்கிறது. தொடர்பு அறுந்து போக சான்ஸ் இல்லை."

''எனக்கும் ஆச்சர்யமாக இருக்கிறது'' - இது கோபக்ஸ்!''

இந்த நிகழ்வுக்குப் பிறகு அவர்கள் மேலே போகப் போக அவ்வப்போது தாமு தொடர்பு கொண்டு பேசினார். கூடவே தலைவரும் நலம் விசாரித்தார். சூர்யாவின் இணைப்பு அறுந்து விட்டதைச் சொன்னபோது நம்ப மாட்டாமல், 'ஜாக்கிரதை ஜாக்கிரதை' என்று சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார். கோபக்ஸின் பணி பூமியிலிருந்து வரும் உத்தரவுப்படி ராக்கெட்டைச் செலுத்துவதும், செய்திகள், புகைப்படங்களை பூமிக்கு அனுப்புவதும் மட்டுமே. சிற்சில சமயங்களில் பொழுதுபோகாமல் அவர்கள் சீண்டும் போது அதுவும் பதிலுக்குச் சீண்டும்!

சூர்யா, "கோபக்ஸ்! உன் உருவத்தை ஏன் இத்தனை குள்ளமாய், ஒல்லியாய்த் தயாரித்தார்கள்? ரெண்டாங்கெட்டானாய் என்ன மாடல் நீ?"

''எடைப் பிரச்னை மற்றும் பவர் பிரச்னை. அத்துடன் நீ என்னிடம் எதிர்பார்க்கும் கனபரிமாணங்கள் வீண்."

"யேய்!"

"இடகாத்திரமாய்ப் படைத்திருந்தாலும் உனக்கு எவ்விதத்திலும் பயன்படமாட்டேன். வெறும் நெட்டும் போல்ட்டும் உலோகம்."

"ச்சு! என்ன நக்கல்? சரி சரி! இன்னும்

செய்யாறு தி. தா. நாராயணன்

உனக்கு என்னென்ன தெரியும்?''

"எல்லாம்தான். நீங்கள் – மனிதர்கள். உங்கள் கோபம், துக்கம், மகிழ்ச்சி, ஆசை, பாசம், காமம் அதையே காதல் என்று பொய்யாய் நம்பி ஏமாற்றிக் கொள்ளும் ஏமாளித்தனம்.''

"போதும். ரொம்ப மேதாவிதான்! காதலைப் பற்றி உலோகமான உனக்கு எப்படிப் புரியும்?''

"புரிய வேண்டாம். லாஜிக் தெரியும். எல்லாத் தூய்மையான காதலும் பிள்ளை பெற்றுக் கொள்வதில்தான் போய் முடிகிறது.''

"சரி. சரி அப்புறம்?''

"இலீப்பின் பொருளாதாரக் கட்டுரைகளைப் பற்றிப் பேசுவோமா?''

"வேண்டாம். அஸ்ட்ரானமி?''

"ஓ எஸ்! நியூட்டன், கெப்ளர் முதல் லேட்டஸ்ட் மிஸ்டர் தாமு வரை. மொத்தத்தில் நான் மிஸ்டர் தாமுவின் இன்னொரு பிரதி. ப்ளஸ் ஒரு சமீபத்திய என்ஸைக்ளோபீடியா.''

"உன் மூளையைக் கசக்கிப் பாரேன். செவ்வாய் கிரகத்தில் உயிரின வாய்ப்பு எப்படி?''

"சிக்ஸ்ட்டி ஃபோர்ட்டி'' – சொல்லிவிட்டு அது டெலஸ்கோப்பில் கண் வைத்தது.

"நீங்கள் இப்போது தயாராகுங்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் செவ்வாயின் வளிமண்டலத்தில் நுழையப் போகிறோம்.''

கீழே சிவப்பு உருண்டையாய் செவ்வாய் தெரிந்தது. மேலே மெல்லியதாய் புகைபடிந்தாற்போல.

"கோபக்ஸ்! எவ்வித ஆபத்துகளுமில்லாமல் எங்களைக் கொண்டு வந்து சேர்த்து விட்டாய். நன்றி.''

"அதை மிஸ்டர். தாமுவுக்குச் சொல்லுங்கள். என் எஜமானன், சூத்திரதாரி, கடவுள் – இதில் எப்படி வேண்டுமானாலும் குறிப்பிடலாம். அவருடைய கணித அறிவு எவ்வளவு துல்லியமாயிருக்கிறது?''

அவர்கள் பேசியபடி தயாரானார்கள். தேவையான உபகரணங்கள், குடிதண்ணீர் பாட்டில்கள், லேசர் கன்கள், வயர்லெஸ் செட்கள் சகிதம்.

"கோபக்ஸ்! டெலஸ்கோப்பை தரைப் பகுதிக்குத் திருப்பு. சூர்யா பதற்றமடைந்திருந்தான். அடிக்கடி வறண்டு போன தன் உதடுகளை நாக்கால் ஈரப்படுத்திக் கொண்டான். கைகளை நெட்டிமுறித்தான். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. தன் அனுமானம் எத்தனை சதவீதம் பலிக்குமோ?

ஜலதோஷமா? லெமன் ஜூஸ் சாப்பிடுங்கள்!

"டாக்டரிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டால் ஒரே வாரத்தில் சரியாகிவிடும். இல்லையென்றால் ஏழு நாட்களுக்கு இருந்து தொலைக்கும்'' என்று ஜலதோஷத்தைப் பற்றிக் கூறுவதுண்டு. ஜலதோஷம் பற்றிய வழக்கமான நம்பிக்கைகளில் பல அபத்தமானவை.

குளிர்காலத்தில்தான் பலருக்கும் ஜலதோஷம் பிடிக்கும் என்பது அவற்றில் ஒன்று. சீதோஷ்ணத்துக்கும் ஜலதோஷத்திற்கும் தொடர்பு கிடையாது. ஆனால் மழைக்காலத்தில் பெரும்பாலும் மக்கள் வீட்டுக்குள்ளேயே (அதாவது உலர்ந்த சூடான பகுதிகளில்) இருப்பதால் வைரஸ் கிருமிகள் பரவ வாய்ப்பு அதிகம்.

மனிதன் மட்டுமல்ல, குதிரைக்குக் கூட ஜலதோஷம் பிடிக்கும். சிம்பன்ஸி, கொரில்லா வகைக் குரங்குகளைத் தவிர மற்ற வகைக் குரங்குகளுக்கு ஜலதோஷம் பிடிப்பதில்லை. ஒரு முக்கிய வித்தியாசம். நமக்கு ஜலதோஷம் பிடிப்பது வைரஸ்

கோபக்ஸ் அந்தப் பெரிய டெலஸ்கோப்பை மிகச் சரியாக செவ்வாயின் தரைப் பகுதியை நோக்கியவாறு பொருத்தி விட்டு நிமிர்ந்த போதுதான் அது நிகழ்ந்து விட்டது. விர்ரென்று சின்னதாய் ஒரு பொருள் கல்லோ வேறெதுவோ? எதிர் வந்து தாக்க, மிகச் சரியாக டெலஸ்கோப்பின் வாய்ப் பகுதி!

'சிலீங்' ஓசையுடன் நொறுங்கியது!

போச்சு. ஆப்ஜெக்ட் லென்ஸ் நொறுங்கிச் சிதறியது.

"ரஷ்ஷு—! என்ன இது? ஐயோ!''

"சூர்யா செய்வதறியாது திகைத்து நின்றான்.

"பொறு அக்கா பார்ப்போம். ஆராய்வோம். இந்த அளவு உணர்ச்சிவசப்பட வேண்டாம். ஆபத்துகள் நிறைந்த நீண்ட பயணம். தெரிந்தேதான் வந்திருக்கிறோம். எத்தனையோ நடக்கலாம். நடக்கும். சமாளிக்கும் மனஉறுதியும், சமயோசிதமும் வேண்டும்.''

இந்த நேரம் சரியாக ஸ்பேஸ் ஈகிள் செவ்வாயின் வளிமண்டலத்திற்குள் நுழைந்தது. கோபக்ஸ் ஒரு பட்டனை அழுத்த, ராக்கெட் தன் எல்லா இயக்கங்களையும் நிறுத்திக் கொண்டு விட, அதை ஒரு பெரிய பாரசூட் ஏந்திக் கொண்டு தாலாட்டியது.

"அக்கா! இது நிச்சயம் செவ்வாயில்

கிருமிகளால். மேலே குறிப்பிட்ட மிருகங்களுக்கு ஜலதோஷம் பிடிப்பது பாக்டீரியா கிருமிகளால்!



முத்தமிட்டால் ஜலதோஷம் பரவுமா? வாய்ப்பகுதியை விட, அதைவிட வெப்பமான சூழல் உள்ள மூக்குப் பகுதியில்தான் வைரஸ் கிருமிகள் விருப்பத்துடன் வாசம் செய்கின்றன. "உனக்கு ஜலதோஷமாக இருக்கிறது. அதனால் உன் கையில் மட்டும் முத்தமிடுகிறேன்"என்று செயல்பட வேண்டாம். இதன் மூலம் ஜலதோஷம் பரவ அதிக வாய்ப்பு இருக்கிறது.

புகைப்பதோ, மது அருந்துவதோ அடைபட்ட மூக்கை சரிசெய்ய உதவும் என்று யாராவது கூறினால் நம்பாதீர்கள். தான் அடிமையாகிவிட்ட ஒரு பழக்கத்தைத் தொடர அவருக்கு ஏதோ ஒரு சாக்கு வேண்டியிருக்கிறது; அவ்வளவுதான்.

ஆன்ட்டிபயாடிக் மருந்துகள் ஜலதோஷத்தை நீக்கி விடுவதில்லை. இவை பாக்டீரியாக் கிருமிகளால் பரவும் நோய்களை மட்டுமே கட்டுப்படுத்தும்.

"ஜலதோஷம் பிடிச்சிருக்கு. இப்படி எலுமிச்சம் பழ ஜூஸ், ஆரஞ்சுப் பழம்னு புகுந்து விளையாடறியே" என்று அதிர்ச்சியடையவோ, கண்டிக்கவோ வேண்டாம். இவற்றில் அடங்கிய வைட்டமின் சி சத்து ஜலதோஷத்துக்கு எதிராகப் போர் புரியும் தன்மை வாய்ந்தது.

ஜலதோஷம் பிடித்துக் கொண்டால் குளிர்ந்த உணவை சாப்பிடக் கூடாது; சூடான உணவைத்தான் உட்கொள்ள வேண்டும் என்பதெல்லாம் நம் மன உணர்வைப் பொறுத்தது. மருத்துவப்படி இதற்கு எந்த ஆதாரமும் இல்லை!

பின்னே ஜலதோஷம் பிடித்துக் கொண்டால் என்னதான் செய்வது?

ஆழ்ந்த மூச்சு விடுதல், ஓரளவு உடற்பயிற்சி, அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்வது, முடிந்த வரை யாருடனும் கை குலுக்காமல் இருப்பது, வழக்கத்தை விட அதிக ஓய்வு, நிறைய திரவ உணவு– இவை போதும்!

– ஜி.எஸ்.எஸ்.

வாழும் ஏதேனும் ஓர் உயிரினத்தின் வேலை தான்."

உடைந்த டெலஸ்கோப்பை கோபக்ஸ் சீரியஸாகக் குடைந்து கொண்டிருந்தது.

"உளறாதே ரஷ்ஷை! உயிரினங்கள் தோன்றியிருக்க முடியுமா? என்பதே கேள்விக்குறி. அதிலும் இவ்வளவு உயரம் எறியக்கூடிய எந்திரங்களை உருவாக்கும் மூளை பலம்? நெவர்."

"இது உன் யூகம்."

"இரண்டு பேரும் பாருங்கள். இது ஒரு கல்தான். சின்ன மீட்டியோராகக் கூட இருக்கலாம்" – கோபக்ஸ்.

அவர்கள் கொஞ்ச நேரம் அதை திருப்பித் திருப்பி பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவித்தார்கள். இது செவ்வாயிலிருந்து வீசப்பட்ட கல்லா? அல்லது விண்கற்களில் ஒன்றா? இரண்டுக்குமே பாஸிபிலிட்டி இருந்தது. சூர்யா கவலையாய்க் கேட்டாள்.

"ரஷ்ஷை! இனி என்ன செய்யலாம்? டெலஸ்கோப் இல்லாமல் இனி பூமியைக் கூடப் பார்க்க முடியாதே. இங்கே டையமோஸ் துணைக்கோளுக்கு போவதைத் தான் கேன்ஸல் செய்து விட்டோம். இங்கிருந்தே ஆராய்ந்து ரிப்போர்ட் தரச் சொல்லி நேற்று உத்தரவு வந்ததே! அதற்கு என்ன செய்யப் போகிறாய்?"

"இருப்பதை வைத்துக் கொண்டு ஒரு மாதிரி சமாளிப்போம். சின்னதாய் ஒரு டெலஸ்கோப் கேமராவின் வியூஃபைண்டரில் உள்ளதல்லவா? அதைப் பயன்படுத்திக்குவோம். குறைந்த தூரத்தை கவர் செய்யலாம். ஆனால், டையமோஸ் ஆராய்ச்சி சாத்தியமில்லை. விட்டு விடலாம்...."

ஆர்வமாய்க் கீழே வெறுங்கண்ணால் பார்த்தார்கள். ஸ்பேஸ் ஷிப் பாரசூட்டுடன் மெதுவாய் ஆடி ஆடி இறங்கிக் கொண்டிருந்தது. அப்பா! கீழே சிவப்பு உருண்டையாய் சலனம் ஏதும் தெரியாமல் மேலே லேசாய் பனிப்படலம் படித்தாற்போல செவ்வாய் தெரிந்தது. மனிதர்களுக்குத்தான் இது பற்றி என்னென்ன கற்பனைகள், எண்ணங்கள், யூகங்கள்? இன்னமும் இதில் நாம் அறியாத ரகசியங்கள் என்னென்ன வெளிவரப் போகிறதோ? எல்லோர்க்கும் மனசு படபடவென்றிருக்கும். ராக்கெட் மெதுவாய் தரைப் பகுதியை நெருங்க நெருங்க சூர்யாவால் தாங்க முடியவில்லை. ஓடி லென்ஸை அட்ஜஸ்ட் செய்து வியூஃபைண்டரை தரையை திரும்பிப் பார்த்...

"வாவ்! ஹ... ஹ... ஹ... ஹ..."

"ஏய் அக்கா! என்னாச்சு உனக்கு?"

தொம் தொம் என்று எகிறிக் குதித்தாள். முஷ்டியை இறுக்கிக் காட்டி காட்டுக் கத்தல் கத்தினாள்.

(தொடரும்)

‘அவுட்டோரில்’

சன் டி.வியில் கடந்த 125 வாரங்களாக ஒளிபரப்பாகிவரும் பெண்களைக் கவர்ந்த நிகழ்ச்சி ‘ஸ்டார் சமையல்’. இதில் வாரம் ஒரு பிரபலம் சமையல் ஐட்டம் ஏதாவது செய்து காட்டுவார். இந்த நிகழ்ச்சியைத் தயாரித்து வரும் ரமேஷ் பிரபா, திருமதி விஜயலட்சுமி ரமேஷ் இருவரும், ஸ்டார் சமையல் நிகழ்ச்சியில் பங்கேற்ற சினிமா பிரபலங்களுடன் ஏற்பட்ட அனுபவங்களைச் சொல்கிறார்கள்:

● ஸ்டார் சமையல் ஷூட்டிங்குக்காக நடிகை ரஞ்சிதா வீட்டுக்குப் போனபோது, நாலைந்து டைரிகளை எடுத்துக் கொண்டு வந்து காட்டினார். அவை முழுக்க சமையல் குறிப்புகள். அவரே சேகரித்து எழுதி வைத்தவை. அதில் எதைத் தேர்ந்தெடுத்துச் செய்து காட்டுவது என்று கொஞ்ச நேரம் திணறிப் போய் விட்டார். கடைசியில் அவர் செய்து காட்டிய ஐட்டம்: பாலக் கச்சோரி. ரொம்ப டேஸ்ட்டாக இருந்தது.

● அதே போல, நீனா வீட்டுக்குப் போன போதும், எங்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. நீனா



உடன் இருக்க, அவருடைய அம்மா சமைக்கப் போகிறார் என்று நினைத்தால், அவரே தான் செய்து காட்டினார். அது மட்டுமில்லை, அவரது வீட்டில் பெரும்பாலும் அவர்தான் சமையலாம்!

● பத்து மணிக்கு கவலட்சுமி அவுட்டோர் புறப்பட வேண்டும். நாங்கள் அவர் வீட்டில் போய் இறங்கியபோது மணி காலை ஏழு. அவர் செய்து காட்டியது ஒரு ஸ்பெஷல் பெங்காலி ஐட்டம். வாணலியில், எண்ணெய் தடவிய வாழை இலையைப் போட்டு அதன் மீது மசாலா ஐட்டங்கள் திணிக்கப்பட்ட மீனை வைத்து, அதை நாலைந்து அடுக்கு வாழை இலை கொண்டு மூடிவிட வேண்டும். மிதமான சூட்டில் அது வேகும். அதன்பின், மீனைத் திருப்பிப் போட்டு வேக வைக்க வேண்டும். வித்தியாசமான டேஸ்ட்டுடன் நன்றாக இருந்தது இந்த ‘வாழை இலை மீன்’. எங்களுக்கு சமைத்துக் காட்டிக் கொண்டே இடையிடையே அவுட்டோர் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். வெளியூர் செல்வதற்கு அடுப்பு, மளிகை சாமான்கள் ஆகியவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டது ஆச்சரியமாக இருந்தது. வெளியூரில் கூட வேறு வழியில்லாவிட்டால் தான் ஓட்டலில் சாப்பிடுவாராம். மற்றபடி சொந்த சமையல்தானாம்!

● மேஜர் சுந்தரராஜன் வீட்டுக்குப் போனபோது லுங்கி கட்டிக் கொண்டு கேஷுவலாக இருந்தார். ஷூட்டிங் ஆரம்பிக்கலாமா? என்றதும், ஒரு சட்டையை மாட்டிக் கொண்டு, "ரெடி" என்றார். "என்ன சார்! லுங்கி கட்டிக் கொண்டா?" என்றபோது, "வீட்டில் ஒரு ஆண் சமைக்கிறபோது சலவை சட்டை, பாண்டா போட்டுக் கொண்டிருப்பார்? இதுதான் இயற்கையாக இருக்கிறது" என்றார். இப்போது, சில சென்னை ஓட்டல்களில் பிரபலமாக இருக்கும் மினி இட்லியை அவர் அப்போதே செய்து காட்டினார்.



சமையல் செய்யும் சுவலட்சுமி!

அதிலும் ஒரு புதுமை செய்தார். மினி இட்லி தட்டில் ஒவ்வொரு குழியிலும் ஸ்பூனால் சிறிது மாவை ஊற்றிவிட்டு, ஒவ்வொன்றிலும் கார சட்னி, முந்திரி, திராட்சை என்று வெரைட்டியாக வைத்து, அதன் மீது இன்னும் கொஞ்சம் மாவு விட்டார். வேக வைத்து எடுத்த மினி இட்லியை அப்படியேவும் சாப்பிடலாம்; வாணலியில் போட்டு எண்ணெயில் வறுத்தெடுத்தும் சாப்பிடலாம்!

● நிகழ்ச்சி ஆரம்பித்த புதிதிலிருந்தே இதில் பங்கேற்க ஜெமினி-தம்பதியை அழைத்துக் கொண்டிருந்தோம். நழுவிக் கொண்டே இருந்தார். கடைசியில் (நாலாவது) மனைவி ஜூலியானா வந்தபின் அவருடன் தொடர்பு கொண்டு பேசியபோது "நான் அவரை சமாளித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் வாருங்கள்!" என்றார். நாலைந்து நாள் முயன்றும், ஜூலியானா சமைப்பது போலவும், ஜெமினி அதை ருசிப்பது போலவும் மட்டுமே எடுக்க முடிந்தது.

● நடிகர் பாலாசிங் வீட்டுக்குப் போன போது, அவரது குடும்பத்தினர் சொந்த ஊருக்குப் போய் விட்டனர். ஆனால் அவரோ "நீங்களே ஏதாவது ஒரு ஐட்டத்துக்கு ரெசிபி சொல்லுங்கள். நான் செய்து காட்டுகிறேன்" என்றார். அதன்படி அவர் செய்து காட்டியது ஜவ்வரிசி வடை.

● பரபரப்புக்குப் பெயர்போன கராத்தே வீரர் ஹுசைனி ஒவ்வொரு வாரமும் 'பிரம்மச்சாரிகள் சமையல்' என்று ஏதாவது ஓர் எளிமையான ஐட்டத்தை சுவாரசியமாய்ச் செய்து காட்டுவார். ஒரு தடவை, கட்டுமரத்தில் கடலுக்குள் இருபது கி.மீ. உள்ளே போய், ஹுசைனியே வலை வீசி,

மீன் பிடித்து, கட்டு மரத்திலேயே அதனை சமைத்துக் காட்டினார். அவர் இடையில் கைதாகி, டெல்லி சிறையில் இருந்த போது, எங்கள் நிகழ்ச்சியில் இடம் பெறவில்லை. 'ஹுசைனி புரோகிராமை ஏன் நிறுத்தி விட்டீர்கள்? என்று பலரும் விசாரித்தனர். சிறுவர்கள் கூட விரும்பிப் பார்க்கும் புரோகிராம் ஹுசைனியின் 'பேச்சிலர் சமையல்.'

● பாட்டி வேடங்களில் அதிகம் நடிக்கும் எஸ்.என் லட்சுமிக்குப் போன் செய்த போது, "ஏங்க! நான் வயசுல குறைஞ்ச நடிகை லட்சுமின்னு நினைச்சு எனக்கு போன் பண்ணிட்டீங்களா? நான் பாட்டி ரோல்ல நடிக்கிற லட்சுமி!" என்றார். நாங்கள், அது தெரிந்துதான் அழைப்பதாகச் சொன்னதும் அவருக்கு மகிழ்ச்சி. கேழ்வரகைப் பயன் படுத்தி ஓர் ஐட்டமும், ரவையைப் பயன் படுத்தி ஓர் ஐட்டமும் செய்து காட்டினார்.

● பழம் பெரும் நடிகை சுந்தரிபாய், "நான் பழைய காலத்து மனுஷி! எனக்கு அந்தக் காலத்து சமையல்தான் தெரியும். ஆனால் அந்த ஐட்டங்கள் எல்லாம் இந்தத் தலைமுறை பெண்களுக்குத் தெரியாது!" என்று சொன்னார். அவர் இந்த வயதிலும், பருப்பு உருண்டைக் குழம்பு செய்து காட்டி, செய்முறையை விளக்கிய உற்சாகம் இருக்கிறதே, அது அசாத்தியம்.

● கமலா காமேஷுக்கு கண் பார்வை என்பது ஏறத்தாழ பத்து சதவீதம்தான். ஆனாலும் அவர் தாமே சமைத்துக் கொள்கிறார் என்பது ஆச்சரியம். "மத்தவங்க யார் சமைச்சாலும் எனக்குப் பிடிக்கிறதில்லை!" என்று சொன்னார்.

● டிரம்ஸ் கலைஞர் சிவமணி வீட்டுக்குப் போனபோது, சமையல் தவிர, மளிகை சாமான்கள் போட்டு வைக்கப்பட்டிருந்த டப்பாக்களை ஆட்டி, ஆட்டி, பலவித மியூசிக் வரவழைத்தது, ரொம்ப சுவாரசியமாக இருந்தது.

● நகைச்சுவை நடிகர் குமரிமுத்து, நிகழ்ச்சியில் பங்கேற்றபோது, சித்தர் பாடல்களிலும், பழம் பெரும் இலக்கியங்களிலும் உணவு பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைச் சொன்னபோது மாறுகண் காட்டி, வித்தியாமாய்ச் சிரிக்கிற வெறும் சிரிப்பு நடிகர் இல்லை இவர்; விஷயமுள்ள மனிதர் என்று புரிந்தது.

● மீசை முருகேஷின் மனைவி, வெட்கப்பட்டுக் கொண்டு கேமரா முன் வர மறுத்து ரூமுக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டார்! முருகேஷ் தம் மகளை அருகில் வைத்துக் கொண்டு சமையல் பகுதியை முடித்தபின் ரொம்பக் கெஞ்சிக்கூத்தாடி, ஒரு சில விநாடிகள் குடும்பத்தினர் அனைவரும் கேமராமுன் ஒன்றாய் நிற்க சம்மதிக்கச் செய்தோம்.

தொகுப்பு : **பாரதிமௌலி**

''தலைவர் பேச ஆரம்பிச்சுட்டா எல்லாத்தையுமே மறந்துடறார்.''

''என்னாச்சு?''

''எலெக்ஷனே முடிஞ்சு போச்சு, இன்னும் பேச்சை நிறுத்தலையே!''

– பி. நிர்மலாதேவி





''இன்று என்ன பாடம் நடத்தினீங்கன்னு சொல்லுங்க மிஸ். வீட்டுக்குப் போனவுடன் அம்மா கேட்பாங்க.''

– எஸ். மோகன்

பொன்னியின் செல்வன்

நாற்பத்தி ஆறாம் அத்தியாயம்

வானதி சிரித்தாள்!

நந்தி மண்டபத்தில் அமர்ந்து இளவரசரும் குந்தவை தேவியும் பேசிக் கொண்டிருந்த போது, - வானதி தூண் ஓரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்த போது, - கால்வாயில் படகில் காத்துக் கொண்டிருந்த பூங்குழலிக்கும் சேந்தன் அமுதனுக்கும் முக்கியமான சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

"அமுதா! ஒன்று உன்னை நான் கேட்கப் போகிறேன். உண்மையாகப் பதில் சொல்வாயா?" என்றாள் பூங்குழலி.

"உண்மையைத் தவிர என் வாயில் வேறு ஒன்றும் வராது, பூங்குழலி! அதனாலேதான் நாலு நாளாக நான் யாரையும் பார்க்காமலும் பேசாமலும் இருக்கிறேன்" என்றான் அமுதன்.

"சில பேருக்கு உண்மை என்பதே வாயில் வருவதில்லை. இளவரசருக்கு ஓலை எடுத்துக்கொண்டு இலங்கைக்குப் போனானே, அந்த வந்தியத்தேவன் அப்படிப்பட்டவன்."

"ஆனாலும் அவன் ரொம்ப நல்லவன். அவன் யாரையும் கெடுப்பதற்காகப் பொய் சொன்னதில்லை."

"உன்னைப் பற்றி அவன் ஒன்று சொன்னான். அது உண்மையா பொய்யா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்..."

"என்னைப் பற்றி அவன் உண்மையில்லாததைச் சொல்வதற்குக் காரணம் எதுவும் இல்லை. இருந்தாலும், அவன் சொன்னது என்னவென்று சொல்!"

"நீ என்னைப் பற்றி மிகவும் புகழ்ந்து பேசியதாகச் சொன்னான்."

"அது முற்றும் உண்மை."

"நீ என்னிடம் ஆசை வைத்திருப்பதாகச் சொன்னான். என்னை நீ மணந்து கொள்ள விரும்புவதாகச் சொன்னான்..."

"அவ்விதம் உண்மையில் அவன் சொன்னானா?"

"ஆம், அமுதா!"

"அவனுக்கு என் நன்றியைத் தெரிவிக்க வேண்டும்."

"எதற்காக?"

"நானே உன்னிடம் என் மனத்தைத் திறந்து தெரிவித்திருக்க மாட்டேன்; அவ்வளவு தைரியம் எனக்கு வந்திராது. எனக்காக உன்னிடம் தூது சொன்னான் அல்லவா? அதற்காக அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்."

"அப்படியானால் அவன் சொன்னது உண்மைதானா?"

"உண்மைதான், பூங்குழலி! அதில் சந்தேகமில்லை."

"உனக்கு ஏன் என்னிடம் ஆசை உண்டாயிற்று, அமுதா?"

"அன்பு உண்டாவதற்குக் காரணம் சொல்ல முடியுமா?"

"யோசித்துப் பார்த்துச் சொல்லேன். ஏதாவது ஒரு காரணம் இல்லாமலா இருக்கும்?"

"அன்பு ஏன் ஏற்படுகிறது, எவ்வாறு ஏற்படுகிறது என்று இதுவரை உலகில் யாரும் கண்டுபிடித்துச் சொன்னதில்லை, பூங்குழலி!"

"ஒருவருக்கொருவர் அழகைப் பார்த்து ஆசை கொள்வதில்லையா?"

"அழகைப் பார்த்து ஆசை கொள்வதுண்டு; மோகம் கொள்வதும் உண்டு. ஆனால் அதை உண்மையான அன்பு என்று சொல்ல முடியாது. அது நிலைத்திருப்பதும் இல்லை. சற்று முன் வந்தியத்தேவன் என்று சொன்னாயே, அவன் என்னைப் பார்த்தவுடன் என்னிடம் சிநேகம் கொண்டு விட்டான். அவனுக்காக நான் என் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தேன். என் அழகைப் பார்த்தா என்னிடம் அவன் சிநேகமானான்?"

"ஆனால் உன் சிநேகிதன் என் அழகைப் பற்றி ரொம்ப, ரொம்ப வர்ணித்தான் இல்லையா?"

"உன் அழகைப் பற்றி வர்ணித்தான். ஆனால் உன்னிடம் ஆசை கொள்ளவில்லை. பழுவூர் ராணியின் அழகைப் பற்றி நூறு பங்கு அதிகம் வர்ணித்தான். அவளிடமும் அவன் அன்பு கொள்ளவில்லை."

"அதன் காரணம் எனக்குத் தெரியும்."

"அது என்ன?"

"அதோ இளவரசருடன் பேசிக் கொண்டிருக்கும் இளையபிராட்டியிடம் அந்த வீரனின் மனம் சென்று விட்டது தான் காரணம்."

"இதிலிருந்தே அழகுக்கும் அன்புக்கும் சம்பந்தமில்லையென்று ஏற்படவில்லையா?"

"அது எப்படி ஏற்படுகிறது? இளைய பிராட்டியை விட நான் அழகி என்றா சொல்லுகிறாய்?"

"அதில் என்ன சந்தேகம், பூங்குழலி, பழையாறை இளைய

அமரர் கல்கி

பிராட்டியைக் காட்டிலும், அதோ தூண் மறைவில் நிற்கும் கொடும்பாளூர் இளவரசியைக் காட்டிலும், நீ எத்தனையோ மடங்கு அழகி. மோகினியின் அவதாரம் என்று பலரும் புகழும் பழுவூர் இளைய ராணியின் அழகும் உன் அழகுக்கு இணையாகாது. இப்படிப்பட்ட தெய்வீகமான அழகுதான் எனக்குச் சத்துருவாயிருக்கிறது. அதனாலேயே என் மனத்தில் பொங்கிக் குமுறும் அன்பை என்னால் உன்னிடம் வெளியிடவும் முடியவில்லை. வானுலகத் தேவர்களும் மண்ணுலகத்தின் மன்னாதி மன்னர்களும் விரும்பக்கூடிய அழகியாகிய நீ எனக்கு எங்கே கிட்டப் போகிறாய் என்ற பீதி என் மனத்தில் குடி கொண்டிருக்கிறது!''

பூங்குழலி சற்று யோசனையில் ஆழ்ந்திருந்து விட்டு, "அமுதா! உன் பேரில் எனக்கு ஆசை இல்லை என்று நான் சொல்லி விட்டால், நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டாள்.

''சில நாட்கள் பொறுமையுடன் இருப்பேன். உன் மனம் மாறுகிறதா என்று பார்ப்பேன்?''

"அது எப்படி மாறும்?''

"மனிதர்களின் மனது விசித்திரமானது. சில சமயம் நம் மனத்தின் அந்தரங்கம் நமக்கே தெரியாது. புறம்பான காரணங்களினால் மனம் பிரமையில் ஆழ்ந்திருக்கும். பிரமை நீங்கியதும் உண்மை மனம் தெரிய வரும்...''

''சரி; பொறுத்திருந்து பார்ப்பாய். அப்படியும் என் மனத்தில் மாறுதல் ஒன்றும் ஏற்படாவிட்டால்...?''

"உன்னிடம் வைத்த ஆசையை நான் போக்கிக் கொள்ள முயல்வேன்...''

"அது முடியுமா?''

"முயன்றால் முடியும். கடவுளிடம் மனத்தைச் செலுத்தினால் முடியும். நம் பெரியோர்கள் பகவானிடம் பக்தி செலுத்தித்தான் மனத்தைக் கட்டுப் படுத்திக்கொண்டார்கள்...''

''அமுதா! நீ என்னிடம் வைத்திருக்கும் அன்பு உண்மையான அன்பு என்று எனக்குத் தோன்றவில்லை.''

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? உண்மை அன்பின் அடையாளம் என்ன?''

"என்னிடம் உனக்கு உண்மை அன்பு இருந்தால், நான் உன்னை மறுதலித்ததும் என்னைக் கொன்று விட வேண்டும் என்று உனக்குத் தோன்றும். உனக்குப் பதிலாக நான் வேறு யாரிடமாவது அன்பு வைப்பதாகத் தெரிந்தால் அவரையும் கொன்று விட வேண்டும் என்று நீ கொதித்து எழுவாய்...''

"பூங்குழலி! நான் கூறியது தெய்வீகமான ஸத்வ குணத்தைச் சேர்ந்த அன்பு. நீ சொல்வது அசுர குணத்துக்குரிய ஆசை. பைசாச குணத்துக்குரியது என்றும் சொல்லலாம்...''

"தெய்வீகத்தையும் நான் அறியேன்; பைசாக இயல்பையும் நான் அறியேன். மனித இயற்கைதான் தெரியும். அன்பு காரணமாக இன்பம் உண்டாக வேண்டும். அதற்குப் பதிலாகத் துன்பம் உண்டானால் எதற்காக அதைச் சகித்திருப்பது? நாம் ஒருவரிடம் அன்பு செய்ய அவர் பதிலுக்கு நம்மிடம் அன்பு செய்யாமல் துரோகம் செய்தால், எதற்காக நாம் பொறுத்திருக்க வேண்டும்? பழி வாங்குவதுதானே மனித இயல்பு?''

"இல்லை, பூங்குழலி! பழி வாங்குவது மனித இயல்பு அல்ல. அது ராட்சஸ இயல்பு. ஒருவரிடம் நாம் அன்பு வைத்திருப்பது உண்மையானால் அவருடைய சந்தோஷம் நமக்கும் சந்தோஷம் தர வேண்டும். அவர் நம்மை நிராகரிப்பது முதலில் கொஞ்சம் வேதனையாயிருந்தாலும் பொறுத்துக்கொண்டு பதிலுக்கு நன்மையே செய்தோமானால், பின்னால் நமக்கு ஏற்படும் இன்பம் ஒன்றுக்குக்குப் பத்து மடங்காகப் பெருகியிருக்கும்...''

"நீ சொல்வது மனித இயல்பேயல்ல; மனிதர்களால் ஆகக்கூடிய காரியமும் அல்ல. வந்தியத்தேவனுடன் வைத்தியர் மகன் ஒருவன் வந்தான். அவன் என்னைப் பார்த்ததும் ஆசை கொண்டான். அது நிறைவேறாது என்று அறிந்ததும், அவனுடைய ஆசைக்குக் குறுக்கே நிற்பதாக அவன் எண்ணிய வந்தியத்தேவனைப் பழுவேட்டரையர் ஆட்களிடம் காட்டிக் கொடுக்க முயன்றான். என்னையும் அவன் கொன்று விட முயன்றிருப்பான்...''

அப்படியானால் அவன் மனித குலத்தைச் சேர்ந்தவன் அல்ல; கொடிய அசுர குலத்தைச் சேர்ந்தவன்.''

''அதோ கொடும்பாளூர் இளவரசி நிற்கிறாள். அவள் பொன்னியின் செல்வருக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்திருக்கிறாள். பொன்னியின் செல்வர் அவளை ஏற்றுக் கொள்ளா விட்டால், அவள் என்ன செய்வாள்? நிச்சயமாகப் பொன்னியின் செல்வருக்கு விஷம் வைத்துக் கொல்ல முயல்வாள். அவருடைய மனத்தை வேறு எந்தப் பெண்ணாவது கவர்ந்து விட்டதாக அறிந்தால், அவளையும் கொல்ல முயல்வாள்.''

''ஒரு நாளும் நான் அப்படி நினைக்க வில்லை, பூங்குழலி! சாத்வீகமே உருக் கொண்ட வானதி அப்படி ஒரு நாளும் செய்ய முயல மாட்டாள்.''

''இருக்கலாம்; நானாயிருந்தால் அப்படித்தான் செய்ய முயலுவேன்.''

''உன்னைக் கடவுள் மன்னித்துக் காப்பாற்ற நான் பிரார்த்தித்து வருவேன்...''

''கடவுள் என்ன என்னை மன்னிப்பது! நான்தான் கடவுளை மன்னிக்க வேண்டும்!''

''நீ தெய்வ அபசாரம் செய்வதையும் கடவுள் மன்னிப்பார்!''

''அமுதா! நீ உத்தமன். என் பெரிய அத்தையின் குணத்தைக்கொண்டு நீ பிறந்திருக்கிறாய்...''

''அது என்ன விஷயம்? திடீரென்று புதிதாக ஏதோ சொல்கிறாயே?''

''என் பெரிய அத்தை இறந்து போய் விட்டதாக நம் குடும்பத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா?''

''யாரைச் சொல்கிறாய்? என் தாய்க்கும் உன் தந்தைக்கும் உடன் பிறந்த மூத்த சகோதரியைத்தானே?''

''ஆமாம்; அவள் உண்மையில் இறந்து விடவில்லை.''

''நானும் அப்படித்தான் பராபரியாகக் கேள்விப்பட்டேன்...''

''அவள் இலங்கைத் தீவில் இன்றைக்கும் பைத்தியக்காரியைப் போல் அலைந்துகொண்டிருக்கிறாள்...''

''குடும்ப சாபக் கேட்டுக்கு யார் என்ன செய்ய முடியும்?''



அவள் இன்று பைத்தியக்காரி போல் அலைவதற்குக் குடும்ப சாபம் மட்டும் காரணம் அல்ல. சோழ குலத்தைச் சேர்ந்த ஒருவரின் நம்பிக்கைத் துரோகம்தான் அதற்குக் காரணம்.''

''என்ன? என்ன?''

''இளம் பிராயத்தில், என் அத்தை இலங்கைக்கு அருகில் ஒரு தீவில் வசித்து வந்தாள். அவளைச் சோழ ராஜகுமாரன் ஒருவன் காதலிப்பதாகப் பாசாங்கு செய்தான். அவள் நம்பி விட்டாள். பிறகு அந்த இராஜ குமாரன் இளவரசுப் பட்டம் சூட்டிக்கொண்டதும் அவளை நிராகரித்து விட்டான்...''

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது, பூங்குழலி!''

''என் ஊமை அத்தையின் சமிக்ஞை பாஷை மூலமாகவே தெரிந்துகொண்டேன். இன்னொன்று சொல்கிறேன், கேள்! சில காலத்துக்கு முன்பு பாண்டிய நாட்டார் சிலர் இங்கே வந்திருந்தார்கள். என் அத்தையை வஞ்சித்த இராஜ குலத்தினரைப் பழிக்குப் பழி வாங்குவதற்கு என் உதவியைக் கோரினார்கள். அப்போதுதான் என் அத்தையின் கதையை அறிந்திருந்த எனக்கு



இரத்தம் கொதித்துக்கொண்டிருந்தது. அவர்களுடன் சேருவதென்றே முடிவு செய்து விட்டேன். அச்சமயம் என் பெரிய அத்தையின் மனப்போக்கை அறிந்துகொண்டேன். அவள் தனக்குத் துரோகம் செய்தவனை மன்னித்தது மல்லாமல், அவனுக்கு இன்னொரு மனைவி மூலம் பிறந்த பிள்ளையைப் பல தடவை காப்பாற்றினாள் என்று அறிந்தேன். பிறகு பாண்டிய நாட்டாருடன் சேரும் எண்ணத்தை விட்டு விட்டேன். நீ சொல்கிறபடி, என் அத்தையின் அன்பு தெய்வீகமான அன்புதான். ஆனால் என் அத்தையைப் போல் நான் இருக்க மாட்டேன்..."

"பின்னே என்ன செய்வாய்!"



"என்னை எந்த இராஜகுமாரனாவது வஞ்சித்து மோசம் செய்தால் பழிக்குப் பழி வாங்குவேன். அவனையும் கொல்வேன்; அவனுடைய மனத்தை என்னிடமிருந்து அபகரித்தவளையும் கொல்லுவேன். பிறகு, நானும் கத்தியால் குத்திக்கொண்டு செத்துப் போவேன்!"

"கடவுளே! என்ன பயங்கரமான பேச்சுப் பேசுகிறாய்?"

"அமுதா! இரண்டு வருஷமாக என் மனத்திலுள்ள கொதிப்பை நீ அறிய மாட்டாய். அதனால் இப்படிச் சாத்வீக உபதேசம் செய்கிறாய்."

"உன் அத்தைக்கு இல்லாத கொதிப்பு உனக்கு என்ன வந்தது?"

"அது என் அத்தையின் சமாசாரம்; இது என் சமாசாரம்!"

"உன்னுடைய சமாசாரமா? உண்மைதானா, பூங்குழலி, நிதானித்துச் சொல்!"

"ஆம் அமுதா! என் உடம்பிலிருந்து கொஞ்சம் இரத்தத்தையும், அந்த வானதியின் உடம்பிலிருந்து கொஞ்சம் இரத்தத்தையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், ஏதாவது வித்தியாசம் இருக்குமா?"

"ஒரு வித்தியாசமும் இராது."

"அவள் எந்த விதத்திலாவது என்னை விட உயர்ந்தவளா? அறிவிலோ, அழகிலோ, ஆற்றலிலோ?"

"ஒன்றிலும் உன்னைவிட உயர்ந்தவள் அல்ல. நீ அலை கடலில் வளர்ந்தவள். அவள் அரண்மனையில் வளர்ந்தவள். நீ காட்டு மிருகங்களைக் கையினால் அடித்துக் கொல்லுவாய்; கடும் புயற் காற்றில் கடலில் ஓடம் செலுத்துவாய்; கடலில் கை சளைத்துத் தத்தளிக்கிறவர்களைக் காப்பாற்றுவாய்! வானதியோ கடல் அலையைக் கண்டு பயப்படுவாள்; வீட்டு பூனையைக் கண்டு பீதி கொண்டு அலறுவாள்; ஏதாவது கெட்ட செய்தி கேட்டால் மூர்ச்சையடைந்து விழுவாள்!"

"அப்படியிருக்கும்போது இளைய பிராட்டி என்னைத் துச்சமாகக் கருதக் காரணம் என்ன? வானதியைச் சீராட்டித் தாலாட்டுவதின் காரணம் என்ன?"

"பூங்குழலி! இளையபிராட்டியின் மீது நீ வீண் பழி சொல்கிறாய். அவருக்கு வானதி நெடுநாளைய தோழி. உன்னை இப்போதுதான் இளைய பிராட்டிக்குத் தெரியும். இளவரசரைக் கடலிலிருந்து காப்பாற்றி இங்கே கொண்டு வந்து சேர்த்ததற்காக உனக்கு எவ்வளவோ அவர் நன்றி செலுத்தவில்லையா?"

"ஆ! அந்த அரண்மனைச் சிமாட்டியின் நன்றி இங்கே யாருக்கு வேணும்? அவளே வைத்துக் கொள்ளட்டும். அமுதா! இளவரசரைப் படகில் ஏற்றிக் கொண்டு திரும்பப் புத்த விஹாரத்துக்குப் போக வேண்டுமாயிருந்தால், நீ மட்டும் படகைச் செலுத்திக் கொண்டு போ! நான் வந்தால், ஒருவேளை வேண்டுமென்று படகைக் கவிழ்த்தாலும் கவிழ்த்து விடுவேன்..."

"ஒருநாளும் நீ அப்படிச் செய்ய மாட்டாய், பூங்குழலி! இளவரசர் என்ன குற்றம் செய்தார், அவர் ஏறியுள்ள படகை நீ கவிழ்ப்பதற்கு?"

"அமுதா! எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. என் சித்தம் என் சுவாதீனத்தில் இல்லை. என் அத்தைக்கு இவர் தந்தை செய்த துரோகத்தை நினைத்துப் படகைக் கவிழ்த்தாலும் கவிழ்த்து விடுவேன். நீயே படகை விட்டுக் கொண்டு போ!"

"அப்படியே ஆகட்டும்; நானே இளவரசரைக் கொண்டு போய் விட்டு வருகிறேன். நீ என்ன செய்வாய்?"

"நான் வானதியைப் பின் தொடர்ந்து சென்று, அவள் தலையில் ஒரு கல்லைத் தூக்கிப் போடுவேன்!"

இவ்விதம் கூறிக் கொண்டே பூங்குழலி குனிந்து கால்வாயின் கரையில் கிடந்த ஒரு கூழாங்கல்லை எடுத்தாள். அச் சமயம் கால்வாயின் கரையில் இருந்த அடர்த்தியான தென்னந் தோப்புக்குள்ளிருந்து கம்பீரமான ராஜ ரிஷபம் ஒன்று வெளியேறி வந்தது. அதைப் பார்த்த பூங்குழலி தன் கோபத்தை அக்காளையின் மேல் காட்ட எண்ணிக் கூழாங்கல்லை அதன் பேரில் விட்டெறிந்தாள்.

அந்தக் கூழாங்கல், ரிஷபராஜனின் மண்டை மீது விழுந்தது.

காளை ஒருதடவை உடம்பைச் சிலிர்த்துக்கொண்டது. கல் வந்த திசையை உற்றுப் பார்த்தது.

''ஐயோ! பூங்குழலி! இது என்ன காரியம்? மாட்டின் மீது கல்லை விட்டெறியலாமா?'' என்றான் அமுதன்.

''எறிந்தால் என்ன?''

''வாயில்லாத ஜீவன் ஆயிற்றே! அதற்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தெரியாதே?''

''என் குலத்தில் வாயில்லாத ஊமைப் பெண் ஒருத்தி இருந்தாள்! அவளுடைய மனத்தைப் புண்படுத்தியவர்களை என்ன செய்வது? அவள் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடியாமையால்தானே, அவளை அரசகுமாரன் ஒருவன் வஞ்சித்து அவளுடைய வாழ்க்கையைப் பாழாக்கினான்?''

''உன் அத்தைக்கு யாரோ செய்த அநீதிக்கு இந்த மாடு என்ன செய்யும்?"

''இந்த மாடு அப்படியொன்றும் நிராதரவான பிராணி அல்ல. இதற்குக் கூரிய கொம்புகள் இருக்கின்றன. தன்னைத் தாக்க வருகிறவர்களை இது முட்டித் தள்ளலாம். காது கேளாத, பேச முடியாத, உலகமறியாத ஏழைப் பெண்ணால் என்ன செய்ய முடியும்? என்னிடம் அப்படி ஒரு ராஜகுமாரன் நடந்து கொண்டால் நான் அவனை இலேசில் விட மாட்டேன்!''

"இலேசில் விட மாட்டாய்! காளை மாட்டின் மேல் கல்லை எடுத்தெறிவாய்! அதுவும் கால்வாயில் படகில் இருந்துகொண்டு! மாடு உன்கிட்டே வந்து உன்னை முட்ட முடியாதல்லவா?''

''என்னை முட்ட முடியாவிட்டால் வேறு யாரையாவது அந்தக் காளை முட்டித் தள்ளட்டுமே?''

''உனக்கு யார் மேலோ உள்ள கோபத்தை இந்தக் காளையின் பேரில் காட்டியது போல்





அல்லவா?"

இவர்களுடைய சம்பாஷணையை என்னவோ அந்த ரிஷபத்தினால் அறிந்து கொள்ள



முடியவில்லை. ஆனால், பூங்குழலி கூறியதுபோலவே கிட்டத்தட்ட அது செய்து விட்டது.

கால்வாயில் இறங்கிப் படகிலிருந்த பூங்குழலியின் மீது அது தன் கோபத்தைக் காட்ட முடியவில்லை. திரும்பித் துள்ளிக் குதித்துக் கொண்டு சென்றது. அச்சமயம் வானதி தென்னந்தோப்பின் மறுபுறத்தில் இருந்த பல்லக்கை நோக்கித் தனியாகப் போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் குதூகலத்தினால் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது. எதிரில் துள்ளிக் குதித்துக் கொண்டு வந்த ரிஷப ராஜனைப் பார்த்தும் முதலில் அவள் குதூகலம் அதிமாயிற்று; ஆனால் ரிஷப ராஜன் தலையைக் குனிந்து கொண்டு கொம்பை நீட்டிக்கொண்டு வாலைத் தூக்கிக் கொண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் பயந்து போனாள். கால்வாய்க் கரையை நோக்கித் திரும்பி ஓடி வருவதைத் தவிர வேறு வழியில்லை. நந்தி மண்டபத்துக்கு வெகு சமீபத்தில் கால்வாய்க் கரைக்கு அவள் வந்து விட்டாள். அப்புறம் மேலே செல்ல முடியவில்லை. ஏனெனில், கரையிலிருந்து கால்வாய் ஒரே கிடுகிடு பள்ளமாயிருந்தது. கரையோரமாக நந்தி மண்டபத்துக்கு வரலாம் என்று திரும்பினாள். அச் சமயம் ரிஷபம் அவளுக்கு வெகு சமீபத்தில் வந்திருந்தது. பின்புறமாக நகர்ந்து கால்வாயில் விழுவதைத் தவிர வேறு மார்க்கம் ஒன்றும் இல்லை. அப்போதுதான் "ஐயோ! ஐயோ! அக்கா! அக்கா!" என்று அவள் கத்தினாள்.

வானதியின் அந்த அபயக் குரல்தான் பொன்னியின் செல்வன், குந்தவை இவர்களின் காதில் வந்து விழுந்தது.

வானதியின் அபயக் குரல் வந்த திசையைப் பொன்னியின் செல்வனும் குந்தவையும் திடுக்கிட்டு நோக்கினார்கள். அவர்கள் இருந்த நந்தி மண்டபத்துக்குச் சற்றுத் தூரத்தில், கால்வாயின் உயரமான கரையில் வானதி தோன்றினாள். கால்வாயின் பக்கம் அவள் முதுகு இருந்தது. அவள் தனக்கு எதிரே ஏதோ ஒரு பயங்கரமான பொருளைப் பார்ப்பவள் போலக் காணப்பட்டாள். அவளை அவ்விதம் பயங்கரப்படுத்தியது என்னவென்பது மறுகணமே தெரிந்துவிட்டது. "அம்ம்ம்மமா!" என்ற கம்பீரமான குரல் கொடுத்துக் கொண்டு, அவளுக்கு எதிரே ரிஷபராஜன் தோன்றினான்.

இன்னும் ஓர் அடி வானதி பின்னால் எடுத்து வைத்தால் அவள் கால்வாயில் விழ வேண்டியதுதான். பின்னால் நகருவதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் இல்லை. இதையெல்லாம் அருள்மொழி வர்மன் பார்த்த தட்சணமே அறிந்து கொண்டான். உடனே நந்தி மண்டபத்தின் படிக்கட்டிலிருந்து கால்வாயில் குதித்து மின்னலைப் போல் பாய்ந்து ஓடினான். வானதி கால்வாயின் கரையிலிருந்து விழுவதற்கும் அருள்மொழி வர்மன் கீழே ஓடிப் போய்ச் சேர்வதற்கும் சரியாக இருந்தது. கால்வாயின் தண்ணீரில் வானதி தலைகுப்புற விழுந்துவிடாமல் இரு கரங்களாலும் அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான்.

வானதிக்கு நேர்வதற்கு இருந்த அபாயத்தை அறிந்து ஒருகணம் குந்தவை உள்ளம் பதைத்துத் துடிதுடித்தாள். மறுகணம் அருள்மொழிவர்மன் அவளைத் தாங்கிக் கொண்டதைப் பார்த்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள்.

வேலும் வாளும் வீசி வஜ்ராயுதம் போல் வலுப் பெற்றிருந்த கைகளில் துவண்ட கொடியைப் போல் கிடந்த வானதியைத் தூக்கிக் கொண்டு அருள்மொழிவர்மன் குந்தவையின் அருகில் வந்தான்.

"அக்கா! இதோ உன் தோழியை வாங்கிக் கொள்! கொடும்பாளூர் வீர வேளிர் குலத்தில் இந்தப் பெண் எப்படித்தான் பிறந்தாளோ, தெரியவில்லை!" என்றான்.

"தம்பி! இது என்ன காரியம் செய்தாய்? கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்ணை நீ எப்படிக் கையினால் தொடலாம்?" என்றாள் குந்தவை.

"கடவுளே! அது ஒரு குற்றமா? பின்னே, இவள் தண்ணீரில் தலைகீழாக விழுந்து முழுகியிருக்க வேண்டும் என்

கிறாயா? நல்லவேளை! இவளை நான் தாங்கிப் பிடித்தது இவளுக்குத் தெரியாது. விழும்போதே மூர்ச்சையாகி விட்டாள்! இந்தா, பிடித்துக்கொள்!'' என்றான் அருள்மொழி வர்மன்.

வானதி கலகலவென்று சிரித்தாள். சிரித்துக்கொண்டே அவன் கரங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு தரையில் குதித்தாள்.

"அடி கள்ளி! நீ நல்ல நினைவோடு தான் இருந்தாயா?" என்றாள் குந்தவை.

"கண்ணை மூடிக்கொண்டு மூர்ச்சை யடைந்தது போல் ஏன் பாசாங்கு செய்தாள் என்று கேள், அக்கா!'' என்றான் பொன்னியின் செல்வன்.

''நான் ஒன்றும் பாசாங்கு செய்ய வில்லை, அக்கா! இவர் என்னைத் தொட்டதும் எனக்குக் கூச்சமாய்ப் போய் விட்டது. வெட்கம் தாங்காமல் கண்களை மூடிக்கொண்டேன்!''

''அது எனக்கு எப்படித் தெரியும்? மூர்ச்சை போட்டு விழுவது உன் தோழிக்கு வழக்கமாயிற்றே என்று பார்த்தேன்!''

"இனிமேல் நான் மூர்ச்சை போட்டும் விழ மாட்டேன்; அப்படி விழுந்தாலும் இவர் இருக்குமிடத்தில் விழ மாட்டேன், அக்கா! இன்று இவருக்கு நான் செய்த உதவியை மட்டும் இவர் என்றைக்கும் மறவாமலிருக்கட்டும்!" என்றாள் வானதி.

"என்ன? என்ன? இவள் எனக்கு உதவி செய்தாளா? அழகாயிருக்கிறதே!" என்றான் அருள்மொழிவர்மன்.

குந்தவையும் சிறிது திகைப்புடன் வானதியை நோக்கி, "என்னடி சொல்கிறாய்? என் தம்பி உனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன் என்று சொல்கிறாயா?" என்றாள்.

"இல்லவே இல்லை, அக்கா! நான் தான் உங்கள் தம்பிக்குப் பெரிய உதவி செய்தேன். இவர் அதற்காக என்னிடம் என்றைக்கும் நன்றி செலுத்தியே தீர வேண்டும்!"

"நான் இவளைக் கால்வாயில் விழாமல் காப்பாற்றியதற்காக இவளுக்கு நான் நன்றி செலுத்த வேண்டுமா? உன் தோழிக்கு ஏதாவது சித்தக் கோளாறு உண்டா, அக்கா!'' என்றான் பொன்னியின் செல்வன்.

"என் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது. இவருக்குத்தான் மனம் குழம்பியிருக்கிறது. புரியும்படி சொல்லுகிறேன். இவர் சிறு வயதில் ஒரு சமயம் காவேரியில் விழுந்தார் என்றும் ஒரு பெண் இவரை எடுத்துக் காப்பாற்றினார் என்றும் சொன்னீர்கள். மறுபடி இவர் கடலில் விழுந்து தத்தளித்தார். அங்கேயும் ஒரு ஓடக்காரப் பெண் வந்து இவரைக் காப்பாற்றினாள். இப்படிப் பெண்களால் காப்பாற்றப்படுவதே இவருக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. அந்த அபகீர்த்தி மறைவதற்கு நான் இவருக்கு உதவி செய்தேன். கால்வாயில் விழப் போன ஒரு பெண்ணை இவர் தடுத்துக் காப்பாற்றினார் என்ற புகழை அளித்தேன் அல்லவா? அதற்காக இவர் என்னிடம் நன்றி செலுத்த வேண்டாமா?"

இவ்விதம் கூறிவிட்டு வானதி சிரித்தாள். அதைக் கேட்ட குந்தவையும் சிரித்தாள். பொன்னியின் செல்வனும் சிரிப்பை அடக்கப் பார்த்து முடியாமல் குபீர் என்று வாய்விட்டுச் சிரித்தான்.

அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து சிரித்த சிரிப்பின் ஒலி நந்தி மண்டபத்தைக் கடந்து, வான முகடு வரையில் சென்று எதிரொலி செய்தது.

படகில் இருந்தவர்களின் காதிலும் அந்தச் சிரிப்பின் ஒலி கேட்டது. "அமுதா! அந்த மூன்று பைத்தியங்களும் சிரிப்பதைக் கேட்டாயா?'' என்று சொல்லிவிட்டுப் பூங்குழலியும் சிரித்தாள். அமுதனும் அவளுடன்கூடச் சிரித்தான்.

தென்னந் தோப்பில் வாசம் செய்த பட்சிகள் 'கக்கிளு, கிக்கிளு' என்று ஒலி செய்து சிரித்தன.

இத்தனை நேரமும் கால்வாயின் கரை மீது கம்பீரமாய் நின்ற காளையும் ஒரு ஹூங்காரம் செய்து சிரித்து விட்டுச் சென்றது.

கடல் அலைகள் கம்பீரமாகச் சிரித்தன.

கடலிலிருந்து வந்த குளிர்ந்த காற்றும் மிருதுவான குரலில் சிரித்து மகிழ்ந்தது.

(தொடரும்)

(பொன்னியின் செல்வன் மூன்றாம் பாகம் முற்றியது.)

போட்டிக் கதை — 10

"நாளக்கி நானு எங்கப்பா காட்ல போய் சக்கரப் பொங்கல் சாப்புடுவனே."

முகம் பூரிக்க, விழிகள் விரிய மகா உற்சாகத்துடன் சொன்னாள் எட்டு வயது சொர்ணம். அதைக் கேட்ட ராக்கம்மாளுக்கு மனத்தில் ஏக்கம் பீறிட்டது. சக்கரைப் பொங்கல் சாப்புட்டு எம்புட்டு நாளாச்சு. அவ அய்யா இருக்கையில சாப்புட்டது. சக்கரைப் பொங்கல்னா அதுல பாசிப் பருப்பு இருக்கும், டால்டா மணக்கும், முந்திரிப் பருப்பு வெல்லம் எல்லாம் இருக்குமே.

சக்கரைப் பொங்கல அம்மா போட்டு வச்சா, அதக் கிளச்சுக் கிளச்சு, இருக்கற முந்திரிப் பருப்பெல்லாம் பொறுக்கித் திங்கலாம். அப்புறம்தாம் பொங்கல். நெறைய வெல்லம் போட்டா எப்படி இனிக்கும்! வாயில் நிறைந்த எச்சிலைத் தொண்டைக்குள் இறக்கிக் கொண்ட ராக்கம்மாளுக்கும் அதே வயது.

"நீயும் வர்றியா?" சொர்ணம் சிநேகித பூர்வமாகக் கேட்டாள்.

"வந்தா எனக்கும் கெடைக்குமா?" கண்களில் ஏக்கம் பொங்க ராக்கம்மா கேட்டாள்.

"எங்கூடவே வந்துரு. நாளக்கிக் காலையில வெள்ளணமா எந்துருச்சு, குளிச்சு, சடை பின்னி, பூ வச்சுக்கிட்டு எங்க வீட்டுக்கு வா. டக்கர் வண்டி வரும். அதுல எல்லாரும் போவோம். எங்கூட வந்தா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க."

"எங்கம்மா பூ வாங்கத் துட்டுக் குடுக்க மாட்டாளே!" ராக்கம்மா சிணுங்கினாள்.

"சரி எங்க வீட்டுக்கு வா, நான் தாரேன். சரிதானே?"

"சரி" ராக்கம்மாளின் வாயில் இப்போதே இனிப்புத் தட்டியது.

கிருஷ்ணமராஜாவின் ஆட்கள் தோட்டத்திற்கு வந்தபோது, இருளும் பகலும் கைகோத்திருந்தன. வயலும் வரப்பும் பனியால் குளிப்பாட்டப்பட்டு சொதசொத வென்று இருந்தன. அந்த அதிகாலை நேரத்திலும் காடுகளில் ஆண்களும் பெண்களும் வேலை செய்து கொண்டுதானிருந்தார்கள்.

எங்கும் பச்சை! எதிலும் பச்சை! நெல் வயல்கள், கரும்புத் தோட்டங்கள், வாழைத் தோட்டங்கள், மா பலாத் தோப்புகள், தென்னந்தோப்புகள், பருத்திக் காடுகள், வித விதமான மூலிகை வகைகள், புஞ்சைப்



சிறு சாவு

பயிர்கள் என்று ஒன்றைத் தொட்டு ஒன்றாய், படர்ந்து விரிந்து பச்சைக் கடலாய் பார்ப்பவர் மனத்தைப் பரவசப் படுத்தும் பூமி இது- கங்காருக்குட்டி போல் மேற்குத் தொடர்ச்சி மலையின் வயிற்றுப் பகுதியில் அமைந்திருக்கும் செழிப்பான பூமி.

கிருஷ்ணமராஜாவின் தோட்டத்தில் இன்று பொங்கல் வைத்து, பூசை போட்டு கரும்பு வெட்டப் போகிறார்கள். அவரை எதிர்பார்த்துத்தான் தோட்டக்காரன் கருப்பையாவின் தலைமையில் ஆண்களும் பெண்களுமாய் ஓர் ஐம்பது பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் குளித்து, பளிச்சென்று உடை உடுத்தி தலைசீவி திருவிழாவுக்கு வந்தது போல் வந்திருக்கிறார்கள்.

'தடதட' என்று மோட்டார் சைக்கிள் உறுமி வரும் ஓசை கேட்டது. கிருஷ்ணமராஜா வந்து விட்டார். அவர் வந்ததும் எல்லோரும் எழுந்து கொண்டார்கள். இராஜ பாளையத்து ராஜாக்களுக்கே உரிய உயரமான, கம்பீரமான, சிவந்த தோற்றம். நெற்றியில் குங்குமப் பொட்டு, வெள்ளை வெளேர் என்று அரைக்கைச் சட்டை, தும்பைப் பூ போன்ற வேட்டியின் ஒரு பகுதி ரோஜா நிறத்தில் இருந்தது. கூர்மையான மூக்கு, தீட்சண்யமாய் யாரையும் எதையும் ஊடுருவிப் பார்க்கும் கண்கள். அடர்த்தியான நீண்ட பெரிய மீசை, அறுபது வயதுக்கும் குறைவுதான்.

மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கியவர் எதிரில் இருப்பவர்களின் மீது ஒரு பார்வையைப் படரவிட்டார்.

''என்ன வெட்டுக்காரா! ஆரம்பிக்கலாமா? ராகு காலம் வர்றதுக்கு முந்தி பூசை முடியணும்!''

''எல்லாம் ரெடிங்க ராசா. உங்களுக்காகத்தான் காத்துக் கிட்டு இருக்கோம்.''

''சரி, போவோம்!'' கிருஷ்ணமராஜா தோட்டத்து மூலையை நோக்கி நடக்க, அவருக்குப் பின்னால் கருப்பையாவும், அவனைத்



ஓம்காரநாத்

தொடர்ந்து மற்றவர்களும் நடந்தார்கள்.

கிருஷ்ணமராஜாவின் காலடித் தாளத்திற்கு ஏற்ப, அவருடைய தொந்தி நடனமாடியது.

பூசை முடிந்து எல்லோருக்கும் இலை போடப்பட்டது. பொங்கல் சாப்பிடுவதற்காக பக்கத்துக் காடுகளில் வேலை செய்து கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் கிருஷ்ணமராஜாவின் தோட்டத்திற்கு வந்து பந்தியில் அமர்ந்தார்கள். கை மணக்க, மனம் இனிக்க, வந்திருந்தவர்கள் அத்தனை பேருக்கும் சரியான விருந்து.

ராக்கம்மாளின் முகம் வாடிப் போயிருந்தது. எதையோ பறிகொடுத்தவள் போல்



" பெயில் ஆனதுக்காகவா பையனை இப்படி அடிக்கறீங்க?''

''அது கூட பரவால்லீங்க. வாத்தியாரான என்னைப் பார்த்து, ''ஏமாத்திப்புட்டீங்களே அய்யா, ஏமாத்திப்புட்டீங்களே' அப்படினு பாட்டுப் பாடறான்!''

– சென்னிமலை சி.பி. செந்தில் குமார்

பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தாள். கண்களில் சோகம் கூடு கட்டிக் கொண்டிருந்தது. ஆரம்பத்திலிருந்த குதூகலமோ குறுஞ்சிரிப்போ இப்போது இல்லை.

"என்ன ராக்கு! ஏன் உம்முன்னு இருக்கிற? வீட்டுக்குப் போணுமா?" சொர்ணம் ஆதங்கத்துடன் கேட்டாள். ராக்கம்மாள் இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினாள்.

"பெறவு என்ன? பொங்கல் இன்னும் வேணுமா?"

அதற்கும் தலையாட்டினாள். மௌனம் ராக்கம்மாளின் மொழியாக இருந்தது.

"வேணுமுன்னா சொல்லு. எங்கப்பாட்டச் சொல்லி வாங்கித் தாரேன்."

வந்திருந்தவர்கள் எல்லோரும் வீட்டுக்குக் கிளம்ப ஆயத்தமானார்கள். கருப்பையா மட்டும் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து பரபரப்புடன் எதையோ தேடிக் கொண்டிருந்தான். அதைக் கவனித்தார் கிருஷ்ணமராஜா.

"என்ன கருப்பையா! என்ன தேடுறே? சொல்லிக்கிட்டுத் தேடு, நாங்களும் தேடுறோம்."

"அருவாளக் காணும் ராசா. செல்லையா ஆசாரிகிட்ட அடிச்சு வாங்கி, செம்மையா ஒரு மாசம் ஆகல. புது அருவா, அதக் காணும்."

"தேங்கா உடைக்கையில கையில வச்சுருந்தியே. அத வச்சுத்தான கரும்பு வெட்டுன?"

"ஆமா ராசா, இப்பக் காங்கல. அருவா அடிச்ச கூலி கூட நேத்துத்தான் குடுத்தேன்!" கருப்பையா பதைபதைப்புடன் சொன்னான்.

"இங்க யாரும் அசையக் கூடாது. கருப்பையாவோட அருவாளக் காணுமாம். அது அவன் கைக்குப் போறவரைக்கும் யாரும் நகரக் கூடாது." கிருஷ்ணமராஜா உத்தரவே போட்டு விட்டார்.

எல்லோரும் தேட ஆரம்பித்தார்கள் கரும்புத் தோட்டம், கிணற்று மேடை, மோட்டார் ரூம், சாமி கும்பிட்ட இடம், சாமான் சரக்கு போட்டு வைத்திருந்த இடம் என்று எல்லா இடங்களிலும் தேடினார்கள். எச்சில் இலைகள் கிடந்த இடத்திற்குப் போய்க் கூட, ஒருவர் இலைகளைக் குச்சியால் கிளறிக் கிளறிப் பார்த்தார். அரிவாள் தட்டுப்படவில்லை.

"அருவாளக் கெணத்துக்குள்ள போட்டுட்டு, வெளிய தேடுனா எப்படி? பொன்னன் பொடதியில ஆட்டுக்குட்டிய போட்டுக்கிட்டு, ஆடு எங்க, ஆடு எங்கன்னு தேடுன மாதிரி."

கிணற்று மேடைப் பக்கம் வந்த காந்தி கோபால் போட்ட சப்தத்தைக் கேட்டு, அத்தனை பேரும் ஓடிப் போய் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தார்கள். ராக்கம்மாள் மட்டும் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. பளிங்கு போன்ற தண்ணீர் வழியாகச் சூரிய ஒளி பாய்ந்து அந்தப் புத்தம் புதிய அரிவாள் தகதகவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அரிவாள் கைக்கு வந்து விட்டாலும், கிருஷ்ணமராஜா விடவில்லை.

"எனக்கு ஒரு விஷயம் தெரிஞ்சாகணும். அதுவா எப்படி கெணத்துக்குள்ளே போச்சு? இது யார் செஞ்ச வேலை?"

எல்லாரும் மௌனமாக இருந்தார்கள். கிருஷ்ணமராஜா ஒருவர் விடாமல் எல்லோருடைய முகங்களையும் பார்வையால் ஊடுருவிப் பார்த்தார். ராக்கம்மாளின் மீது அவருடைய பார்வை பட்டதும் அவள் கண்களில் இருள் சூழ்ந்தது. தூண்டிலில் அகப்பட்ட மீன் போல் அவள் இதயம் பீதியால் துடித்தது. அவள் மிரண்டு மிரண்டு விழித்தாள். காலையில் தலையில் வைத்து வந்த பூ, அதற்குள் வாடிப் போயிருந்தது.

கிருஷ்ணமராஜாவுக்குப் பொறி தட்டியது. அவளை நெருங்கி, "என்ன பாப்பா, பொங்கல் சாப்பிட்டியா?" என்று விநயமாகக் கேட்டார்.

ராக்கம்மாள் தலையாட்டினாள்.

"பொங்கல் இன்னும் வேணுமா?" வாஞ்சையாகக் கேட்டு, அவள் மனத்தைக் கவர முயன்றார்.

"நீ கண்டு அருவாள கெணத்துக்குள்ள போட்டியா?"

ராக்கம்மாள் மௌனமாக இருந்தாள். அது அர்த்தமுள்ள மௌனம் என்பதை கிருஷ்ணமராஜா அறிந்தார்.

"கம்மா சொல்லு. நீ சின்னப் புள்ள. உன்னை ஒண்ணும் பண்ண மாட்டோம். நீதான போட்ட?"

உள்ளதைச் சொல்லி விடலாமா, வேண்டாமா? என்ற போராட்டம் ராக்கம்மாளின் மனத்தில் எழுந்து, அவள் தத்தளித்தாள். கெஞ்சும் பாவனையில், வார்த்தைகளில் நயத்தைக் கூட்டி, மென்மையாகச் சொன்னார் ராஜா.

"நீ நல்ல புள்ள இல்ல, சீக்கிரம் சொல்லு. வீட்டுக்குப் போக எல்லாரும் காத்துக்கிட்டு இருக்காங்க பாரு..."

"அருவாள கையில வச்சு வெளயாண்டுக்கிட்டு இருந்திருப்ப, கை தவறி கெணத்துக்குள்ள விழுந்துருச்சு. அப்படித்தானே பாப்பா?"

கிருஷ்ணமராஜாவின் வாஞ்சை நிறைந்த மென்மையான, இதயத்தை வருடும் இதமான வார்த்தைகள் ராக்கம்மாவின் மௌனத்தை உடைத்தது. "இல்ல" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கத்தினாள்.

"அப்புறம்?"

"நான்தான் அருவாள கெணத்துக்குள்ள போட்டேன்."

அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள். இந்தச் சிறுமி ஏன் இப்படிச் செய்தாள்? என்ற கேள்வி அனைவருடைய நெஞ்சங்களிலும் கொக்கி போட்டு நின்றது. அவளுடைய செய்கையில் ஏதோ ஒரு ரகசியம், காரணம் பதுங்கியிருக்கிறது என்று யூகித்த ராஜா, அவளுடைய முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தார். கலைந்து போயிருந்த அவளுடைய தலையை சரிசெய்தார். "சின்னப் புள்ளே, பாவம்" என்றார்.

"உன் பேரு என்ன?"

"ராக்கம்மா" - கிருஷ்ணமராஜாவின் காதுகளுக்கு மட்டுமே கேட்கும்விதத்தில் சொன்னாள்.

"ஆமா ராக்கம்மா! ஏன் அப்படிச் செஞ்ச?"

எப்போதோ நடந்து முடிந்த மோசமான ஒரு சம்பவம், பாம்பாகப் படம் எடுத்து



"டெல்லி போறப்ப நம்ம தலைவர் ரொம்பக் கண் கலங்கிட்டாராமே?"
"தொகுதி மக்களை இனிமே எப்ப பார்க்கப் போறோம்னுதான்!"
– குடந்தை கே.ஆர். ரவிக்குமார்

அவளுடைய மனத்திரையில் நிழலாடியது போலும். சிறகுகள் பறிக்கப்பட்ட வண்ணத்துப் பூச்சியைப் போல் அவள் மனம் மறுகினாள். அவள் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உருண்டோடி வந்தன. அவள் உடல் நடுங்கியது, நெஞ்சு விம்மியது.

இனிமேலும் தாங்காது என்ற மன நிலைக்கு வந்ததும், உடைப்பெடுத்த குரலில், வாய் கோண, அவள் வார்த்தைகளை விழுங்கி விழுங்கிச் சொன்னாள்.

"அருவாளைப் பார்த்ததும் எனக்குப் பயம் வந்துருச்சு. சாதிக் கலவரத்துல, இந்த மாதிரி அருவாள வச்சுத்தான் எங்கப் பாவையும், அண்ணனையும் வெட்டிக் கொன்னாங்க. அதுனாலதான்..."

அவளுக்குத் தொண்டை அடைத்தது. ●

வரம்

"**மா**தாஜி ஆசிரமத்துக்கு வந்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு விசேஷ பூஜையும், பஜனைப் பாடல்களும் இருக்கும்."

"அதனால்?"

"முகுந்த மேனன்தான் மாதாஜியை இங்கே கூட்டிக் கொண்டு வந்தாராம். அவருடைய குழந்தைக்கு முதன் முதலாகச் சாப்பாடு ஊட்டிவிடும்போது மாதாஜி இருக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தாராம். முகுந்த மேனனுக்கு 45 வயது. அவர் மனைவிக்கு 40 வயது. இந்த வயதில் முதல் குழந்தை! அதுதான் சொல்கிறேன், மாதாஜி நினைத்தால் எதுவும் நடக்கும்."

"உனக்கும் மாதாஜியைப் பார்த்து வரம் கேட்க வேண்டும். அப்படித்தானே? நீயும் அம்மா ஆக வேண்டும் இல்லையா? நான் எத்தனையோ மாதாஜிக்களைப் பார்த்தாயிற்று என் அருமை மனைவியே!" என்றான் அவன். எத்தனை டாக்டர்களைப் போய்ப் பார்த்தாயிற்று! அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை; கொடூரமாக இருக்கும். அவள் அழத் தொடங்குவாள். அவனும் அழக்கூடும். இந்தப் பதினைந்து வருட தாம்பத்தியத்தில், அவர்களுக்குக் குழந்தை ஏதும் இல்லை. அவர்கள் எடுத்துக் கொண்ட மருத்துவப் பரிசோதனைகள் எல்லாமே தோல்வியில்தான் முடிந்தன. அவளுக்கு இருந்த கடைசி நம்பிக்கை - எல்லா புண்ணியத் தலங்களுக்கும் போய்க் காணிக்கை செலுத்தி, கடவுளை வேண்டுவது. ஆனால் அவனுக்கு ஏனோ அதில் எல்



லாம் கொஞ்சமும் நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் நம்பிக்கை இருக்கும் விஷயங்களில் மட்டும்தானா நாம் செயல்படுகிறோம்?... மாதாஜியின் ஆசியில் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது என்றால் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும். அட, அப்படி நடக்கவில்லை என்றாலும் கூட அவன் வருத்தப்படப் போவதில்லை!

"சரி, நாம் போவோம். மாதாஜியும் ஒரு மனுஷிதானே? என் அம்மா வயசு இருக்காதா? அதுவுமில்லாமல் என் தாயாரும் இப்போது இல்லை. வா, போவோம்... ஆனால் ஒன்று. நான் குனிந்து மாதாஜியின் பாதங்களைத் தொட மாட்டேன். வரம் எதுவும் கேட்கவும் மாட்டேன். உன் கூடத் துணையாகத்தான் வருவேன். சரிதானா?"

அவளைச் சந்தோஷப்படுத்த அது போதுமானதாக இருந்தது. அந்த ஆசிரமத்தில் அப்படி என்னதான் செய்கிறார்கள் என்று பார்த்து விடவும் அவனுக்கு உள்ளூர ஆசை இருந்தது. ஆசிரமம் அந்த நகரில் பிரபலமான இடங்களில் ஒன்று. யோகினி மாதாவுக்கு ஏராளமான பக்தர்கள். பலரும் உயர் பதவி வகிக்கிறவர்கள். பனாரஸ் பட்டிலும் சின்தடிக் பளபளப்பிலும் சுற்றிக் கொண்ட தங்கள் தேகங்களை மாதாஜியின் காலடியில் கிடத்தி, தங்கள் மன உளைச்சல்களைப் போக்கிக் கொள்ளக் காத்திருந்தார்கள். சிலருக்குக் குழந்தை வேண்டும். இன்னும் சிலருக்குப் பதவி உயர்வு வேண்டும். வேறு சிலருக்கோ, குடும்பப் பிரச்னைகள் தீர வேண்டும்! இன்னும் சிலர், இங்கே என்னதான் நடக்கிறது என்று வேடிக்கை பார்க்க வந்திருந்தார்கள். ஆனால் அதிகம் பேர் மாதாஜியை ஜகன்மாதாவாக நினைத்து அவரைத் தரிசிக்க வந்திருந்தார்கள். அவர்களுடைய நம்பிக்கை அவனை உலுக்கவே செய்தது, அது முட்டாள்தனமாக இருந்தபோதும்.

ஆசிரமும் அதைச் சுற்றிய பகுதிகளும் அலங்காரமாய் இருந்தன. மண்டபம் முழுக்க ஒளி விளக்குகள். உயரமான மேடை மீது மாதாஜியின் பெரிய படத்தை வைத்து, மாலை போட்டு, பூக்களைச் சொரிந்திருந்தார்கள். பக்கத்தில் இருந்த குத்துவிளக்கு



ஜுவாலை பிரகாசமாய் இருந்தது. கற்பூர, ஊதுவத்தி வாசனை மணத்தது.

மாதாஜி தியானம் செய்கிற மாதிரி உட்கார்ந்திருந்தார். பளபளப்பான பட்டுச் சேலை. கழுத்தில் பவழ மாலை. யோகாசன பாணியில், பத்மாசனம் போட்டு அமர்ந்து, கைகளைத் தொடை மீது வைத்திருந்தார். விளக்கு ஒளியில் அவரை அப்போது பார்ப்பவர்கள், அவர் தேவி சொரூபமாக நினைத்தால் அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. அவரிடமிருந்து வெளிப்பட்ட ஒளியில் அந்த மண்டபமே

லலிதாம்பிகா அந்தர்ஜனம்

பிரகாசமாய் இருந்தது. பக்தர்கள் அவர் மீது பூக்களை வாரி வீசிக் கொண்டே இருந் தார்கள்.

லலிதா சகஸ்ரநாமம் அந்த மண்டபம் முழுதும் கேட்டவண்ணமாய் இருந்தது.

சுமாவும் பக்தர்களின் கூட்டத்தோடு சேர்ந்து, கண்களை மூடி, ஒன்றிப் போனாள். எல்லாருமே ஏதோ மயக்கவசப்பட்டவர்கள் மாதிரி இருந்தார்கள். அவனால் மாதாஜி மீது வைத்த கண்களை எடுக்க முடிய வில்லை. ஆனால் எதற்காக இப்படி அவ ரைப் பார்க்கிறோம் என்றும் புரியவில்லை. இப்படிப் பல்லாயிரக்கணக்கானவர்கள் வணங்கும் இந்த மாதாஜிக்கு எத்தனை வயது இருக்கும்? 50? 60? ஒருவேளை 45 ஆகக் கூட இருக்கலாம். கூடி இருக்கிற பக்தர்களின் பரவச உணர்ச்சியை அப் படியே தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த மாதிரி இருந்தார்.

அவனுக்கு ஏனோ உலகின் இரண்டு பிரதம மந்திரிகளின் நினைவு வந்தது. ஏராளமான அதிகாரங்களைக் கொண்ட இன்னொரு பெண்மணியை மாதாஜி நினைவுபடுத்துகிறாரோ?... என்னதான் இருந் தாலும், தான் மாதாஜியின் விசேஷ சக்தியில் மயங்கிப் போய்விடக்கூடியவன் அல்ல என்று நினைத்துக் கொண்டான்.

பக்கத்திலிருந்து குரல்கள் வலுத்தன. மாதாஜி தியானத்தை முடித்துவிட்டு, கண் களைத் திறந்து கொண்டிருந்தார். தம்மை மறந்த நிலையில், பூக்களை எடுத்துத் தம் தலை மீது போட்டுக் கொண்டார்.

''ஜெய மாதா, ஜெய மாதா'' என்று பக்தர்கள் பரவசத்துடன் கூவினார்கள்.

பூக்கள் மழை மாதிரி பொழிய, பக்தர் களின் பிரார்த்தனை சுலோகங்கள் வேகம் பெற்று ஒலித்தன. மெல்ல மாதாஜி எழுந்து

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

''தேர்தல்லதான் கடுமையா தோத்துட் டோமே, அப்புறம் எதுக்கு தலைவரு நிதி வசூல் பண்ணுறாரு?''

'' 'டெபாஸிட் நிவாரண நிதி'ன்னு வசூல் பண்ணிக்கிட்டு இருக்காரு!''

– பட்டுக்கோட்டை ராதாகிருஷ்ணன்



கொண்டார். ஒரு தேர்ந்த நடனமணி போல, வலது கரத்தை உயர்த்தி, ''ஸ்வஸ்திக் பவது... ஸ்வஸ்தி... ஸ்வஸ்தி! உங்கள் எல்லாருக்கும் நல்லவை எல்லாம் நடக்கட்டும்!'' என்றார்.

எல்லா பக்தர்களின் தலை மீதும் கைவைத்து ஆசி கூறினார். மலர்களைக் கொடுத்தார். அவர் கண்களில் வெளிப் பட்ட கருணை இதமாக இருந்தது, வருடுவது போல. மேடையிலிருந்து இறங்கிக் கீழே வந்தார். எல்லாரும் மண்டியிட்டு வணங்க, தான் மட்டுமே அப்படிச் செய்யாது இருப் பதாக அவனுக்குத் தோன்றிற்று. மாதாஜி தன்னை நோக்கித்தான் வருகிறாரா? நம்பிக்கை இல்லாத தன்னை நோக்கியா? உண்மையிலேயே மாதாஜி தேவிமாதாவாக இருப்பாளோ?

மாதாஜி அவன் கரங்களில் மலர்களைக் கொடுத்து விட்டு, குனிந்து, ''மகனே!'' என்றார்.

அவன் அவரைப் பார்த்தான். அந்தக் கண்கள், அந்தக் குரல், அவரிடமிருந்து வெளிப்பட்ட பளீரென்ற பிரகாசம்! வலது மூக்குத்தியிலிருந்து ஒளி வருகிறதா, இல்லை அந்த விழிகளின் பிரகாசமா? கண்களைக் கூச வைக்கிறதே! அவனுக்கு முகமெல்லாம் வெளுத்து, கை கால்கள் தளர்ந்து போவது மாதிரி இருந்தது. யார் இது? யார் மாதிரி இருக்கிறார் மாதாஜி? அவனுக்கு ஏனோ அவரை 'மீனா மாமி' என்று கூப்பிட்டு அவர் கழுத்தைக் கட்டி அணைக்க வேண் டும் போல் இருந்தது. எப்படிப்பட்ட ஒற் றுமை! மீனா மாமி! இப்போது எங்கே இருக் கிறீர்கள்? நீங்கள்தான் யோகினி மாதாவா? என்னால் நம்பவே முடியவில்லையே!

மாதாஜி அவன் தலையைச் சுற்றி ஒரு பிடி பூக்களை அவன் மீது பொழிந்துவிட்டு, அழுத்தமாகத் தன் கரத்தை அவன் தலை மீது வைத்தார். ''மகனே, நான் உன் அம்மா. உன் ஆசைகளும், விருப்பங்களும் பூர்த்தி ஆகட்டும். உனக்கு நம்பிக்கையும், வளமும் பெருகட்டும்!'' என்றார். அவனுள் திடீ ரென்று ஒரு புதிய உற்சாகமும் சந்தோஷமும் பரவி, அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

அவன் கண்கள் நீரால் நிறைந்தன. அவை பக்தியாலும் நம்பிக்கையாலும் துளித்த நீரா? அவனே அறியாமல் அவர் காலடியில் வீழ்ந்தான்.

"சுவஸ்தி... சுவஸ்தி..."

'போதும் அம்மா. என் மனசு சாந்தி யடைந்து விட்டது. நீங்கள் எப்போது மீனா மாமியின் உருவம் எடுக்கிறீர்கள்? மீனா மாமி எங்கே இப்போது? அவள் எங்கிருந்தாலும்

அவளுக்கு அமைதியைக் கொடுங்கள். உண்ணி என்று எல்லாரும் அழைக்கும் கோபகுமார் ஆகிய நான், இப்போது உங்கள் காலடியில் விழ்ந்து வணங்குகிறேன். எனக்குக் குழந்தை ஏதும் வேண்டாம். மீனா மாமிக்கு, அவள் குழந்தைகளைத் திரும்பக் கொடுங்கள், அது போதும். அவளுக்கு மன அமைதியைக் கொடுங்கள்' - அவன் கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்தான். அம்மாவின் தொடுதலில் தன்வசம் இழந்து போனான்.

சுமாவுக்கு அவள் கணவனின் 'நம்பிக்கை' அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவனுடைய நண்பர்களுக்கு எல்லாம் ஒரே ஆச்சரியம். ஒரு பகுத்தறிவாளன் திடீரென்று ஒரு பக்தன் ஆகிப் போனானே? உண்மையில் பக்தன்தான். எனவே மற்றவை வெளிப்பூச்சு! 'நல்லது நண்பர்களே. நீங்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் எனக்குக் கவலையில்லை. உங்களில் யாருக்கும் மீனா மாமியின் கதை தெரியாது. நான் அதைச் சொல்லப் போவதில்லை. எனக்கு மட்டுமே கிடைத்த ஆசி போல, எனக்குள்ளேயே வைத்துக் கொள்ளுகிறேன்...'

வீட்டுக்கு வந்ததும், "மாதாஜியின் பிரகாசத்தைக் கவனித்தீர்களா? நீங்களே கூட மாறிப் போய் விட்டீர்கள். நமக்குக் குழந்தை பிறக்கும். மாதாஜி சக்திமிக்கவர்!" என்றாள் சுமா.

"எனக்கு ஒன்றும் குழந்தைகள் வேண்டாம். நமக்குக் குழந்தையே வேண்டாம் என்றுதான் வேண்டிக் கொண்டேன்!"

சுமா அழத் தொடங்கினாள். "நீங்கள் இப்படிச் சொல்லி விட்டீர்களோ இல்லையோ? அப்படியேதான் நடக்கும். எல்லாவற்றையும் நீங்கள் துச்சமாக நினைக்கிறீர்கள். ஆனால் இது அப்படி அல்ல. மாதாஜியின் சக்தியை நாம் இருவருமே பார்த்தோம்!"

''எனக்கு மாதாஜியின் சக்தி பற்றி எதுவும் தெரியாது. ஆனால் மீனா மாமி பற்றித் தெரியும். அவள் எந்தக் கோயிலுக்கும் போய், பூஜை செய்யவில்லை. அவள் எதையும் வேண்டிக் கொள்ளவும் இல்லை. இருந்தாலும் அவளுக்கு அழகான பிள்ளைகள் நான்கு பேர் இருந்தார்கள். ஆனால் என்ன பிரயோசனம்? அவர்கள் அவளுக்கு அளவிட முடியாத துயரத்தைத்தான் கொடுத்தார்கள். ஒருத்தருக்குக் குழந்தை இல்லை என்றால், அது மட்டும்தான் சோகம். குழந்தைகள் இருந்தும் துன்பமும்



''சர்வர்! இந்த வருஷம் தீபாவளி போனஸ் கிடையாதுன்னு உங்க முதலாளி சொல்லிட்டாரா?''

''எப்படி சார் கரெக்டா சொல்றீங்க?''

''நாலு இட்லி சாப்பிட்டேன், இரண்டு இட்லிக்கு மட்டும் பில் போட்டு தர்றியே.''

- மலர் சூர்யா

துயரமும் தருவதற்கு, அவர்கள் எதற்குப் பிறக்க வேண்டும்? பாவம், மீனா மாமி! அவள் கதையைக் கேட்டால், உனக்குக் குழந்தைகளே வேண்டாம் என்று தோன்றி விடும். உட்கார். நான் சொல்லுவதைக் கேள்!"

"எனக்கு அப்போது சுமார் எட்டு வயது இருக்கும். வடக்கே ஒரு பெரிய நகரத்தில் இருந்தோம். அக்கம்பக்கத்தில் யாருமே நம்மவர்கள் இல்லை. இந்தியும், மராத்தியும், குஜராத்தியும் பேசுபவர்கள். கேரள கிராமத்தில் வாழ்ந்த என் அம்மாவுக்குப் பாவம், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது. பாஷையும் தெரியாது. தெரிந்தவர்களும் யாரும் இல்லை. அதனால் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். எங்களுக்கும் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் தொடர்பே இருக்கவில்லை. பக்கத்து ஃப்ளாட்டுக்கு ஒரு குடும்பம் வந்தது. லாரி நிறையச் சாமான்களும், நாலு பையன்களுமாக, மீனா மாமி, கணவருடன் வந்து சேர்ந்தாள் ஒருநாள். அவர்கள் வந்த பிறகு, சூழ்நிலையே கலகலப்பாகி விட்டது.

"மீனா மாமி வந்த அன்றைக்கே அறைகளை எல்லாம் பெருக்கித் துடைத்து, விளக்குகளை ஏற்றினாள். கோலம் போட்டாள். கொடியில் பட்டுப் புடைவைகளாகத் தொங்கின. பையன்களின் நிஜார்களும், சட்டைகளும்... பளபளவென்று தேய்த்துத் துடைத்த சமையல் பாத்திரங்கள் அலமாரியில். இட்லி, தோசை, அல்வா என்று வீடு முழுக்க மணத்தது.

"மூத்த பையன் சுந்தரம் ஒரு ஃபுட்பால் பிளேயர். பள்ளிக்கூடத்திலும் பிறகு கல்லூரியிலும் நிறையக் கோப்பைகள் பரிசு பெற்றான். மீனா மாமி அவற்றை எல்லாம் ஷோகேஸில் அழகாக அடுக்கி வைத்தாள். இரண்டாவது பையன் மூர்த்தி படித்துக்

பாறைகளில் எழுதிய கவிதை!

"சாந்தினி கேதனை மட்டும் உருவாக்காமல் இருந்திருந்தால், இயற்கை அழகு மிளிரும் பாறைகள் நிறைந்த தக்காண பீடபூமிப் பகுதியில் நான் என் வாழ்நாளைச் செலவிட்டிருப்பேன்" என்று ரவீந்திர நாத் தாகூர் கூறினாராம். அந்த அளவுக்கு அற்புதமான அழகுகளைக் கொண்டது. கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் பகுதிகளில் உள்ள பாறைகள். இவை இரண்டாயிரத்து ஐநூறு



வருட காலப் பழமை வாய்ந்தவை. இவற்றில் சில, பறவைகள், விலங்குகளைப் போன்ற வித்தியாசமான தோற்றம் கொண்டவை. இத்தகைய பாறைகள் மீது முகமது அலி பெய்க் என்ற இளைஞருக்கு அபாரக் காதல். இந்த பாறைகளைப் பற்றி அற்புதமாக ஒரு டாகுமென்டரி படம் எடுத்திருக்கிறார் இவர். அகில உலக அளவில், அந்த டாகுமென்டரி படத்துக்கு விருதும் கிடைத்துள்ளது. பாறைகள் பற்றின இந்த டாகுமென்டரி படத்தின் டைட்டில்: 'ராகுமென்டரி'.

– சி.எம்.

கொண்டேயிருப்பான். நிறைய ஆங்கிலக் கவிதைகளை எங்களுக்குப் படித்துக் காண்பிப்பான். அவனே எழுதவும் செய்வான். இந்தக் கவிதைகள்தான் என்னையும் மூர்த்தியையும் இணைத்தன. அம்பி மூன்றாவது. அழகாக டிராயிங் வரைவான். அவன் சுவரிலும் தரையிலும் வரைவதை மீனா மாமி துடைத்துத் துடைத்து, அவனைத் திட்டிக் கொண்டே இருப்பாள். கடைசிப் பிள்ளை பாட்டுக் கற்றுக் கொள்ள ஆரம்பித்திருந்தான். அவன் பெயர் சின்ன சாமி.

"பிள்ளைகள் எல்லாம் மீனா மாமிக்கு அடங்கி நடந்தார்கள். அவர்கள் விஷயத்தில் எல்லாம் கூட அவளேதான் முடிவுகள் எடுத்தாள். அன்றைக்கு என்னிடம் யாராவது 'கடவுள் யார்?' என்று கேட்டிருந்தால், கொஞ்சம் கூடத் தயங்காமல் நான் 'மீனா மாமி!' என்று அடித்துச் சொல்லியிருப்பேன். மீனா மாமி ரொம்ப அழகாய் இருப்பாள். சிவந்த முகத்தில் வியர்வை முத்துக்கள் அங்கங்கே தெரியும். சுருள் சுருளான தலை முடி. நெற்றிக்குக் குங்குமம் இட்டிருப்பாள். காதில் வைரத் தோடுகள். நாசியில் வலது புறம் வைர மூக்குத்தி. மூன்று கல் மூக்குத்தி. மாமி அசைந்தாலோ, வாய்விட்டுச் சிரித்தாலோ அந்த மூக்குத்தி டாலடிக்கும். அதைப் பார்க்கவும் எனக்குப் பிடிக்கும். என் அப்பாவுக்கும் இதே மாதிரிதான் தோன்றியிருக்க வேண்டும். மீனா மாமி சிரிக்கும்போதெல்லாம், அப்பா லலிதா சகஸ்ர நாமத்திலிருந்து 'தாரகாந்த்தி திரஸ்காரி, நாசாபரண பாசுர' என்ற வரிகளை மெலிதாக முணுமுணுப்பதைக் கேட்டிருக்கிறேன்.

"மீனா மாமியின் கணவன் உயரமாய், வெளுத்துப் போய் ஒல்லியாக இருப்பார். ஒரு வேதாந்தி. மீனா மாமி அவரையும், அவள் குழந்தைகளையும், பக்கத்து வீட்டுக்காரர்களையும் அடக்கி ஆண்டாள். அம்மா கூடச் சொல்லுவாள் : 'அவள் ஆளப் பிறந்தவள். என்ன திறமை! என்ன கம்பீரம், என்ன அழகு! மீனா மாமியின் பையன்களைப் பார். அவர்களைப் போல் உன்னால் இருக்க முடியுமா பார்!'

"மீனா மாமி மாதிரி என் அம்மா சாமர்த்தியசாலியாக இல்லையே என்று நான் நினைத்துக் கொண்டாலும் வெளியே சொன்னதில்லை. ஆனால் நான் மீனா மாமியின் பையனாகப் பிறக்கவில்லையே என்று உள்ளூர ஏக்கம் அடைந்தது உண்டு. அவள் பிள்ளை மூர்த்தியுடன் நண்பனாக இருந்தது ஆறுதலாக இருந்தது. மீனா மாமி எது சொன்னாலும் நான் கேட்டேன். கட்டளை மாதிரி நினைத்துக் கொண்டேன். ஆனால் அதிசயமாக, மூர்த்தியை விட நான் கெட்டிக்காரன் என்று மீனா மாமி நினைத்தாள்! 'உண்ணி மாதிரி நீயும் இரேன்' என்பாள் மூர்த்தியிடம். எனக்குப் பெருமையாக இருக்கும். என்ன பட்சணம் பண்ணினாலும் ஒரு பங்கு வைத்திருந்து எனக்கும் கொடுப்பாள்.

"தம் பிள்ளைகள் எல்லாரும் எதைச் செய்தாலும் பிரமாதமாக இருக்க வேண்டும் என்று மீனா மாமி நினைத்தாள். இன்டரில் சுந்தரம் முதல் ராங்க் வாங்கினான். பிஎஸ்ஸி,

"என்ன தைரியமிருந்தா, தீபாவளிக்கு அந்த ஜவுளிக் கடையில் திருடிட்டு, உன் அட்ரஸையும் விட்டுட்டு வந்திருப்ப?"

"ஆயிரம் ரூபாய்க்கு மேல ஜவுளி எடுத்தா, குலுக்கல்ல பரிசு உண்டுனு போட்டிருந்தாங்க எசமான்!"

— மதுரை என். உஷாதேவி



கெமிஸ்ட்ரி, பயலாஜி படித்ததில், மெடிகல் காலேஜில் இடம்கிடைத்தது அவனுக்கு. நானும் மூர்த்தியும் ஹானர்ஸ் இங்கிலீஷ். மூர்த்தி புரொபசராகவும், அம்பி இன்ஜினீயராகவும் ஆக வேண்டுமென்று மீனா மாமி விரும்பினாள். சின்னசாமி நன்றாகப் பாடுவான். அதனால் அவன் ஒரு சங்கீத வித்வான் ஆகிவிடுவான் என்று நம்பினாள். மீனா மாமியின் மாமா ஒரு புகழ்பெற்ற சங்கீத வித்வான். சின்னசாமி அந்த வழியில், குடும்பத்தின் பெயரை உயர்த்துவான் என்று நினைத்தாள். யார் யார் எப்படி வரவேண்டும் என்று மீனா மாமி மனசுக்குள் திட்டம் தீட்டியிருந்தாள்.

"ஆனால் மீனா மாமியின் திட்டங்கள் முறியடிக்கப்பட்டன. சுந்தரம் அழகான பிள்ளை. கல்லூரியில் பல இளம்பெண்கள் அவனைச் சுற்றி வந்தார்கள். அவன் வேறு சாதிப் பெண் ஒருத்தியைக் காதலித்து வந்ததாக மீனா மாமிக்குத் தெரிய வந்தது. சுந்தரத்தைத் தங்கள் கிராமத்துக்குக் கூட்டிக்கொண்டு போய், ஒரு பெரிய பணக்கார இன்ஜினீயரின் பெண்ணை, ஏராளமான சீர் செனத்திகள் பெற்றுக்கொண்டு தடபுடலாகக் கல்யாணம் செய்து வைத்தாள். சுந்தரம், பிறகு கல்லூரிக்குத் திரும்பவே மறுத்து விட்டான். ஒரு மாதிரி 'மூடி'யாகி, ஒருநாள் வீட்டை விட்டே ஓடிப்போய் விட்டான்.

"சுந்தரம் அண்ணா ஓர் அப்பாவி, பாவம். அதனால்தான் அம்மா அவனிடம் அப்படி அதிகாரம் பண்ணினாள். என்னிடம் அந்த வேலை எல்லாம் நடக்காது. என் கதை வேறே" என்றான் மூர்த்தி. என் அம்மா கூட, "அவள் நினைக்கிறபடிதான் நடக்கும் மூர்த்தி. அவள் உன்னைத் தன் வழிக்குக் கொண்டு வந்து விடுவாள். அவள் ஆளப் பிறந்தவள்!"

"அதெல்லாம் சும்மா! அவளைப் போலவே, நானும் நான் நினைக்கிறபடிதான் செய்வேன். வேணுமானால் பார்!" என்றான் மூர்த்தி, சவால் மாதிரி.

"மூர்த்தி பெரிய ஆளாக வருவான், எழுத்தாளனாக, சொற்பொழிவாளனாக, மந்திரியாக என்றெல்லாம் மீனா மாமி எதிர்பார்த்தாள். அவனுக்கு அத்தனை திறமை இருந்தது. ஆனால் அவனோ, அம்மா சுந்தரத்துக்கு இழைத்த கொடுமைக்குப் பழிவாங்குகிற மாதிரி, தன்னுடைய கல்லூரியில் கூடப் படிக்கிறவள் என்று ஒரு முஸ்லிம் பெண்ணை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தான். மீனா மாமி அவளை வீட்டை விட்டு விரட்டினாள். அதை எதிர்த்து மூர்த்தி, அவளையே கல்யாணம் பண்ணிக் கொண்டான். அப்படியே அவளுடன் பாகிஸ்தானுக்குப் போய்விட்டான்!

'தெரிந்தவர்கள் எல்லாம் வந்து அவளுடைய தறுதலைப் பிள்ளைகளைப் பற்றி ஆறுதல் சொல்ல வந்தபோது, மீனா மாமி அமைதியாக இருந்தாள். வருந்தவோ, அழவோ இல்லை. ஒரு துளியும் சலனமில்லாமல், வழக்கம் போல் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டு, பெருக்கித் துடைத்து வாசலில் கோலம் போட்டு ஒன்றுமே விபரீதமாக நடக்காத மாதிரி நடந்து கொண்டாள். துக்கம் விசாரிக்கிற மாதிரி வருகிறவர்களுக்கு எல்லாம், வடையும், காப்பியும், அல்வாவும் கொடுத்து உபசரித்தாள்.

"என்ன தைரியம் மீனா மாமிக்கு! இரண்டு மணிமணியான பிள்ளைகளை இழந்த போதும் அசந்து விடவில்லையே. நானாக இருந்தால் சிதறிப் போயிருந்திருப்பேன்!" என்றாள் என் தாயார். மூர்த்தி போன பிறகு நான் மீனா மாமி வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டேன். நான் படித்து முடித்து, கேரளாவிலேயே ஒரு நல்ல வேலையிலும் அமர்ந்து விட்டேன். ஆனால் புறப்படுவதற்கு முன்னால், அம்மா என்னைக் கூப்பிட்டு, 'போய் மீனா மாமியை வணங்கி ஆசிகளை வாங்கிக் கொள். இல்லையென்றால் உன் காரியங்கள் எல்லாம் தடைப்பட்டுப் போய்விடும்!' என்றாள்.

"நான் போன போது மீனா மாமி பகவத்கீதை படித்துக் கொண்டிருந்தாள். விழிகளை உயர்த்தாமல், 'யார், உண்ணி தானே?' என்றாள்.

"ஆமாம் மாமி. எனக்குக் கேரளாவிலே வேலை கிடைத்து விட்டது. உங்கள் ஆசிர்வாதங்கள் வேண்டும். நான் தெரிந்தோ,



"புது எம்.பி. டெல்லியிலே நம்ம மானத்தை வாங்கிட்டார்!"

"எப்படி?"

"பார்லிமெண்ட்டைப் பார்த்ததும் என்னமோ தொங்கு பாராளுமன்றம்னு சொல்லிட்டிருந்தாங்களே, இப்போ ரிப்பேர் பார்த்து சரி பண்ணிட்டாங்களா'ன்னு கேட்கிறார்."

– இரா கணேசன்

தெரியாமலோ உங்களுக்கு ஏதேனும் மனக் கஷ்டம் உண்டாக்கியிருந்தால் மன்னிக்க வேண்டும்' என்றேன். என் குரல் நடுங்கியது. அது தெரிந்து விடாமல் இருக்க, குனிந்து, நெற்றி தரையில் பட, மாமியை வணங்கினேன். அதுவரை நான் யாரையுமே அப்படி வணங்கியதில்லை.

"மீனா மாமி என்னை அன்புடன் அணைத்துக் கொண்டாள். என் தலைமுடியைக் கோதியபடி, 'எல்லாம் நல்லபடி நடக்கும் உண்ணி. உன் தாயார் மிக நல்லவள். அவளுக்கும் எல்லாம் நல்லதே நடக்கும். அவள் மனம் நோகாதபடி நடந்துகொள்' என்றாள்.

"மீனா மாமி தமது இரண்டு கரங்களையும் என் தலைமீது அழுத்தமாக வைத்து ஆசிர்வதித்தாள். அவள் மூக்குத்தி நடுங்கியது. அவள் கண்கள் பளபளத்தன. அவளுடைய கன்னங்கள் வெளிறிப் போயின. ஆனால் அவள் விழிகளில் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வெளிப்படவில்லை. அத்தனை அமைதியாக இருந்தாள். இருவருமே அவள் இழந்த மகன்களைப் பற்றி எதுவும் பேசவில்லை. ஆனால் அந்தச் சமயத்தில் அவர்கள் அந்த வெற்றுச் சூழலில் கலந்திருந்த மாதிரி தோன்றியது.

"அதற்குப் பிறகு நான் மீனா மாமியைப் பார்க்கவேயில்லை. அவ்வப்போது அவளைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதாவது செய்தி வரும். மூன்றாவது மகன் அம்பியை, வேண்டுமென்றே அதிகம் படிக்க வைக்காமல், அங்கேயே ஒரு சுமாரான உத்தியோகத்தில் அமர்த்தி, கல்யாணமும் செய்து வைத்து விட்டாளாம். அந்த மருமகள் எப்படி என்கிறாய்? அப்படியே மீனா மாமி மாதிரியேதான். அவ்வளவு அதிகாரம். ஒருநாளைக்கு மாமியாரிடம் சண்டை போட்டுக் கொண்டு, அத்தனை நகை நட்டு, பாத்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, கணவன் அம்பியையும் கூட்டிக் கொண்டு வேறு வீடு பார்த்துக் கொண்டு போய் விட்டாள்.

"கடைசிப் பையன் சின்னசாமியின் மனைவியின் மாமா வந்தார். 'எல்லாரும் உன்னை அம்போ என்று விட்டு விட்டுப் போய் விட்டார்கள். இருக்கிறதை எல்லாம் சின்னசாமியிடம் கொடு. அவன் உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்வான்' என்றார் மீனா மாமியிடம்.

"அன்பை இப்படி விலைகொடுத்து வாங்குவதை மீனா மாமி விரும்பவில்லை. தன் உடைமைகளை எல்லாம் விற்று, ஒரு தர்ம ஸ்தாபனத்துக்குக் கொடுத்துவிட்டு, கணவனையும் அழைத்துக் கொண்டு, ஊர் ஊராகத் தரிசனம் பண்ணப் புறப்பட்டு விட்டாள். இப்போது மாதாஜியாகி, தன்னுடைய பக்தர்கள் மீது தன் அதிகாரத்தைக் காண்பித்து வருகிறாள். ஆனால் உள்ளுக்குள் உடைந்து போயிருக்கிறாள்.

"...அதனால்தான் சுமா, எனக்குக் குழந்தைகளே வேண்டாம் என வேண்டிக் கொண்டேன். மீனா மாமியின், அல்ல அல்ல, யோகினி மாதாஜியின் பக்தர்களாக, சந்தோஷமாக வாழுவோம். அது போதும். தம் குழந்தைகளை மீனா மாமி எப்படி ஆழ்ந்து நேசித்தாள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவள் நேசிப்பவர்கள் எல்லாருமே அவளுக்கு அடிமை மாதிரி இருக்க வேண்டும் என்று நினைத்தாள். ஒருநாள், அவளே அவள் நேசிக்கிற பக்தர்களின் அடிமையாக ஆகிப் போவாள். என்னை இன்று ஆதரவுடன் பற்றி அணைத்தது போல, அவர்கள் மீதும் பரிவைச் சொரிவாள். பாவம், மீனா மாமி. யாருமே அவளைப் புரிந்து கொள்ளவில்லை. என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்.

"அம்மா, தாயே! என் மீனா மாமிக்கு மன அமைதியைக் கொடு. உண்ணி என்று வீட்டில் அழைக்கப்படும் கோபகுமார் என்ற பக்தன் இதைத்தான் வேண்டிக் கொள்கிறேன். உலகிலுள்ள எல்லா அம்மாக்களுக்கும் மன அமைதியைக் கொடு தாயே!"

ஆங்கில வழி தமிழ் மொழியாக்கம் :
சாருகேசி

நன்றி: Cast me Out If you will: Story and Memoir by Lalithambika Antherjanam; Prepard by Geetha Krishnankutty

உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுகம்
ந்ருஸிம்ஹம் பீஷணம் பத்ரம் ம்ருத்யு ம்ருத்யும் நமாம்யஹம்



கலியாணமாக, புத்திரபாக்யம் பெற, வியாபாரத் தடைகள் நீங்க, தம்பதியர் சந்தோஷமாக இல்லறம் நடத்த, தோஷங்கள்; பித்ரு சாபங்கள் நீங்க, மற்றும் சகல துக்கங்களும் மறைய

ஸ்ரீ ஸுதர்சன ந்ருஸிம்ஹ தன்வந்த்ரி மஹா யக்ஞம்

சென்னை ஸ்ரீ ஜ்வாலா டிரஸ்டின் சார்பில் ஸ்ரீஸுதர்சன ந்ருஸிம்ஹ தன்வந்த்ரி மஹா யக்ஞம் தொடர் வரிசையில் 42வது யக்ஞமாக லோக கல்யாணத்திற்கென நடத்தப்படவுள்ளது. இந்த யக்ஞம் ஸ்ரீ அஹோபிலம் என்ற நவந்ருஸிம்ஹ க்ஷேத்திரத்தில் வருகின்ற நவம்பர் 17-ந் தேதி 1999 புதன் கிழமையன்று, சதுர்வேத பாராயணத்துடனும் சர்வ தேவதா மந்த்ர ஜபங்களுடனும் தொடங்கி, மறுநாள் நவம்பர் 18-ந் தேதி 1999 வியாழக்கிழமையன்று, மேல் அஹோபிலத்திலுள்ள ஜ்வாலா ந்ருஸிம்ஹ ஸ்வாமி திருக்கோயிலில் ஜ்வாலா ந்ருஸிம்ஹ ஹோமம் நடைபெறவுள்ளது. இக்கோவில் 3 கி.மீட்டர் மலை மேல் அமைந்துள்ளது. தொடர்ந்து நவம்பர் 19-ந் தேதி 1999 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ ஸுதர்சன ந்ருஸிம்ஹ தன்வந்த்ரி மஹா யக்ஞம் ஸ்ரீ மாலோல ந்ருஸிம்ஹர் சன்னதிக்கருகில் நடைபெறவுள்ளது. ஸ்ரீஜ்வாலா டிரஸ்டின் தலைவரும்; சாயா அதர்வண வேத விற்பன்னருமான மேன்மை தங்கிய **ஸ்ரீ V.V. ஸ்ரீதர் குருஜி** அவர்களால் இம்மஹா யக்ஞம் நடத்தப்படவுள்ளது.

ஆழ்வார்களால் பாடல் பெற்ற ஸ்தலமும் 108 வைணவத் தலங்களுள் ஒன்றும் நவ ந்ருஸிம்ஹ க்ஷேத்திரமுமான மலைசார்ந்த திவ்யஸ்தலமே அஹோபிலம். ஆந்திர மாநிலத்தின் கர்நூல் மாவட்டத்தில் கடப்பா சாலையில் உள்ள அல்லகடாவுக்கு 18 கி.மீ. அருகில் உள்ளது அஹோபிலம்.

இங்கு பல தீராத வியாதிகள் சுகம் அடைவதற்கும் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கும் வல்லமை படைத்த நன்மை பயக்கும் அட்சரங்கள் இங்கு நிரம்பி காணப்படுவதே அஹோபிலத்தின் சிறந்த அம்சமாகும். இங்கு சென்று பிரார்த்தனை செய்யும் அனைவருக்கும் கோரிக்கைகளை நிறைவு செய்யும் ஓர் அற்புதமான மலைசார் ஆலைய தொடர்தான் அஹோபிலம்.

பக்தர்களின் நன்மைக்காக இந்த யக்ஞத்தில் உள்ளத ப்ரயோக சாஸ்திர முறைகளின்படியும், சாயா அதர்வண வேதச் சாயலிலும், ஸ்ரீக்ருஷ்ண மோஹன தந்திரத்தின் தழுவலிலும், ஸ்ரீ ந்ருஸிம்ஹ தாபின்யோபநிஷதத்தின் வழிசார்ந்தும், ஸ்ரீ குருஜி அவர்கள் சிறப்பு ப்ரயோகங்களை நடத்தவுள்ளார். மூளை புற்று நோய், இருதய நிருத்தம், சிறுநீரக நோய்கள், இரத்தக் கோளாறுகள், எலும்பு மஜ்ஜை, தோல் சம்பந்தமான வியாதிகள் போன்ற பல்வேறு வகைப்பட்ட தீரா உயிர்க்கொல்லி நோய்களின் தொய்வுகளிலிருந்து விடுபட பற்பல தன்வந்த்ரி ப்ரயோகங்கள் நடைபெறவுள்ளது. அவ்வமயம், பல்வகை இயற்கை மூலிகை மருந்துப் பொருள்களும் இவ்ஹோம குண்டத்தில் வேயப்படும். நித்ய வாழ்வில் பித்ரு தோஷத்தால் துவளு வோரின் பிரச்சனைகளுக்கு விடிவும்; உத்யோகத்தில் உயர்வு பெறவும்; வியாபாரத்தில் விருத்தி காணவும், திருமணத் தடைகள் விலக்கல் பெறவும், குழந்தைப் பேறின்மை போன்ற குறைகள் அகலவும், பிரிந்த தம்பதிகள் ஒன்று சேரவும், (அப-ம்ருத்யு) அகால மரணத்தை தவிர்க்கவும், மற்றும் சமூக உயர்வுகளுக்காகவும் மேலான பல நற்பயன்களைப் பெறவும் இவ்யக்ஞத்தில் கலந்து கொள்ளுதல் சாலச் சிறந்தது.

செயற்கைத் தடைகளான சாதி, சமயம், மதம், மொழி மற்றும் நாடு, நகரம் ஆகியவற்றின் தளைகளில் ஸ்ரீகுருஜி அவர்கள் நம்பிக்கையற்றவர். விரும்பி வருகை புரியும் அனைவருக்கும் தனித்துக் கலந்து கொள்ளும் வாய்ப்பு தாராளமாகத் தரப்படும். ஆயின், பாரதப் பண்பாட்டின்படி ஆடவர் வேட்டியும், பெண்டிர் சேலையும் அணிதல் அத்யாவசியம்.

இவ்யக்ஞத்தில் கலந்து கொண்டு திருவருளையும், குருவருளையும் ஒருங்கேப் பெற எல்லா பக்தர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். நேரடியாக யக்ஞத்தில் கலந்து கொள்ள இயலாதவர்கள் உங்கள் பெயர், முழுமுகவரி, கோத்திரம், நட்சத்திரங்களுடன் ரூ. 101, 251, 501, 1001 என்று செலுத்தி பதிவுசெய்து கொண்டால் யாகத்தில் சங்கல்பம் செய்து பின்பு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். இத்துடன் ரிஜிஸ்தர் தபாலில் பிரசாதம் பெற விரும்புவோர் ரூ. 25/-யை சேர்த்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இச்சீரிய பணிக்கு உடனிருந்து உதவி புரிய விரும்பும் தாராள சிந்தையுள்ளவர்கள் தங்களால் இயன்ற பண உதவியையோ, பொருளதவியையோ கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

Sri Jwala Trust, (Regd) B.M Silks Sarees, No.5, North Mada Street, Mylapore, Chennai - 4.
Mr. A. Chandrasekaran, Secretary & Treasurer. Ph: 4940291

லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து

ஹாரி ஹூடினி. இவரை மேஜிக் உலகில் 'மாஸ்டர் ஆஃப் மேஜிக்' என்று மரியாதையுடன் குறிப்பிடுவார்கள். இவர் உருவாக்கியதுதான் 'ஹூடினி பெட்டி' என்கிற மேஜிக் ஐட்டம்.

1874ல் ஹங்கேரி நாட்டிலுள்ள ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் எரிச் வைசிஸ் என்பவர். சீக்கிரமே, அவரது அப்பா, தமது குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு வந்து விட்டார். ஐந்து குழந்தைகள் அவருக்கு. அதில் மூன்றாவது எரிச். குடும்பத்தில் மற்ற குழந்தைகள் ஷூ பாலிஷ் போட்டோ, நியூஸ் பேப்பர் விநியோகித்தோ சம்பாதித்தபோது, எரிச் அது போல வேலைக்கும் போகவில்லை; பள்ளிக்கூடமும் போகவில்லை. மாறாக, எங்கேயோ போய், யாரிடமிருந்தோ ஒரு சில கயிறு டிரிக்குகளைக் கற்றுக் கொண்டு வந்தான். தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு மரத்திலிருந்து கயிற்றைக் கட்டி, தலை கீழாய்த் தொங்குவது, தாவுவது என்று சில சர்க்கஸ் வேலைகளிலும் பயிற்சி செய்தான். இவையெல்லாம், குடும்பத்தினரையும் அக்கம் பக்கத்தினரையும் வியப்பில் ஆழ்த்தின.

எரிச்சின் அம்மா, அலமாரிக்குள் வைத்துப் பூட்டினாலும், உள்ளே வைத்த கேக் போன்ற தின்பண்டங்கள் மாயமாய் மறைந்தன! எப்படி? ஒரு சின்னக் கம்பியை வைத்து, அலமாரியின் பூட்டைத் திறந்து விடுவான் எரிச். அப்புறம் கேக் மாயமாகி விடும்.

இப்படி சிறு வயது முதலே பூட்டைத் திறப்பதில் ஸ்பெஷலிஸ்ட் ஆகிவிட்ட எரிச்தான், பிற்காலத்தில் உலகப் புகழ் பெற்ற மேஜிக் நிபுணரான ஹாரி ஹூடினி. அவரது ஸ்பெஷாலிடியே, அவரை சங்கிலியால் எப்படிப் பிணைத்துப் பூட்டினாலும், அவரால் விடுவித்துக் கொண்டு விட முடியும் என்பதுதான். இதன் அடுத்த கட்டமாக, அவரை ஒரு பெட்டிக்குள் வைத்துப் பூட்டி விட்டாலும், பெட்டிக்குள்ளேயிருந்து வெளியே வந்து விடுவார். இந்தப் பர பரப்பான சாதனையைச் செய்து காட்டுவதற்காக அவர் உருவாக்கிய பெட்டிதான் 'ஹூடினி பாக்ஸ்'. இன்று, இந்த ஹூடினிப் பெட்டி மேஜிக்கைச் செய்யாத மேஜிக் நிபுணர் கிடையாது.

ஹூடினி 1926லேயே இறந்து விட்டார். ஆனால், தாம் இறப்பதற்கு முன்பு, தம்முடைய ஹூடினி பாக்ஸ் மேஜிக்கை எப்படிச் செய்வது என்று விவரமாக எழுதி வைத்து விட்டுத்தான் போனார் என்று சொல்லுவார்கள். தாம் மறைந்தாலும், தாம் உருவாக்கிய மேஜிக், தமக்குப் பின்னரும் சக மேஜிக் கலைஞர்களால் தொடரப்பட வேண்டும். மக்கள் அதைப் பார்த்து, பிரமித்து ரசிக்க வேண்டும் என்ற அவரது நல்ல மனத்துக்கு மேஜிக் கலைஞர்கள் அனைவரும் நன்றிக்கடன் பட்டவர்கள்.



• ஹாரி ஹூடினியை சங்கிலியால் கட்டுகிறார்கள்...

நான் மேஜிக் பயிற்சி பெற்ற சமயம் ஹூடினி பெட்டி பற்றிக் கேள்விப்பட்டேன். ஆனால் அவர் எழுதிய புத்தகம் பற்றி எனக்குத் தெரியாது. அப்படியே அந்தப் புத்தகம் என் கைக்குக் கிடைத்திருந்தாலும், அந்த ஆங்கிலப் புத்தகத்தைப் படித்து, என்னால் புரிந்து கொண்டிருக்க முடியாது.

மந்திரப் புன்னகை 12

'ஹவுடினி பெட்டி' என்கிற புதிர்!

இருந்தபோதிலும், அந்த ஹவுடினிப் பெட்டி மீது எனக்கு அதீத ஆர்வம் பிறந்தது. அதைப் பற்றியே இருபத்து நாலு மணி நேரமும் சிந்தித்துக்கொண்டிருந்தேன். ஒரு பெட்டிக்குள், இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில், பூட்டைத் திறந்து சங்கிலியிலிருந்து விடுவித்துக் கொண்டு, அதன் பின்னர், பூட்டிய பெட்டியிலிருந்து வெளியேற வேண்டுமானால், அந்தப் பெட்டி எப்படி வடிவமைக்கப் பட்டிருக்கக் கூடும்? பெட்டியினுள்ளேயிருந்தபடி சங்கிலியில் பூட்டிய பூட்டை எப்படித் திறக்க முடியும் என்று மண்டையைப் பிய்த்துக்கொண்டேன். அந்தக் காலகட்டத்தில் அந்த ஹவுடினியே எழுதி வைத்து விட்டுப் போன மேஜிக் ரகசியங்களை யாராவது நமக்குச் சொல்லிக் கொடுத்தால் எப்படி இருக்கும் என்று ஏங்குவேன்.

எனக்கு ஒரு சில ஐடியாக்கள் தோன்றின. அவற்றின் அடிப்படையில் பெட்டியை உருவாக்கினேன். அதனுள்ளே செல்வது, அதன் உள்ளே இருந்து வெளியில் வருவது இரண்டையும் செய்து பார்த்தபோது சில பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவற்றை எப்படி சமாளிப்பது என்று சிந்தித்தேன். இன்னும் சில ஐடியாக்கள் தோன்றின. அவற்றின் அடிப்படையில், இன்னும் மேம்படுத்தினேன். ஒருவழியாக, கடைசியில் ஹவுடினி பாக்ஸ் போல நானே பெட்டி ஒன்றை உருவாக்கி விட்டேன். அதனுள்ளே போகவும், வெளியே வரவும் ரகசியமான இடமொன்றில் பயிற்சி செய்தேன். இனி, மற்றவர்கள் முன்னிலையில் செய்து காட்டலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

என் குருநாதர் கீதா பாபு, இன்னும் கல்கத்தாவின் ஒரு சில பிரபல மேஜிக் நிபுணர்கள் ஆகியோரை என் வீட்டுக்கு அழைத்தேன். என் குருவை வணங்கி விட்டு, அவர்கள் முன்னிலையில் ஹவுடினி பெட்டி மேஜிக்கைச் செய்து காட்டினேன். அவர்களுக்கு ஒரே பிரமிப்பு. நான் மேஜிக்கைச் செய்து முடித்தவுடன் அந்த 'ஹவுடினி பாக்ஸ்' அருகில் அவர்களை அழைத்தேன். 'உண்மையில் ஹவுடினியின் பெட்டி எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அதன் மீது கொண்ட அதீத ஆர்வத்தில், என் மூளையைப் பயன்படுத்தி நானே உருவாக்கிய மேஜிக் பெட்டி இது. இதனுள்ளே நான் எப்படிப் போனேன்; இதிலிருந்து எப்படி வெளியே வந்தேன் என்கிற ரகசியத்தை நான் உங்களுக்குச் சொல்லப் போவதில்லை; இந்தப் பெட்டியை நீங்களே பரிசோதித்து, ரகசியத்தை நீங்களே கண்டு பிடித்துக் கொள்ளலாம்' என்று கூறி விட்டேன்.

என் குருவும், மற்ற மேஜிக் நிபுணர்களும் நான் உருவாக்கிய மேஜிக் பெட்டியைப் பரிசோதித்தார்கள். ஆனால் அவர்களால் ரகசியத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மறுநாள், நான் என்னுடைய குருவின் வீட்டுக்குச் சென்றேன். "அந்தப் பெட்டியின் ரகசியம் என்ன? இரவு முழுக்க எனக்குத் தூக்கமே வரவில்லை. அந்தப் பெட்டியைப் பற்றியும், அதை உருவாக்கிய விஞ்ஞானியான உன்னைப் பற்றியும்தான் நினைத்துக் கொண்டு இருந்தேன்!'' இதுதான் அவர்வீட்டில் நுழைந்தவுடன், கீதாபாபு சொன்ன வார்த்தைகள்.

''நான் உனக்கு மேஜிக் சொல்லிக் கொடுத்தது வாஸ்தவம்தான். ஆனால் நீ பிறவி மேஜிக் கலைஞன். நீயாகவே முயற்சி செய்து, ஹவுடினியின் மேஜிக் பெட்டி போல ஒன்றை உருவாக்கி விட்டாய்! இதன் மூலம் குருவை விஞ்சிய சிஷ்யனாகி விட்டாய்'' என்றார் ஆனந்தக் கண்ணீர்

மேஜிக் நிபுணர் கே. லால்

மல்க. நான் அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கினேன். "எல்லாம் உங்கள் ஆசிகள்."

கணபதி சக்ரவர்த்தியும், கோகுமாரும் என் மேஜிக் குருநாதர்கள் என்றாலும், ஹூடினியையும் என் மானசீக குருவாக நான் இன்றைக்கும் கருதுகிறேன். துரோணாசாரியாருக்கு ஒரு ஏகலைவன் போல, ஹூடினிக்கு நான்!

நான் என் அரங்கேற்றத்தை நடத்தியது 1951ல் என்றும், ஆனால் அதன்பிறகு, குடும்பப் பொறுப்புகள் காரணமாக ஒன்பது வருடங்கள் கழித்துத்தான் முழு நேர மேஜிக் கலைஞனாகி, மும்பையில் நிகழ்ச்சிகள் நடத்தினேன் என்றும் ஏற்கெனவே சொன்னேன். இந்த இடைப்பட்ட காலத்தில், மேஜிக் உலகில் சிறந்த புகழுடன் விளங்கியவர் பி.சி. சொர்க்கார் (சீனியர்) அவரும் நானும் ஏறத்தாழ ஒரே கால கட்டத்தில் கோகுமாரிடம் மேஜிக் கற்றுக் கொண்டவர்கள்தான். அவருடைய குடும்பம், பரம்பரையாக மேஜிக்கில் ஈடுபட்டு வருகிற குடும்பம் என்பதால், அவர் மேடையேறுவதற்கு யாதொரு தடையுமில்லை. ஆனால் எங்களது குடும்பத்தின் துணி வியாபாரம் என்னை மேடையேற விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது.

பி.சி. சொர்க்காரின் திறமை பற்றி எனக்குத் தெரியும். ஆனால் அவரிடம் சுயமாய் முதலீடு செய்து, நிகழ்ச்சிகள் நடத்த நிதி வசதியில்லை. எனவே, என்னுடைய வசதி படைத்த உறவினர் ஒருவருக்கு நான் சொர்க்கார் சீனியரை அறிமுகப்படுத்தி வைத்தேன். என் ஆலோசனைப்படி சுமார் இரண்டு லட்சம் ரூபாய்வரை முதல் போட்டு, மும்பையில் சொர்க்கார் சீனியரின் மேஜிக் ஷோவை நடத்த முன் வந்தார் அவர். சொர்க்காரின் திறமை, எனது உறவினரது பண முதலீடு என்ற கூட்டணி கிளிக் ஆனது. என் உறவினருக்கு, சொர்க்கார் சீனியரை வைத்து, மும்பையில் நிகழ்ச்சியை நடத்தியதில் நல்ல லாபம் கிடைத்தது. அதனால், சொர்க்காருக்கும் நல்ல வருமானம்.

மும்பையில் வெற்றிகரமாக நிகழ்ச்சியை நடத்தி முடித்த கையோடு, சொர்க்கார் - சீனியரை வைத்து இந்தியாவின் மற்ற நகரங்களில் நிகழ்ச்சிகளை நடத்தினார். அது மட்டுமா? அவரை அழைத்துக்கொண்டு சிங்கப்பூர், ஹாங்காங் உட்பட பல்வேறு நாடுகளுக்கும் சென்று பேரும் புகழும் கிடைக்கச் செய்தார்.

1960ல் நான் முழு நேர மேஜிக் கலைஞனாகி, மும்பையில் வெற்றிகரமாக எடுத்த எடுப்பிலேயே நூறு காட்சிகள் நடத்தியது பற்றிச் சொன்னேன். அதன் பிறகு 1963ல் நான் மறுபடி மும்பை செல்ல ஒப்புக் கொண்டபோது, பி.சி. சொர்க்கார் - சீனியர் எனக்குப் போட்டியானார். "நானும் அதே நேரத்தில் மும்பையில் மேஜிக் ஷோ நடத்தப் போகிறேன்! நான் கே. லாலை விட பேரும் புகழும் உள்ளவன். எனவே, என் நிகழ்ச்சி நடக்கிறபோது, லால் மும்பையில் மேஜிக் ஷோ நடத்தினால், ஒரு சில நாட்களிலேயே, மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு புறப்பட வேண்டியதுதான்! அந்த அவமானத்திலிருந்து தப்பிக்க லாலுக்கு உள்ள ஒரே வழி, அவரது மும்பை விஜயத்தை ரத்து செய்வதுதான்!" என்று சவால் விட்டார்!

நான் வெலவெலத்துப் போனேன் என்பதை மறைக்க விரும்பவில்லை.

(தொடரும்)



"அவர் சரியான அல்பம்..."

"என்ன பண்ணினாரு?"

"நேற்று பஸ் ஸ்டாண்டில் யாரோ ஒரு ஆளு போற, வர்றவங்களுக்கெல்லாம் பிட் நோட்டீஸ் கொடுத்துக்கிட்டிருந்தான். இவருக்கு ஒண்ணு கொடுத்தவுடனே, 'என் மச்சானுக்கு ஒண்ணு கொடு'ன்னு கேக்கறாரு!"

— டி.என். பாலகிருஷ்ணன்

சிவானந்த குருகுலம்

அன்பான வேண்டுகோள்



இவ்வாதரவற்ற குழந்தைகள் தங்களாலும், இறைவனாலும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். இக் குழந்தைகளும், குருகுலத்தில் உள்ள முதியோர்களும் வரும் தீபாவளி திருநாளை நம் வீட்டில் உள்ளவர்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவது போல் குருகுலத்திலுள்ள அனைவரும் கொண்டாட தங்கள் உதவியை நாடுகிறோம்.

தாங்கள் பணமாகவோ, காசோலையாகவோ, பட்டாசுகளாகவோ, இனிப்பு களாகவோ, துணிமணிகளாகவோ அல்லது அரிசி, கோதுமை, எண்ணெய் போன்ற பொருட்களாகவோ இத் தீபாவளி திருநாளை கொண்டாட மனமுவந்து தாராளமாக உதவிக்கரம் நீட்டுமாறு அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் 350 ஆதரவற்ற குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் அனுப்ப வேண்டிய நிதியுதவியினை,

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
தொலைபேசி எண்கள் :
2369 078, 2369 444.

சென்னையில் நன்கொடை கொடுக்க
வேண்டிய முகவரி :
மெஸர்ஸ். பிரகாஷ் டிரேடிங் கம்பெனி,
நெ. 156, தம்பு செட்டி தெரு,
சென்னை - 600 001.
தொலைபேசி எண்கள் :
5342 428, 5342 803

E-mail : sivanand@md2.vsnl.net.in

FOR MORE DETAILS ABOUT OUR ASHRAM VISIT OUR WEBSITE:

http: www.indiadirect.com/sivananda-ashram



• விமர்சன விஷயம்...



• வித்தியாசம்!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? 'அரசியலிலிருந்தும் முதல்வர் பதவியிலிருந்தும் ஓய்வு பெற விரும்புகிறேன்' என்று ஜோதி பாசு கூறியிருப்பது பற்றி...?

! யாராவது 'போகாதே போகாதே என் தலைவா' என்று கூப்பிட்டு மறுபடி உட்கார வைக்க மாட்டார்களா என்று எதிர்பார்ப்பது போலல்லவா இருக்கிறது!

● காவிரி மணாளன், கோனாபட்டு.

? 'மற்ற மாநிலத் திரைப் படங்களில் அந்த மாநிலங்களின் கலாசாரத்தை அறிய முடியும். தமிழ்ப் படங்களில் பாடல் காட்சிகளில் காதலனும் காதலியும் மற்ற பலரின் முன்னிலையில் கட்டிப் பிடித்து ஆடுவது, தெருவில் நாய்கள் நடந்து கொள்ளும் விதத்தைப் பிரதிபலிக்கிறது' என்று நடிகர் சாருஹாசன் கூறியிருப்பது பற்றி...?

! சுஹாசினி, கமல், மணிரத்னம் ஆகியோரையும் சேர்த்துத்தான் விமர்சித்திருக்கிறார் என்றால் அது நியாயமான விமர்சனம்தான்.

● கே. பட்டு, கும்பகோணம் – 1.

? அரசியல்வாதிகள் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுவதைத் தடை செய்தால் என்ன...?

! அடுத்த தேர்தலுக்குள்ளாவது அவசியம் செய்யத்தான் வேண்டும். ஒரு தேர்தலுக்கு என்ன செலவு! என்ன செலவு! அது போதாதென்று இந்த வீண் செலவு வேறு எதற்கு?

● அ. ரஹீம் கஸாலிஷமீம், அரசர்குளம்.

? சோனியா அந்நியர் என்று குற்றம் சாட்டிவிட்டு, காங்கிரசை விட்டு வெளியேறி தேசியவாத காங்கிரஸை ஆரம்பித்த ஷரத்பவார், இன்று அதே காங்கிரசுடன் கூட்டணி அமைத்து மஹாராஷ்டிராவில் ஆட்சி அமைத்திருப்பது சந்தர்ப்பவாதமா, தேசியவாதமா?

! சூழ்நிலையின் கட்டாயம். மஹாராஷ்டிர மாநில சட்டமன்றத்தில் தேர்தலுக்குப் பிறகு கட்சி உறுப்பினர்களின் கணக்கு அப்படி அமைந்து விட்டது. இந்தக் கணக்கு, காங்கிரஸ் பிளவுபடக் கூடாது என்ற மக்கள் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கலாம்.

● ஏ.எம்.ஏ.எம். அருணாசலம், பள்ளத்தூர்.

? திருவள்ளுவர் வரலாற்றில் அவருக்குக் குழந்தைப் பேறு இருந்ததாக இல்லை. அப்படியிருக்க அவர் 'குழலினிது யாழினிது என்பர்; தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்று எவ்வாறு கூறினார்?

! பெற்றால்தான் பிள்ளையா?

● இழாம்பூர் எஸ். ராமையர், பாண்டிச்சேரி – 8

? தமிழ்நாட்டில் சாலை விபத்துக்களில் உயிரிழப்போர் எண்ணிக்கை சமீப காலமாக மிகவும் அதிகரித்திருப்பதை கவனித்தீரா?

! செங்கல்பட்டு சரக டி.ஐ.ஜி. கொடுத்த தகவல்படி கடந்த 9 மாதங்களில் 932 பேர் சாலை விபத்தில் இறந்துள்ளனர். கடற்கரைச் சாலையில் இரு தினங்களுக்கு ஒரு விபத்தாவது

முந்தைய-18;

நடக்கிறதாம். ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் பரிதாபமாய் உயிரிழப்போர் அதிகம் என்று உணர்ந்து, சென்னை மருத்துவர் டாக்டர் எம்.எஸ். வெங்கட்ராமன், தமது புத்தக விற்பனை மூலம் நிதி திரட்டி ஒரு ஆம்புலன்ஸ் வாங்கி, 'டிராமா கேர் கன்ஸார்ஷியம்' என்ற தன்னார்வக் குழுவினரிடம் பரிசளித்துள்ளார். விபத்து சிகிச்சை அளித்து வரும் அமைப்பு இது.

● சூர்யநிலா, சேலம் – 9.

? சமீபத்தில் படித்த இலக்கிய புத்தகம்?

! சிவ ஞான போதத்துக்கு வ.உ.சி எழுதிய உரையைப் படித்துக் கொண்டிருக்கிறேன். என்ன அழகான தமிழ்! ஒரு சுதந்தரப் போராட்ட வீரராக அறிமுகமான அளவுக்குத் தமிழறிஞராக அவர் அறியப்படாமல் போனது துரதிர்ஷ்டம்! தேடிப் பதிப்பித்திருக்கும் ஆ. இரா. வேங்கடாசலபதி நிச்சயம் பாராட்டுக்குரியவர்.

நீங்கள் கேட்டவை – தராசு

இப்போதைய-24 வித்தியாசம் என்ன?

● வி.பி. மகராசி, மதுரை – 16.

? போப் ஆண்டவரை எதிர்த்துப் பேரணி நடத்தப் போவதாக விச்வ ஹிந்து பரிஷத் அறிவித்துள்ளது பற்றி...?

! முன்னெச்சரிக்கையாக சம்பந்தப்பட்டவர்களிடம் பேசி இதைத் தவிர்த்து விடுவது மிக அவசியம். இல்லாவிட்டால் பி.ஜே.பி.யின் மதவாதப் போக்கு உலகளாவிய காட்டமான விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகும். அது நாட்டுக்கும் நல்லதல்ல.

● கே. ரமேஷ்பாபு, சேலம் – 1.

? சி.டி.பி.டி ஒப்பந்தம் என்றால் என்ன? அமெரிக்கா இதில் ஆர்வமாக இருப்பதன் காரணம் என்ன?

! Comprehensive Test Ban Treaty என்று அணு ஆயுத உற்பத்தி தொடர்பான பரிசோதனைகளைக் கைவிடும் ஒப்பந்தம். இந்த ஒப்பந்தத்தை அதிகம் வலியுறுத்தி வரும் நாடு அமெரிக்கா. ஆனால், இதற்கான வாக்கெடுப்பின்போது அமெரிக்க செனட் கிளின்டனைக் கைவிட்டு விட்டது! இப்போது அதை வலியுறுத்தும் தார்மீக பலம் இழந்து தவிக்கிறார் அவர்!

● கே.ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.

? பி.ஜே.பி.யின் முந்தைய 18 கட்சி கூட்டணி அரசுக்கும் இப்போதைய 24 கட்சி கூட்டணிக்கும் என்ன வித்தியாசம்?

! பதினெட்டில் ஒன்று அ.இ. அ.தி.மு.க. இருபத்தி நான்கில் ஒன்றாக அது இல்லை.




• தமிழறிஞர்!

● பி.வீரபாகு, கும்பகோணம்.

? பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததற்குப் பொறுப்பேற்று சோனியா பதவி விலகுவாரா...?

! விலகவில்லையே! தாம் விலகாதிருப்பதற்கு வசதியாக, தார்மீகப் பொறுப்பேற்று விலக முன் வந்த பிறரையும் தடுத்து விட்டாரே!



• கைவிட்ட செனட்!

● சு. சாந்தி, காட்பாடி.

? வரி போடாமல், விலை உயர்த்தாமல் ஆட்சி நடத்துவதென்பது சாத்தியமா? சாத்தியமில்லையெனில் விலை உயர்வை கேலி செய்து கார்ட்டூன் போடுவது எப்படி சரியாகும்?

! வரி போடுவதும் விலை உயர்வதும் எல்லா நாடுகளிலும் நடக்கக் கூடியதுதான். ஆனால் எந்த அளவுக்கு என்பதில் தான் ஒரு நாட்டின் பொருளாதார ஸ்திரத் தன்மையும் அரசியல்வாதிகளின் விவேகமும் வெளிப்படுகிறது. அப்படிப் பார்க்கும்போது இந்தியாவில் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை; கவலை தருவதாக இருக்கிறது என்பதுதான் கேலி, கார்ட்டூன், கண்டனம் எல்லாவற்றும் அடிப்படைக் காரணம்.

□ ரூ. 50 பரிசு பெறுபவர்: ரஹீம் கலாலிஷெமீம், 121, மேலத் தெரு, அரசர்குளம் – 614801 புதுக்கோட்டை மாவட்டம்.

● பி. ஜெயபிரகாஷ், சர்க்கார்பதி

? மற்ற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு தமிழுக்கு எதுங்க...?

! 'ழ'கரம்தான். அதனாலேயே மிக அதிகம் பேரால் கொலை செய்யப்படும் மொழி என்ற 'சிறப்பை'யும் அடைகிறது!

• பிரிந்ததும் சேர்ந்ததும்...





• என்றும் எதிர் பார்ப்பு...

வட்டமேஜை

காங்கிரஸ் கட்சி (நேரு குடும்பம் - தேர்தலுக்கு பின்) தன் கோஷ்டிப் பூசலை ஒழிக்கவில்லை எனில் அதனால் எப்போதுமே பாராளுமன்றத்தில் ஆட்சியமைக்க முடியாது. கட்சிக்குள் மட்டும் ஜெயித்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான்.

சர்க்கார்பதி, பி. ஜெயப்பிரகாஷ்.

தம்மைச் சுற்றிலும் துதிபாடிகளை வைத்துக் கொண்டு காங்கிரஸின் தோல்விக்கான காரணங்களை சோனியா ஆராய முற்பட்டிருப்பது வேடிக்கைதான்! இந்திரா, ராஜீவுக்குப் பிறகு, காங்கிரஸுக்கு வசீகரத் தலைமை இல்லாது போய் விட்ட நிலையில், உட்கட்சிப் பூசலைக் களைந்து, மேல்மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை, ஜனநாயகத்தை மலரச் செய்வது, காங்கிரஸின் எதிர்காலத்தை நிலை நிறுத்தும் என்பதை சோனியா உணருவது நல்லது.

தூத்துக்குடி - 1, ப. சுகுமார்.

பதவி வெறியை மூட்டை கட்டி வைத்து விட்டு கட்சியை வளர்க்கும் களப் பணியில் பிரியங்காவை காங்கிரசார் ஈடுபடுத்தினால், காணாமல் போகும் லிஸ்டில் இருக்கும் காங்கிரசை 'கம்பீரமாக்குவது' ஓரளவு சாத்தியமே!

பூலாங்குளம், டி. செல்வன்.

பாக்கியை வசூலிக்கும் அறநிலையத் துறை அமைச்சரின் உத்தி பாராட்டத்தக்கது. இது சிரமமில்லாத, அமைதியான வழி. இவ் வழியை சில துறைகளுக்கும் பரீட்சித்துப் பார்க்கலாமே!

காரைக்குடி - 1, பாலு.

எல்லா பத்திரிகைகளும் பிரதமர் வாஜ்பாயை அட்டைப் படமாகப் போட்டு வாழ்த்திப் பாராட்டிக் கொண்டிருக்க, நீர் மட்டும் நேரு குடும்பத்தை அட்டைப் படத்தில் போட்டு தேர்தலுக்குப் பின் அவர்களின் திட்டம் என்ன என்பதை ஆதாரத்தோடு ஆராய்ந்து எழுதியதில் 'கல்கி'யின் தனித்துவம் தெரிந்தது!

திருச்சி - 9,
பூனாம்பாளையம் ஆர்.பி. ஜெயச்சந்திரன்.

சிங்காரச் சென்னை அசிங்காரச் சென்னையாக விளங்குவதைப் படம் போட்டு விளக்கி விட்டீர்கள்! சிறு துளி வெள்ளமாக மாறாமல் கவனிக்க வேண்டியது அரசின் கடமை! சுகாதாரக் கேடு விளைவிக்கும் விஷயங்களை முளையிலேயே கிள்ளுவது தானே நியாயம்!

சென்னை - 33, டி. சௌந்தர்ராஜன்.

பிரபஞ்சன் பிழைத்து எழுந்தது நம் தமிழ் இலக்கிய உலகம் செய்த புண்ணியம்! அவர் நூறாண்டு வாழ்ந்து தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்க வாழ்த்துகிறேன்.

சேலம் - 2, நிர்மலாநாதன்.

ஜே.எம். லிங்தோ போன்ற நல்லவர்களை, நேர்மையும், திறமையும் கொண்ட அதிகாரிகளை மீடியாக்கள் இருட்டடிப்புச் செய்வது, உண்மையிலேயே துரதிர்ஷ்டமானது.

வடவள்ளி, ராமசுப்ரமணியன்.

கல்கி சொன்னது போலவே ராணுவப் புரட்சி!

அக்டோபர் 15-ம் தேதி 'பாகிஸ்தானில் ராணுவப் புரட்சி நடக்கக்கூடும்' என்று எழுதியிருந்தீர்கள். உண்மையில் 12ந் தேதியே ராணுவப் புரட்சி நடந்து விட்டதைப் பார்த்தால் கல்கியின் தீர்க்கதரிசனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

புதுடெல்லி, க. சத்தியசாயிராம்.

சஞ்சயனுக்குக் காது சரியாகக் கேட்கவில்லையா என்ன? அ.தி.மு.க. பாராளுமன்றக் குழு தலைவர் பற்றிய கணிப்பு பொய்யாகி விட்டதே!

சிதம்பரம் - 2, ஸ்ரீவித்யா காளிதாஸ்.

5.9.99 இதழில் 'பாரீஸ் ஸ்பிருலினா' பற்றிய கட்டுரைக்கு ஒரு விளக்கம்: கடந்த 17 வருடங்களாக ஸ்பிருலினா பாசியில் வேலை பார்த்து தற்பொழுதும் சில ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறோம். இந்த பாசியில் அனைத்து சத்துக்களும் அடங்கி உள்ளதால் நாங்கள் இதை எல்லாச் சத்து பற்றாக்குறைக்கும் பரிந்துரைக்கின்றோம். கட்டுரையில் குறிப்பிட்டபடி, அலர்ஜி என்னும் ஒவ்வாமைக்கும், பக்க விளைவுகளுக்கும் இடமே இல்லை. இதை ஓர் இணை உணவாகப் பரிந்துரைக்கின்றோமே தவிர, உணவுக்கு பதிலாகப் பரிந்துரைப்பது இல்லை.

சென்னை - 13,
டாக்டர் வத்ஸலா, வள்ளியம்மை சுப்பிரமணியம், ஏ.எம்.எம். முருகப்ப செட்டியார் ஆய்வு நிலையம்.

ஆடைகள் டிசைன் செய்யும் முதல்வர்!

'அடுத்த ஐந்தாண்டு கால ஆட்சிக்கு அஸ்திவாரம் அமைக்க முதல் நூறு நாட்கள் அல்லது ஆறு மாதம் ஆகும். இது என்னைப் பொறுத்தவரை கடினமான காலம்தான்' என்று சொல்லும் சோமனஹள்ளி மல்லையா கிருஷ்ணா, கர்நாடக மாநிலத்தின் பதினோராவது முதல்வர். இவர் கடந்த எட்டாண்டுகளாகவே முதல்வராகும் வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் என்று கூடச் சொல்லலாம்.

1962-ஆம் ஆண்டில் முதன் முதலாக இவர் அரசியலில் நுழைந்தபோது பிரஜா சோஷலிஸ்ட் கட்சி வேட்பாளராக நின்று மத்தூர் தொகுதியில் அசைக்க முடியாத காங்கிரஸ் வேட்பாளராக விளங்கி வந்த, வீரண்ணா கவுடாவைத் தோற்கடித்து சட்டசபைக்குள் காலடி எடுத்து வைத்தார். பின்னர் காங்கிரஸில் இணைந்து இருமுறை மண்டியா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேவராஜ் அர்ஸ் முதல்வராக இருந்தபோது மேல் சபை உறுப்பினராக சட்டசபைக்குள் நுழைந்தவர், தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்தார். மூன்றாவது முறையாக பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இந்திரா காந்தி அமைச்சரவையில் ராஜாங்க தொழில் அமைச்சராகவும் பின்னர் ராஜாங்க நிதியமைச்சராகவும் பணியாற்றினார்.

1989-ஆம் ஆண்டில் கர்நாடக சட்டசபையின் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அப்போதைய முதல்வர் பங்காரப்பாவால் இவர் வெளியேற்றப்பட்டாலும், வீரப்பமொய்லி காலத்தில் துணை முதல்வராக்கப்பட்டார். இரண்டாண்டுகள் கழித்து கிருஷ்ணா ராஜ்யசபா உறுப்பினரானார்.

மே 1, 1932-ஆம் ஆண்டு மண்டியாவில் உள்ள மத்தூரில் பிறந்த இவர், இந்தியாவில் மட்டுமின்றி அமெரிக்காவில் உள்ள ஜார்ஜ் வாஷிங்டன் யூனிவர்சிடியிலும் சட்டம் பயின்றார். சர்வதேச சட்டப் பேராசிரியரான இவர், திறமையான பார்லிமெண்ட்டேரியன் என்ற சிறப்பைப் பெற்றதோடு 1965-ஆம் ஆண்டு நியூசிலாந்திலும், 1990-ஆம் ஆண்டு பிரிட்டனிலும் நடைபெற்ற காமன்வெல்த் பார்லிமெண்ட்ரி கூட்டத்திலும், கருத்தரங்கத்திலும் கலந்து கொள்ள இந்தியாவில் இருந்து அனுப்பப்பட்ட உறுப்பினர்கள் குழுவில் ஒருவராகவும் இடம் பெற்றிருந்தார்.



• எடியூரப்பா

இன்றும் வேர்ல்ட் யுனிவர்சிடி சர்வீசுடன் தொடர்பு வைத்திருக்கும் இவருக்கு டென்னிஸ், யோகா இரண்டிலும் ஈடுபாடு உண்டு. இரண்டு மகன்களுக்குத் தந்தையான இவருக்கு ஆண்களுக்கு ஆடைகள் டிசைன் செய்வதிலும் ஆர்வமுண்டு!



• எஸ்.எம். கிருஷ்ணா

கர்நாடக மாநில பி.ஜே.பி. தலைவரான எடியூரப்பா, தாமே அடுத்த முதல்வர் என்ற இறுமாப்பிலேயே தம்முடைய தொகுதியான சிக்காரிபுராவுக்கு பிரசாரத்திற்குச் செல்லாமலேயே தோற்றுப் போனார்! இருப்பினும் எடியூரப்பாவின் பந்தா இன்னும் குறையவில்லை.

இப்போது பி.ஜே.பி. சார்பில் எதிர்க்கட்சித் தலைவராக ஒருவரைத் தேர்ந்தெடுத்தாக வேண்டுமல்லவா? அதற்கு சிவப்பா என்ற சட்டசபை உறுப்பினரை பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் அவரை நியமிக்க இவர் விதித்துள்ள மூன்று நிபந்தனைகள் என்னென்ன தெரியுமா? சட்டசபையில் எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் விவாதிப்பதற்கு முன்பு எடியூரப்பாவிடம் முதலில் ஆலோசனை கேட்க வேண்டும். இரண்டாவதாக எந்த ஃபைல் அல்லது தகவல் வந்தாலும் எடியூரப்பாவிற்குத் தெரிவித்தாக வேண்டும். மூன்றாவதாக எதிர்க்கட்சி தலைவர் என்ற முறையில் அவருக்களிக்கப்படும் வசதிகளைத்தையும் தம்முடைய உறுப்பினர்களுடனும் கட்சித் தொண்டர்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ரிமோட் கன்ட்ரோல் ராஜாங்கம் என்பது இதுதானோ?

— மகேந்திரன்

மும்பையில் நடந்த

அப்பப்பா!

வாஜ்பாய், பிரதமர் நாற்காலியில் அமர்ந்து. 'உஸ், அப்பாடா....' என இளைப்பாறிக்கூட இருக்க மாட்டார். அதற்குள் இங்கே தாக்கரேவுக்கு புஸ¬புஸ¬ வென்று கோபம் தலைக்கேறி விட்டது. மத்தியில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட மூன்று சிவசேனை எம்.பி.க்களையும் - மனோகர் ஜோஷி, சுரேஷ் பிரபு, சிகே பாடீல் - மும்பை திரும்ப உத்தரவிட்டு விட்டார். அவர்களும் தத்தம் இலாகாக்களின் பெறுப்பேற்காமல் போட்டது போட்டபடி பறந்து வந்து விட்டனர். தொலைத் தொடர்பு, போக்குவரத்து போன்ற முக்கிய இலாகாக்களுக்குக் குறி வைத்திருந்தது சிவசேனை. ஆனால் கிடைத்ததென்னவோ சாதாரணத் துறைகளே. இது கொசுறான ஏமாற்றம். பிரதான ஏமாற்றம், இவர்கள் மஹாராஷ்ட்ர முதல்வர் பதவிக்குத் தேர்வு செய்த நாராயண் ராணேவை, பி.ஜே.பி.காரர்கள் ஏற்காமல், போக்குக் காட்டியது! இந்தச் சிறிய பெரிய கோபங்களின் எதிரொலியாய் சிவசேனை எம்.பிக்கள் திரும்பி விட்டனர். அப்புறம், 'எங்களுக்கு முதல்வர் பதவி முக்கியமில்லை. சிவசேனையுடனான கூட்டணிதான் முக்கியம். தாக்கரே சொல்படியே நடப்போம்'' என்றெல்லாம் 'டயலாக்' அடித்து, பி.ஜே.பி.காரரான முண்டே தாக்கரேவின் கோபம் தணித்ததும் ஆட்சியைக் கோட்டை விட்டதும் வேறு கதை! தமிழ் நாட்டு 'அம்மாவை' குற்றம் சொன்னவர்கள், இப்போது என்ன செய்வார்களாம்? அங்கே அம்மா இல்லை என்றால் இங்கே ஒரு 'அப்பா'! இன்னும் எத்தனை எத்தனை பெரியப்பா, சித்தப்பாக்களோ?



• சிரிப்பாய்ச் சிரிக்கும் புஜ்பல் - விலாஸ்ராவ்

அரசியல் நவராத்திரி

நமது பாரம்பரியத்தைக் கைவிடாமல், நவராத்திரி விழாவை செவ்வனே கொண்டாடினார்கள் மஹாராஷ்டிர அரசியல்வாதிகள். முதல் மூன்று தினங்கள் துர்க்கைக்கு அர்ப்பணமா? இவர்களும் கோபதாபத்துடன் ருத்ர தாண்டவமாடினார்கள். நாராயண் ராணேவை ஏற்றுக் கொள்ளவில்லையே என்று சிவசேனைக்கு பி.ஜே.பி மேல் கோபம்; முண்டேவை முதல்வராகப் பிரஸ்தாபிக்கவில்லையே என்று பி.ஜே.பிக்கு சிவசேனை மேல் சினம்; விலாஸ்ராவ் தேஷ்முக்கை முதல்வராக ஏற்க மாட்டேனென்கிறார்களே என்று காங்கிரஸ¬க்கு தேசிய காங்கிரஸ் மேல் எரிச்சல்; சகன்புஜ்பலுக்கு முதல்வர் பதவி கொடுக்க மாட்டேனென்கிறார்களே என தேசிய காங்கிரஸ¬க்கு காங்கிரஸ் மேல் காட்டம். சண்டையோ சண்டை, பூசலோ பூசல்!

அடுத்த மூன்று தினம் லக்ஷ்மிக்கு உரித்தானதா? இவர்களும் லக்ஷ்மி ஆராதனையைத் தொடங்கினார்கள். பிரதான கட்சி தவிர, சுயேச்சைகள், சின்னச் சின்னக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என ஒரு 30 எம்.எல்.ஏ.க்கள் இருந்தார்களே? அவர்

அரசியல் நவராத்திரி!

களுக்கு வெற்றிலை பாக்கு, ஏனைய லக்ஷ்மி கடாட்சமான விஷயங்கள் முதலியவற்றை வைத்து, 'வா வா' என அழைத்தார்கள். முன்னேற்ற ஜனநாயகக் கூட்டணியிலிருந்து ஒரு பதினோரு எம்.எல்.ஏக்கள் காங்கிரஸ் பக்கம் சாய்ந்தனர். ஒரு பத்து சுயேச்சைகள் சிவசேனையின் அழைப்பை ஏற்றனர்.

கடைசி மூன்று தினங்கள் அறிவு தேவதையான சரஸ்வதியின் ஆட்சி அல்லவா? இப்படியே அடித்துப் பிடித்துக் கொண்டிருந்தால், ஆளுநர் பி.சி. அலெக்ஸாண்டர் மகிஷாசுர மர்த்தனி அவதாரம் எடுத்து விடுவார் என அஞ்சி, புத்திசாலித்தனமாக ஜோடி சேர முடிவு செய்தனர். பி.ஜே.பி., சிவசேனையின் ஆதிக்கத்துக்குத் தலைபணிந்தது. தேசிய காங்கிரஸ், காங்கிரஸை 'பெரியண்ண'னாக ஏற்றுக் கொண்டது. ஆனால் கணக்கில் கொஞ்சம் 'வீக்'காகி விட்டது முதல் ஜோடி; 136ஐக் காட்டி, இது தான் '145' என்றால் கவர்னர் ஏற்பாரா? இரண்டாவது ஜோடி '145 தானே வேண்டும்? இந்தாருங்கள் 152' என மார் தட்டி, சரஸ்வதி பூஜையன்று நவராத்திரிப் பிரசாதமாக ஆட்சியை எடுத்துச் சென்றது!

வளரும் கலைகள்

நவராத்திரி போன்ற விழாக் காலங்களில், நமது தொன்மையான கலைகளை உயிர்ப்பிப்பதில் மராத்திய அரசியல்வாதிகளுக்கு இருக்கும் ஆர்வம், வேறு எவர்க்கும் உளதோ என சந்தேகமேற்பட்டு விட்டது. 'தமாஷா' என்றொரு புராதன மராத்தியக் கூத்து – இரண்டு கோஷ்டிகளுக்கிடையே கேள்வி – பதில், எதிர்க் கேள்வி என சர்ச்சைகளை நகைச்சுவை மிக்க ஆடல் பாடல் காட்சிகளாக்குவது – மரித்துக் கொண்டிருக்கும் இதற்கு, இவர்கள் எப்படி உயிர் கொடுத்திருக்கிறார்கள், பாருங்கள்! முதல் நாள், தங்களுக்குக் கிடைத்த இலாகாக்களை, "உபயோகமற்ற இலாகாக்கள்" என விமர்சித்தது சிவசேனை. (யாருக்கு உபயோகமில்லை என்பதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை...) மறு நாள், 'ஏமாற்றமாகத்தானிருக்கிறது; இருந்தாலும் வாஜ்பேயிக்கு பிரச்னை தர விரும்பாமல் நாளை பொறுப்பேற்கிறோம்' என கனரக தொழில் இலாகாவைப் பெற்ற ஜோஷி, கனத்த இதயத்துடன் பகன்றார். ஒரு நாள், "பி.ஜே.பி யாருடன் வேண்டுமானாலும் சேர்ந்துகொண்டு அரசமைக்கட்டும்; நாங்கள் வெளியிலிருந்து ஆதரவு தருவோம்" என்றார் தாக்கரே. மறுநாளே "இன்றைய சூழ்நிலையில் அந்தப் பேச்சுக்கே இடமில்லை; நாங்களும் பி.ஜே.பி.யும்தான் நண்பர்கள். முதல்வர் சிவசேனைக்காரர்தான்" என்று விட்டார்.

அதேபோல் புஜ்பல் "காங்கிரஸார் எங்களுக்கு முதலமைச்சர் பதவியும் தர மாட்டேனென்கிறார்கள்; மகத்வபூர்வமான 'போர்ட் ஃபோலியோ' எதையும் கொடுக்க மாட்டேனென்கிறார்கள்; இவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவதில் என்ன அர்த்தமிருக்கிறது? பேசாமல் எதிர்க்கட்சியில் அமரலாம்' என்று விட்டார் முதலில். அப்புறம், காங்கிரஸ் இவர்கள் நிபந்தனைகளுக்கெல்லாம் பெருவாரியாக ஒப்புக் கொண்டு விட்டதும், "ஸ்பீக்கர் பதவி யாருக்கு என்பது அப்புறம் முடிவாகும்; தற்சமயம் விலாஸ்ராவ் தேஷ்முக்தான் முதல்வர்" என்று விட்டார். தேஷ்முக்கும் புஜ்பலும் கைகோத்துக் கொண்டு 'மகாராஷ்ட்ராவின் பொருளாதார முன்னேற்றத்தில் முதலில் அக்கறை செலுத்துவோம்' என்றிருக்கின்றனர். அவரவர் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள குடுமிப் பிடியே நடத்திவிட்டு, மாநிலத்தின் பொருளாதாரத்தைப் பற்றிக் கவலைப்படுவதாக 'தமாஷா'வை முடித்ததை மக்கள் வெகுவாக ரசித்தனர். பின்னணியில், 'அச்சமில்லை அச்சமில்லை' ட்யூனில், "வெட்கமில்லை வெட்கமில்லை" என்ற பாடலை கற்பனையில் ஓட விட்டு, கை தட்டி மகிழ்ந்தனர்.

— ஜெயஸ்ரீ ராஜ்

[redacted]

"அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பினாலே, ஒரு பிரச்னை என்றால் நம்மால் அவர்களைப் பார்க்க முடிவது இல்லை; அவர்களும் தொகுதிப் பக்கம் வருவது கிடையாது. அப்படி இருக்கிற போது, சினிமாக்காரருக்கு வோட்டு போட்டு ஜெயிக்க வைத்தால், அவ்வளவு தான்!" என்கிற அபிப்ராயம் பொதுமக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

ஆனால், அண்மையில் முதலமைச்சர் கருணாநிதி, தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட முப்பெரும் விழாவில், சினிமா டைரக்டரும், பூங்கா நகர்த் தொகுதி எம்.எல்.ஏ.வுமான டி. ராஜேந்தருக்கு 'கலைஞர் விருது' வழங்கினார். "பூங்கா நகர் வாக்காளர்கள் பாராட்டும் எம்.எல்.ஏ.வாக டி. ராஜேந்தர் விளங்குகிறார். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதி வாக்காளர்களிடம் அது போன்ற நற்பெயரைப் பெற வேண்டும்!" என்று டி. ஆரை உதாரணமாகக் கூறிப் பாராட்டியும் பேசினார்.

கலைஞரின் பாராட்டு பற்றி டி. ராஜேந்தரைச் சந்தித்துக் கேட்டோம்...

"தொகுதிக்கு அடிக்கடி போகிறேன். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாளாவது என் தொகுதிக்குப் போய் மக்களைச் சந்திக்கிறேன். தொகுதிக்குள் நான் கட்சி வித்தியாசம் பார்ப்பது இல்லை. இன்றைக்குக் காலையில் தொகுதியில் ஒரு அ.தி.மு.க. வட்டச் செயலாளர் இறந்து விட்டார். நான் போயிருந்தேன். மரணம் என்று இல்லை, கல்யாணம், காது குத்துதல் என்று எதுவானாலும் சரி, தவறாமல் போகிறேன்.

"எம்.எல்.ஏ.வை தொகுதி மக்கள் சந்திக்க முடிவதில்லை என்று ஒரு பொதுவான குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. எம்.எல்.ஏ.வுக்கு வேண்டியவர்கள் எம்.எல்.ஏ. பெயரால் பணம் பெறுகிறார்கள் என்றும் குற்றச்சாட்டு சொல்வார்கள். எனக்கும் என் தொகுதி மக்களுக்கும், இடையில் இப்படி எந்த 'நந்தி'யும் கிடையாது. கல்யாணம், சாவு என்று எந்த விஷயமாகத் தொகுதிக்குச் சென்றாலும் ஆங்காங்கே காரை நிறுத்தி, மக்களுடன் பேசுகிறேன். கட்சிக்காரர்களிடம் விசாரிக்கிறேன். அடிமட்ட நிலவரத்தை நேரடியாக நானே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.

"சென்னை மாநகரத்தில் பெரும் மழை பெய்தபோது, தொகுதியின் சில குடிசைப் பகுதிகள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. காரில் விரைந்தேன். ஒரு கட்டத்துக்கு மேல் கார் போக முடியாதபடி தண்ணீர். குப்பை எடுக்கும் லாரி மட்டுமே செல்ல முடியும். தயங்காமல், குப்பை லாரியில் போய், வெள்ளத்தில் தவித்த மக்களைச் சந்தித்தேன். உடனடியாக நிவாரண மையத்திலிருந்து உணவு வழங்க ஏற்பாடு செய்தேன். வெள்ள நிவாரண நிதி, 'வெட்டு' எதுவும் இல்லாமல், முழுசாக அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்தேன்.

"சில தினங்களுக்கு முன்பு, பல் மருத்துவக் கல்லூரி அருகில் உள்ள குடிசைப் பகுதியில் தீ விபத்து. நாற்பத்து ஆறு குடிசைகள் சாம்பலாகி விட்டன. காலையில் தகவல் வந்தது. எட்டரை மணிக்கு ஸ்பாட்டில் ஆஜராகி விட்டேன். மாநகராட்சி அதிகாரிகள், தாசில்தார், ஆகியோரையும் வரவழைத்தேன். கலெக்டரிடமும், வருவாய்த் துறை அமைச்சரிடமும் பேசினேன். காலையில், சிற்றுண்டி, பகல் உணவு, இரவுச் சாப்பாடு, மறுநாள் காலை சிற்றுண்டி, மதிய உணவு என்று வேளா வேளைக்குக் கிடைக்கச் செய்தேன். தீக்காயம் பட்டவர்களுக்கு மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்தேன். அன்று மாலையே, மாநகராட்சி, நாற்பத்தாறு குடும்பங்களுக்கும் நிவாரணமாக தலா ஆயிரம் ரூபாய், ஐந்து கிலோ அரிசி, வேட்டி, சேலை எல்லாம் வழங்கப்பட்டது. தீ விபத்



தொகுதியில் பிரச்னை என்றால் ஷூட்டிங் கூட ரத்துதான்!

தில், ரேஷன் கார்டு எரிந்து போன குடும்பங்களுக்கு, புது கார்டு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசினேன். மக்களுக்கு இதைச் செய்ததுடன் நான் நிற்பதில்லை. தக்க சமயத்தில், உடனிருந்து உதவிய அத்தனை அதிகாரிகளுக்கும் நன்றி சொல்லவும் நான் தவறுவதில்லை.

"மீன் பாடி வண்டிக்காரர்களுக்கும், போலீசுக்கும் இடையே பிரச்னை வந்த போது, அந்த ஏழைகளிடம் பணம் பறிப்பது தானே உங்கள் நோக்கம்?' என்று போலீசுடன் வாதாடி பிரச்னையைத் தீர்த்து வைத்தேன். தங்கசாலைப் பகுதியில், பிளாட்பாரத்தில் கடை வைத்திருக்கும் அன்றாடம் காய்ச்சிகளை அப்புறப்படுத்த மாநகராட்சியும், போலீசும் முயன்றபோது, அவர்கள் கூட்டமாக என் வீட்டுக்கே வந்து விட்டனர். போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் கடை போடுவது சரியில்லை என்று அவர்களிடம் சுட்டிக்காட்டினேன். அந்த ஏழைகள் பிழைப்பில் மண்ணைப் போட்டு விடாதீர்கள் என்று காவல் துறையினரிடம் கூறினேன். கடைசியில், ரோட்டின் ஒரு பக்கத்தில் மட்டும், போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் கடை போடும்படி இருதரப்பினரிடையேயும் காம்ப்ரமைஸ் செய்து வைத்தேன்.

"கீழ்த்தட்டு மக்கள் மட்டும்தான் என்று இல்லை, நகைக் கடைக்காரர்களிடம் போலீஸ், 'இந்தத் தங்கம் ஏது? இதற்கு வருமான வரி கட்டியிருக்கிறீர்களா?' என்று தொல்லை தந்தபோது, 'நீங்கள் போலீசா? வருமான வரித்துறை அதிகாரிகளா?' என்று வாதாடினேன். போலீஸ் தொல்லை நின்றது.

"போலீஸ் அதிகாரிகளிடம் நான் வாதாடினாலும், டாடா சுமோ காரில் பத்து அடியாட்கள் சகிதம் போய் ஸ்டேஷனில் இறங்கி, அடாவடித்தனம் செய்ய மாட்டேன். அவர்களும் மனிதர்கள்; அரசு அதிகாரிகள் என்று உரிய மரியாதை கொடுக்கத் தவற மாட்டேன். எனவே, நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேட்கிறார்கள்; அவர்களுக்கும் கடமையாற்ற ஏதாவது பிரச்னை என்றால் மேலதிகாரிகளிடமோ, அவசியமானால் அமைச்சரிடமோ நான் பேசுகிறேன். அவ்வளவு ஏன் சார்! என் தொகுதியின் பிராந்திக் கடை ஏலம், என்னுடைய எந்த விதமான குறுக்கீடும் இன்றி நடக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

"எங்கள் தொகுதியைச் சேர்ந்த துர்கா என்ற பெண் ஈவ் டீஸ் செய்யப்பட்டு, இறந்த போது, குற்றம் புரிந்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினேன். அந்தப் பெண்ணின் குடும்பத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் நிவாரண நிதி கிடைக்க ஏற்பாடு செய்தேன்.

"நான் எத்தனை சிறிய, பெரிய உதவிகளை யாருக்குச் செய்தாலும், 'நன்றி' என்ற வார்த்தையைத் தவிர, வேறு எதையும் பிரதியுபகாரமாகப் பெற்றது கிடையாது. தொகுதியில் பிரச்னை என்ற போது, ஷூட்டிங்கை, ரெக்கார்டிங்கை, முக்கியமான அப்பாயின்ட்மென்ட்களைக் கூட ரத்து செய்து விட்டு விரைந்திருக்கிறேன்.

"என் தொகுதியில் ஆயிரம் பிரச்னைகள் இருக்கின்றன. நான் ஏதோ சில நூறுகளைத் தீர்த்திருக்கலாம். இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும்!"

"அடுத்த முறை போட்டியிட்டால், நீங்கள் நிச்சயம் வெற்றி பெற்று விடுவீர்களில்லையா?"

"இந்த முறை தேர்ந்தெடுத்ததற்காகத்தான் நான் இப்போது உழைத்துக் கொண்டிருக்கிறேன். அடுத்த தேர்தலை மனத்தில் வைத்துக் கொண்டு இல்லை!"

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

40 குறையொன்றுமில்லை

ஏகாதசி உபவாசம் என்று ஒருத்தர் வெளியிலே சொல்லி விட்டார். ஆனால் அவரால் உபவாசம் இருக்க முடிய வில்லை. உள்ளுக்குள்ளே ரவா கேசரி பண்ணிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்! கதவை யெல்லாம் தாள் போட்டுக் கொண்டிருக்கிறார்! அவர் என்ன நினைக் கிறார்...? ஒருத்தருக்கும் தெரியாது நாம் கேசரி சாப்பிடுவது என்று நினைக்கிறார். ஆனால், அவனை ஏமாற்ற முடியுமா?

சர்வோபத்ருஷ்டா! எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பவன் அவன்.

சாஸ்திர ரீதியாக ஆராய்ந்து பார்த்தால் ஏகாந்தம் என்பதே கிடையாது.

'அவர் என்ன பண்ணிக் கொண்டிருக் கிறார்?' என்று கேட்டால், ஏகாந்தமாக உள்ளே உட்கார்ந்திருக்கிறார்...' என்று பதில் சொல்வது பொருந்தாது. 'ஏகாந்தமாய்' உட்கார்ந்திருப்பவரைக் கூட பதினாலு பேர் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஏகாந் தம் என்று எதைச் சொல்வது...? பகவான் பார்த்துக் கொண்டிருக்கிறான்; எட்டு திக்கு களும் பார்த்துக் கொண்டிருக்கின்றன; மேலே சூரியன் பார்த்துக் கொண்டிருக் கிறான்; கீழே பூமிக்கு அதிஷ்டான தேவதை பார்த்துக் கொண்டிருக்கிறது; சந்திரன் பார்த்துக் கொண்டிருக்கிறான்; பசு பார்த்துக் கொண்டிருக்கிறது.

– இத்தனை பேரும், யமனுக்குப் பக்கத் திலே உட்கார்ந்திருக்கிற சித்ரகுப்தன் இருக் கிறான் பாருங்கள்... அவனிடம் போய் பதி னாலு பேரும் சொன்னால்தான் எழுதுவான் கணக்கு! எல்லோரும் ஒரே மாதிரி சொன்னால்தான் எழுதுவான்! இத்தனை நாளாக இவர் களுக்குள்ளே வித்தியாசமே வரவில்லை. ஆகையினாலே இவர்களுக் குள்ளே அபிப்பிராய பேதமே கிடையாது. எல்லோரும் ஒரே மாதிரி கணக்குச் சொல்ல, அவன் எழுதிக் கொண்டிருக்கிறான்!

ஏகாதசி அன்று இப்படி மறைந்து கொண்டு சாப்பிட்டாரே, அவரை அத் தனை பேரும் பார்த்திருக்கிறார்கள்!

ஆகையினாலே, அவனுக்குத் தெரியாமல் ஒன்றும் நாம் பண்ணிவிட முடியாது!

மனத்துள்ளான் – இங்கே, மனத்துள்ளே இருக்கிறவன்தான் மாகடல் நீருள்ளான், மலராள் தனத்துள்ளான் – அந்த மஹா லக்ஷ்மியுடன் அந்தரங்கமாக இருக்கிறான். சர்வ வியாபியாக அவன் இருந்து கொண்டி ருக்கிறான். சர்வ அந்தர்யாமியாக இருந்து கொண்டு செயல்படுத்துகிறான்.

– பூர்வார்த்தம் இது. உத்தரார்த்தத்திலே அந்த எம்பெருமான் எப்படி இருக்கிறான் என்றால், அனந்த கல்யாண நிதயே விஷ் ணவே நம : – இப்படி மனத்துள் இருக்கிற அந்த எம்பெருமான் அனந்த கல்யாண குணங்களுக்கு உறைவிடமாக இருக்கிறான்.

எண்ணிறந்த கல்யாண குணங்கள் அவனிடத்திலே இருக்கின்றன.

உபநிஷத் 'நிர்குண · ிரந்தர :' என்கிறது அவனை. பாஷ்யக்காரர் என்ன சொல் கிறார்?.... 'கெட்ட குணங்கள்' அற்றவன் என்று பொருள்' என்கிறார். அவரே இன் னொரு இடத்தில், சரணாகதி கத்யத்திலே சொல்கிறபோது, 'கல்யாண குணகணங் களாகிய கூட்டங்களுக்குச் சமுத்திரமாக இருக்கக்கூடியவனே!' என்கிறார். கல்யாண குணநிதி!

அதனால்தான் ஆசார்யர்களெல்லாம் வியாக்யானம் பண்ணுகிறபோது, 'ஸ்ரீயஃப்பதியாய், அவாப்த சமஸ்த காமனாய்...' என்று ஆரம் பித்து பட்



டியல் மாதிரி சொல்கிறார்கள்.

சமஸ்த கல்யாண குணோ பேதனாய், எல்லாவித கல்யாண குணங்களும் பொருந்தியவனாய் இருக்கிறான். கெட்ட குணங்கள் அவனிடத்தில் கிடையாது.

அதனால்தான் ருக்மிணி, 'ச்ருத்வா குணா' – என்னும்போது நமக்குச் சந்தேகம் வரும். 'உன்னிடத்தில் உள்ள கெட்ட குணத்தையும் கேள்விப்பட்டேன்; நல்ல குணத்தையும் கேள்விப்பட்டேன்' என்று சொன்னால் சந்தேகம் வராதா?

கெட்ட குணமே கிடையாது என்று சொல்லிவிட்டு, 'ருக்மிணி இப்படிச் சொன்னாள்' என்றால் சந்தேகம் வராதா?

யார் அவனிடத்திலே ரொம்ப ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களை வெறுமே அழவைத்தல் என்ற குணமும் அவனிடத்திலே இருக்கிறது. 'அந்த குணத்தைத்தான் கேள்விப்பட்டேன்' என்கிறாள் ருக்மிணி.

'இப்போது அப்படிப்பட்ட சோதனைக்கெல்லாம் அவகாசமில்லை. உடனே வந்து என்னைக் கைப்பிடிக்க வேண்டும். அந்த கெட்ட குணத்தைக் கொஞ்சம் தள்ளி வைத்து விடுங்கள்' என்று ருக்மிணி பகவானிடத்திலே சொல்கிறாள்.

ருக்மிணி பகவானிடத்திலே கெட்ட குணம் என்று சொல்வது பக்தர்களைப் பரீக்ஷை பண்ணுகிற இந்த குணம்தான். ரொம்ப பரீக்ஷை பண்ணுவான் அவன்.

ஆகையினாலே அந்த பரீக்ஷையிலே ஒருத்தர் உத்தீர்ணர்களாகிவிட்டால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் சொல்லி முடியாது. அப்படி விசேஷ அனுக்கிரஹம் பண்ணுவான் பரமாத்மா.

கஷ்டத்தையும் கொடுப்பான்; அனுக்கிரஹமும் பண்ணுவான். அவன் திருவடியை நாம் சிக்கெனப் பிடித்துக் கொள்ளவேண்டும். நல்ல குணங்கள் எத்தனையெத்தனையோ அவனிடத்தில்.

அப்படிப்பட்ட குணங்களுக்கெல்லாம் நிதியாய் இருக்கக்கூடிய விஷ்ணவே நம : அந்த விஷ்ணுவின் பொருட்டு நமஸ்காரம்

என்று சொல்கிறார் ஆசார்யர் ராமானுஜர்.

'பகவானுடைய லீலைகளை வந்து பாருங்கள்' என்று வேதமே நம்மை அழைக்கிறது. லீலையை கர்மா என்ற சொல்லால் குறிப்பிடுகிறது.

நாமெல்லாம் கர்மாக்கள் பண்ணுகிறோம். புண்ய கர்மாக்கள்; பாப கர்மாக்கள் – இரண்டும் பண்ணுகிறோம். ஜன்மாந்திரத்திலிருந்து வரக்கூடியதனாலே இவையெல்லாம் பாப கர்மா புண்ய கர்மா என்று அழைக்கப்படுகின்றன. பகவான் செய்கிற கர்மா நம்மைப் போன்ற- நாம் பண்ணுவது போன்ற கர்மா அல்ல. அந்த கர்மாவுக்கு லீலை என்று பெயர். பகவத் லீலா ரஸம்.

கீதையிலே பகவான் அவனே இந்த சப்தத்தை உபயோகப்படுத்தியிருக்கிறான் :

மே ஜன்ம திவ்யம்
மே கர்ம திவ்யம்

என்னுடைய பிறப்பு உயர்ந்தது; என்னுடைய கர்மா திவ்யம் என்கிறான்.

ஆகையினால் விஷ்ணுவின் கர்மாக்களைப் பாருங்கள் என்றால் என்ன அர்த்தம்...? விஷ்ணுவின் லீலைகளைப் பாருங்கள்!

இந்த பூலோகத்தில் அவதாரம் பண்ணி பல லீலைகளிலே விஷ்ணு என்கிற பெயரிலே அவன் அழைக்கப்படுவதைக் காண்பிக்கிறான். நாம் பல விதமாக அவனுடைய பெருமையை உபநிஷத் வாக்கியத்தினாலும் வேத வாக்கியத்தினாலும் அனுபவிக்கிறோம். அதே மாதிரி, அவதார காலத்திலேயும் விஷ்ணு சப்த பெருமையைக் காட்டியிருக்கிறான்.

விஷ்ணு சப்தம் மட்டுமல்ல; சஹஸ்ர நாமங்களையும் பார்த்தோமானால் அவன் பண்ணின லீலா ரஸம் மொத்தம் அதிலே வந்து விடுகிறது. நாமாவாக இருக்கிறது. அதிலே, அவதார காலத்திலே ஒவ்வொரு அவதாரத்திலும் பண்ணிய லீலைகள் தெரிவதனாலே இந்த நாமாக்களைச் சொன்னாலே பகவானுடைய அவதாரம் அந்த அவதாரத்தால் கண்ட லீலைகள் எல்லாம் முடிந்து விடுகின்றன. அவன் பெருமையை விளக்கக்கூடியதாக இந்தத் திருநாமங்கள் அமைந்திருக்கின்றன.

பாஷ்யக்காரர் ராமானுஜர் செய்த மங்கள சுலோகத்தில்

அசேஷ சித சித் விஷ்ணு
சேஷினே சேஷசாயினே

என்றது போல, வேதார்த்த ஸங்க்ரஹத்திலே ஆரம்பத்திலே மங்கள சுலோகம் சொல்லியிருக்கிறார் :

நிர்மலானந்த கல்யாண நிதயே விஷ்ணவே நம :

– இப்படி ஆரம்பத்திலே மங்கள சுலோகத்திலே விஷ்ணுவை வணங்குகிறார்.

எப்படிப்பட்ட விஷ்ணுவை வணங்குகிறேன் என்று கேட்டால், எல்லா சரா சரங்களுக்குள்ளும் உறைபவனாய், அந்தர்யாமியாய் எல்லாவற்றையும் தனக்குத் திருமேனியாய் உடையவனான விஷ்ணுவை வணங்குகிறேன்.

விசிஷ்டாத்வைத பிரவர்த்தக ஆசார்யரானதனாலே சரீர – சரீரி பாவத்தை எடுத்துச் சொல்கிறார். அவனுக்கும் உலகத்துக்கும் என்ன சம்பந்தம் என்றால், இவை அனைத்தும் அவனுக்குச் சரீரமாய் இருக்கிறது. அவன் அந்தராத்மாவாக இருக்கிறான்.

இந்த சரீரம் இருக்கிறது. இந்த ஆத்மா எப்படி ஏவுகிறதோ அப்படித்தான் சரீரம் வேலை செய்கிறது. 'எழுந்திரு' என்று சொன்னால், உடனே எழுந்திருக்கிறது.

''நடிகை இந்தப் படத்தில் நடிக்க ரொம்பக் கூச்சப் படறாங்களா, ஏன்?''

''கவர்ச்சி காட்டாமல் நடிக்க வேண்டியிருக்காம்!''





''நானும் பார்க்கறேன், ஒவ்வொரு தடவையும் அடக்கமான மனைவி கேரக்டரை வைச்சே படம் எடுக்கறீங்களே, ஏன்?''

''நிறைவேறாத ஆசையை தணிச்சுக்கத்தான்!''

– வெ. ராஜாராமன்

இந்த ஆத்மாவையும் ஏவக்கூடியது பரமாத்மா. ஆனால் இந்த சரீரம் ஆத்மாவுக்கு அதீனமாக இருக்கிறது. அது இட்ட வழக்காய் வேலை செய்கிறது. எல்லாமே பகவானுக்கு சரீரம் என்றால் அவன் ஆத்மாவாய் இருக்கிறான். அவையெல்லாம் அவன் சொன்ன பிரகாரம் செய்கின்றன என்பது நமக்குத் தெரிய வேண்டும். அவனிடத்திலிருந்து இது பிரிக்க முடியாமல் ஏக தத்வமாக இருக்கிறது.

ஏக தத்வமாய் இருக்கிறது என்றால் விசிஷ்டாத்வைத பிரவர்த்தக ஆசார்யர் ராமானுஜர் அத்வைதம் சொல்கிறாரா! என்று சந்தேகம் வரும்.

அவர் சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். விசிஷ்டமான அத்வைதம். அத்வைதம் இரண்டுமே ஒன்றுதான்; இவைகளுடன் சேர்ந்த ஒன்று என்றார். இவைகளுடன் சேர்ந்த ஒன்று என்று ஆகும்போது விசிஷ்டாத்வைதமாகிறது.

விசிஷ்டாத்வைதத்தில் எழுதினால், வாசுதேவன் இல்லாத பொருள் இல்லை என்று சொல்வோம்.

எல்லாவற்றினுள்ளும் எம்பெருமான் இருக்கிறான்.

எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு நிற்கிறான் தன் திருமேனியிலே. எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாகவும் இருக்கிறான்.

எப்படித் தாங்குகிறான் என்றால்

அபிரதக் சித்த விசேஷணம்

பிரதக் சித்த விசேஷணம் - என்று இரண்டு சொல்வார்கள்.


பிரதக் என்றால், தனித்து பிரித்து எடுத்து வைக்கக்கூடியது. அபிரதக் என்றால் பிரிக்க முடியாமல் சேர்ந்து இருப்பது.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் காட்டும் கதை உண்டு.

(தொடரும்)

அருள்வாக்கு

கானம் பண்ணுவது, நடனம், நாடகம் மூன்றும் சேர்ந்தது காந்தர்வ வேதம். இதனால் நமக்குப் பணம் வராது. வயிறு ரொம்பாது. இவற்றைக் கச்சேரி, ஸதிர் என்று பண்ணுகிறவர்களுக்கு, நடிக்கிறவர்களுக்கு, நடத்துகிறவர்களுக்குத்தான் வயிறு ரொம்புகிறது, பர்ஸ் ரொம்புகிறது. பார்க்கப் போகிற நாம் நம் வயிற்றுக்காக வைத்துக் கொண்டிருப்பதை அங்கே கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வருகிறோம். 'யுடிலிடி' என்ற பாயிண்ட்டில் இப்படி நஷ்டப்பட்டாலும் மனஸுக்கு மகிழ்ச்சி, உல்லாஸம், உத்ஸாஹம், பொழுது போக்கு என்ற லாபம் கிடைப்பதால் இப்படிச் செய்கிறோம். இது மட்டும் 'யுடிலிடி' இல்லையா? கொத்தவரக்காய் வாங்கினால் சாப்பிடலாம். அதே காசுக்குப் பூ வாங்கி flower vase-ல் வைத்தால் சாப்பிட முடியாதுதான். இருந்தாலும் இதைப் பார்த்தால் நேத்ரானந்தமாயிருக்கிறது, மனம் குளிர்கிறது என்று, கொத்தவரக்காய் வேண்டாமென்று இந்த 'பொக்கே'யை வாங்குகிறான் என்றால் இதற்கு 'யுடிலிடி' இல்லை என்று எப்படிச் சொல்வது?



அன்றாட அலுவல்களில் பொறுப்புகளில் அநுஷ்டானங்களில் அலுத்துக் களைத்துப் போகாமல் மனஸுக்கு உத்ஸாஹம் தரவேண்டியதுதான் என்றே பெரியவர்கள் 'காந்தர்வ வேதம்' என்று உபயோகமில்லாததாகத் தோன்றுகிற பாட்டையும், கூத்தையும் வைத்திருக்கிறார்கள். மற்றவற்றின் உபயோகத்தை நாம் உணர்வதற்கான உத்ஸாஹத்தைத் தரும் பெரிய உபயோகம் இவற்றுக்குத் தான் இருக்கின்றன. வாழ்க்கைப் போராட்டத்தில் நமக்கு ஏற்படுகிற பாரத்தை மறந்து கொஞ்ச நேரமாவது இறக்கி வைப்பது 'காந்தர்வவேதம்' செய்யும் பெரிய உபகாரம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

நூறுரூபாய் ஆடையில் கண்ணியம்!

"திரைப்பட உலகில் உள்ள உங்கள் சகாக்களுள் யார் மிக நேர்த்தியாக (திரையில் அல்ல) உடுத்துவதாக நினைக்கிறீர்கள்? ஏன்?" என்ற நம் கேள்விக்கு சில திரைப் பிரபலங்கள் பதில் சொல்கிறார்கள்...



தங்கர் பச்சான்:
விஜயகாந்த் போடுற டிரஸ் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ரொம்ப கண்ணியமான உடை. நாற்பது அம்பது ரூபாய் பெறுமானமுள்ள வேஷ்டி சட்டை. மொத்தமே நூறு ரூபாய்க்குள்ள அடங்கிடும். அந்த உடை லட்சம் பேர் நின்னாக் கூடத் தனியாகத் தெரியும். 'கள்ளழகர்' படத்துல மேக்கப்பே போடாம நடிச்சார். அவரைப் பாக்கறப்போ ஆச்சர்யமாகவும், பயமாகவும் இருக்கும்.



சூர்யா:
டிரஸ் விஷயத்துல எனக்கு ரொம்பப் பிடிச்சது கமல்சார்தான். அவர் ஒரு தடவை போட்ட டிரஸ்ஸ திரும்பப் போட மாட்டார். டிரஸ் ஸ்டைலை மாத்திக்கிட்டே இருப்பார். அவரோட ஹேர் ஸ்டைல், ஷூஸ், வாட்ச், டீ ஷர்ட் எல்லாமே புதுசு புதுசா இருக்கும். அவரோட டிரஸ் செலக்ஷன் எல்லாமே கலர் சென்ஸோட இருக்கும். இளைய தலைமுறைல விஜய், அஜித் எல்லாருமே நல்லா டிரஸ் பண்றாங்க.



கரண்:
எனக்குப் பொதுவா ஒயிட் அண்டு ஒயிட் போடுறவங்களை ரொம்பப் பிடிக்கும். வெள்ளைங்கறது தூய்மைக்கு அடையாளமா இருக்கு. ஃபிரெஷ்ஷா இருக்கு. அதைப் பார்த்த உடனே ஒரு மரியாதை ஏற்படுது. உதாரணமா சிவாஜி சார், ரஜினி சார், விஜயகாந்த் சார் எல்லாரும்









வெள்ளை டிரஸ் போட்டுட்டு வர்றப்போ ரொம்ப ட்ரிம்மா இருப்பாங்க. எனக்குக் கூட ஒயிட் அண்ட் ஒயிட் போட ரொம்பப் பிடிக்கும். என் வயசுக்கு அது அதிகமாப்படும்கறதால நான்

போடுறதில்லை.

மனோ (பின்னணிப் பாடகர்):

எனக்குத் தெரிஞ்சு சினி ஃபீல்டுல நல்லா, நீட்டா டிரஸ் பண்றது நான்தான் (சிரிக்கிறார்). நடிகர் திலகம் சிவாஜி உடுத்துகிற உடை எனக்கு ரொம்பப் பிடிக்கும். எளிமையான உடையோட அவரைப் பார்க்கறப்போ பக்தி கலந்த மரியாதை வரும்.

வினீத்:

அமிதாப்பச்சன்தான்! அவர் போடற டிரஸ் எல்லாமே அவர் பெர்சனாலிட்டிக்கு ஏற்ற மாதிரி நீட்டா இருக்கும்.

சார்லி:

எனக்குப் பிடிச்சவர் கே. பாலசந்தர் சார்தான். அவரோட டிரஸ் எப்பவுமே பெர்ஃபெக்ட்டா இருக்கும். ஷூட்டிங் கொஞ்ச நேரம் ஜாஸ்தியாகுதுன்னா உடனே போய் குளிச்சிட்டு, டிரஸ் மாத்திக்கிட்டு வந்து உட்கார்ந்திருப்பார். ஹி இஸ் ஆல்வேஸ் ஃபிரெஷ்.

நடிகைகளில் எனக்கு இஷா கோபிகர் டிரஸ் பண்றது ரொம்பப் பிடிக்கும். காடியா இல்லாம, சிம்பிளா அவங்க டிரஸ் பண்ற விதம் அவங்களுக்கு இன்னும் அழகா இருக்கும்.

லிவிங்ஸ்டன்:

மணிரத்னம் சார் ரொம்ப நல்லா டிரஸ் பண்ணுவார். சிம்பிளா, அழகா இருக்கும். அப்புறம் டைரக்டர் விக்கிரமன் டிரஸ் பண்றது கூட அழகா சென்டிமெண்டலா இருக்கும். ஒவ்வொரு கலருக்கும் ஒரு எமோஷன் இருக்கும். ஆருடம், ஜோசியத்துல நம்பிக்கை இருக்கறவங்க கலர் பார்த்து மோதிரம் போடுறது கூட அதுக்காகத்தான்.

நடிகைகளில் கலர் சென்ஸோட சில்க் ஸ்மிதா டிரஸ் பண்ணிக்கிட்டு இருந்தாங்க. இப்போ குஷ்பு நல்லா டிரஸ் பண்றாங்க.

டெல்லி கணேஷ்:

எனக்குப் பிடிச்சது சிவாஜி சார்தான். வீட்ல இருந்தா வெள்ளைச் சட்டை வெள்ளை வேட்டி. ஏதாவது ஃபங்ஷன்னா வெள்ளை ஜிப்பா. அதுவும் டிரஸ் நல்லா கஞ்சி போட்டு வெள்ளை வெளேர்னு மொடமொடப்பா இருக்கும். அந்த சிம்பிளான டிரஸ்ஸோட அவர் நடந்து வர்றதே சிங்கம் நடந்து வர்ற மாதிரி இருக்கும்.

ரேவதி:

வாழ்க்கையில் எவ்வளவோ பிரச்னைகள் இருக்கு. அதை விட்டுட்டு யாரு எப்படி டிரஸ் பண்றாங்கங்கிறது அவசியமில்லாத கேள்வி. சாரி! இந்த மாதிரி கேள்விக்கு நான் பதில் சொல்ல மாட்டேன்.

தொகுப்பு: **கே. பாலசுப்ரமணியன்**

ஆதீனம் கேட்ட சினிமா பாடல்!



• 'விகடம்' கிருஷ்ணமூர்த்தி.



• டி.ஆர். ராமச்சந்திரன்

"1950ல் ஒரு தடவை நான், டி.ஆர். ராமச்சந்திரன், சின்ன அண்ணாமலை மூணு பேரும் தஞ்சாவூர், காரைக்கால் எல்லாம் போனோம். அப்போ டி.ஆர். ராமச்சந்திரன் வைஜயந்திமாலாவோட நடிச்ச 'வாழ்க்கை' படம் பிரமாதமா ஓடிட்டிருந்தது. ராமச்சந்திரன் நல்ல மாதிரி. சாது. பேசறபோதே தமாஷாத்தான் பேசுவார். மூணு பேரும் மாயவரம் பக்கம் வந்துட்டிருந்தபோது, நான் 'தருமபுர ஆதீனத்தைப் போய்த் தரிசனம் பண்ணிட்டு வரலாமே'ன்னேன். 'அதுக்கென்ன, போய்ப் பார்த்துடுவோம்'னாரு சின்ன அண்ணாமலை. அவர்ட்ட எங்களை அறிமுகம் பண்ணிட்டு, 'இவங்க ரெண்டு பேரும் தமிழ் சினிமா நடிகர்கள். பாட்டெல்லாம் கூடப் பாடுவாங்க'ன்னுட்டார் சின்ன அண்ணாமலை. 'பாட்டா, என்ன பாட்டு?'ன்னு கேட்டுட்டு, பாடச் சொன்னார் அவர். "டடடா டடடா பாடுங்க"ன்னுட்டார் சின்ன அண்ணாமலை! அப்போ பிரபலமா இருந்த 'உன் கண் உன்னை ஏமாற்றினால், என் மேல் கோபம் உண்டாவதேன்? டடடா டடடா டடடா டடடா, டடடா டடடா டட்டாட்டா!'ன்னு டி.ஆர். ராமச்சந்திரனோட சேர்ந்து நானும் பாடினேன். பாவம், ஆதீனம்! இப்படியொரு பாட்டை அவர் எதிர்பார்க்கவேயில்லை!" என்று பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார் 'விகடம்' கிருஷ்ணமூர்த்தி.

– எஸ்.வி.என்., படம்: ஸ்ரீஹரி



காஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் அன்னதானம் காசியில் செய்வோம்

ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் அருளைப் பெறுவோம்!



மாதாமாதம் அமாவாசை அன்று புண்ணிய ஸ்தலமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...

பேரன்புடையீர் வணக்கம். வரும் தீபாவளி திருநாளில் தங்களுடைய வாழ்வில் எல்லா நலன்களும் பெற்று நலமுடன் வாழ ஸ்ரீ அன்னபூரணி அன்னையிடம் வேண்டுகிறோம்.

காசி நகரத்தைப் பற்றியும் காசியின் புனிதத்தைப் பற்றியும் அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்துக்களின் புனித மண்ணில் புண்ணிய பூமியில் 'அன்னபூரணி' தாயே கோயில்கொண்ட திருத்தலத்தில் அன்னதானம் செய்வது தானத்திலேயே சிறந்த தானமாகும். 1999 புரட்டாசி மாதம் மஹாளய அமாவாசை அன்று முதல் காசியில், **மாதாமாதம் அமாவாசையில் அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு இந்தப் புனிதப்பணியில் நீங்களும் பங்குகொள்ள வேண்டுமென்று அன்புடன் அழைக்கிறோம்.**

நினைத்தாலே மனதிற்கு நிம்மதி தரும் இப்புனித ஸ்தலத்தில் அன்னதானம் செய்ய எண்ணம் கொண்டவர்களின், பிரார்த்தனை செய்து கொண்டவர்களின், வேண்டுதலாக நினைத்துக் கொண்டவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம்.

புண்ணிய ஸ்தலமான காசியில் அன்னதான திருப்பணியை செய்து புண்ணியத்தைப் பெற ஆன்மிக அன்பர்கள், பக்தர்கள், பெரியவர்கள் அனைவருக்கும் இது ஒரு நல்ல வாய்ப்பு. இந்த அன்னதான பணியில் பங்குபெறும் அன்பர்கள் எல்லோருமே ஏதேனும் ஒரு வகையில் நன்மை அடைந்து வருகின்றனர். அவரவர்

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் போன்றவற்றையும் தெரிவித்தால் தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று அன்னதானம் செய்து, பிரசாதத்துடன் காசி ஸ்ரீ அன்னபூரணியின் வண்ணப்படமும் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகள் அவரவர் விருப்பத்திற்கேற்ப பணமாகவோ அல்லது பொருளாகவோ (அரிசி, நெய், பருப்பு வகைகள், புளி) கொடுக்கலாம்.

அன்னதான சேவையில் பங்குபெறும் ஆன்மிக அன்பர்கள் நன்கொடையை M.O/D.D/Cheque ஆகவோ (Sri Annapoorani Annadhana Arakkattalai, Chennai-4.) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைத்து ரசீது அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பொருள்கள் அனுப்புவோர் ABT / TVS பார்சல் மூலம், சென்னை-4க்கு அனுப்பி வைத்து எங்களுக்கு தெரிவித்தால் நாங்கள் உடனே Delivery எடுத்துக்கொள்கிறோம்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 என ஆன்மிக அன்பர்கள் அனுப்பும் தொகைக்கு தகுந்தவாறு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகம் அன்பளிப்பாக கொடுக்கப்படும். இதை தாங்கள் பூஜையறையில் வைத்து பூஜித்து விசேஷம் பெறலாம்.

- ★ தாங்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறோம்.
- ★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பிவைக்கிறோம்.
- ★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.
- ★ ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பிவைக்கிறோம்.
- ★ ரூ.5000/- அனுப்பும் அன்பர்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து வாழ்நாள் முழுவதும் பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். மேலும் தாங்கள் விரும்பும் காலத்தில் சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தொடர்ந்து பிரசாதம் மற்றும் 'ஆன்மீகம்' மாத இதழ் அனுப்பி வைக்கிறோம்.

அன்னதான கைங்கரிய அன்பர்களுக்கு சிறப்பு சேவை

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்ட பிரதானம் காசியிலும், (ஸ்ரீ விஷ்ணு பாதம்) கயாவிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக மிகவும் சிறப்பான முறையில் "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை" மூலம் காசியிலும், கயாவிலும் புரோகிதர்களைக் கொண்டு பித்ருக்களுக்கு பிண்ட பிரதானம் செய்யப்படுகிறது.

பிண்ட பிரதானம் செய்பவர்களுக்கு அவரவர்கள் தொகைக்கு தகுந்தவாறு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், கயாவில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணு பாதமும் அன்பளிப்பாக கொடுக்கப்படும். இதை தங்கள் பூஜையறையில் வைத்து பூஜித்து விசேஷம் பெறலாம்.

காசியிலும், (ஸ்ரீ விஷ்ணு பாதம்) கயாவிலும் பித்ருக்களுக்கு பிண்ட பிரதானம் செய்யும்போது விருப்பமுள்ளவர்கள் கோதானமும், வஸ்த்ர தானமும் செய்யலாம்.

அவரவர்கள் கோத்ர அனுஷ்டானங்களுக்கு தகுந்தபடி ஒரு தொகை காசியிலும், கயாவிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் விருப்பம் உள்ளவர்கள் கடிதம் மூலமாகவோ (அ) நேரிலோ தொடர்புகொண்டு முழு விபரங்கள் பெறலாம்.



Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான அறக்கட்டளை

SRI ANNAPOORANI ANNADHANA ARAKKATTALAI (Regd.)

31/1, Nadu Street, (Opp. Kapaleeswarar Koil)

Mylapore, Chennai - 600 004. Ph : 4958086

4

எப்படியேனும், எதை இழந்தேனும் மண்டித் தெருவின் திமிரை அடக்கியே தீர வேண்டும் என்கிற வெறி அணையாத எரி கல்லாய் நெஞ்சில் கனன்றது சங்கரனுக்கு.

'கட்சி முக்கியமில்லை. கட்சித் தலைவன் முக்கியமில்லை. ஏன், இந்த எதிர்நீச்சல் போட முடியாத எம்.எல்.ஏ பதவிக் கூடத் தேவையில்லை. மண்டித் தெரு கொடுங்கோன்மையை ஒழித்தால் போதும். இந்தக் கட்சி இல்லேன்னா இன்னொரு கட்சி, இன்னொரு தலைவன். வைராக்கியம்தான் முக்கியம். வெற்றிதான் முக்கியம். புறமுதுகு அசிங்கம். பின் வாங்குவது பேடித்தனம். மண்டியிடுவது மனுஷனா பிறந்ததுக்கு அர்த்தமில்லாத செயல். அதைவிட எதிர்த்து நின்னு செத்துப் போகலாம்.

சங்கரனுக்குள்ளிருந்த பிடிவாத மனம் வாளேந்திற்று.

தன்னை நம்பி பணம் புரட்டி வந்து பிராந்திக்கடை ஏலம் கேட்டு எடுத்த பதினேழு பேருக்கும் வார்த்தை மட்டும் நம்பிக்கையாய்க் கொடுத்தான்.

"நீங்க தைரியமாய் இருங்க..."

"வேணாங்க, விட்டுடலாம். மண்டித்தெரு நீங்க நினைக்கிறமாதிரி சாதாரணமில்லை. மோத முடியாது."

"ஏன் மோத முடியாது. அவங்களும் நம்மை மாதிரி மனுஷங்கதான். கொம்பா முளைச்சிருக்கு. என் கூடப் பக்கபலமா இருங்கன்னு கூட உங்களைக் கேட்கலை. தைரியமா இருக்கன்னுதான் கேட்கிறேன். ரெண்டு நாள் டைம் போதும். உங்களுக்குக் கடை ஏற்பாடு பண்றேன்."

"பிடிவாதமாப் பேசாதிங்க. விட்டுத்தான் பிடிப்போம். இது ஆரம்பம் நமக்கு. ஒரு காம்பரமைஸ்"க்கு வேணும்னா ஏற்பாடு செய்யலாமே...?" பதினேழு பேரில் ஒருத்தர், சங்கரன் மனதை மாற்ற எண்ணிக் கோரினார். சங்கரன் அவரை முறைத்துப் பார்த்தான்.

"என்ன காம்ப்ரமைஸ்... எங்களால முடியாதுப்பா. நாங்க தோத்துப் போயிட்டோம். நீதான் பலவான். உன்னை எதிர்த்து எங்களால ஒண்ணும் செய்ய முடியாது. இந்தா நீயே வைச்சுக்கன்னு எல்லாக் கடையையும் தூக்கிக் கொடுத்துட்டு உயிரில்லாத வெறும் உடம்பா வந்துடறதா...?"


"ப்ளீஸ். கோபம் குறைங்க. அப்படியில்லை. மேற்கொண்டு இவ்ளோ பணம் தாங்கன்னு சேர்த்து வாங்கிக்கலாம். லாபம்தானே, நஷ்டமில்லையே... இல்லேன்னா பாதிக் கடை அவங்களுக்கும் பாதிக் கடை நமக்கும்ன்னும் பேசிக்கலாம். எது பேசினாலும் நமக்கு நஷ்டமில்லை."

"லாபமா நஷ்டமாங்கறது முக்கியமில்லை. இங்க எல்லார்க்கும் சம உரிமை இருக்காங்கறதுதான் முக்கியம். எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க. நான் உங்களுக்குக் கடை ஏற்பாடு பண்றேன். வேற பேச வேணாம்."

அவர்கள் அதற்கு மேல் பேசாமல் மௌனமாகி விட்டார்கள்.

இடிக்கப்பட்ட தன் கட்டடத்தின் அருகே வந்தான்.

செங்கல் செங்கல்லாய் உதிர்ந்திருந்தன இரண்டு கடைகள்.



கண்களில் கண்ணீர் முட்டிற்று.

அப்பா வைத்து விட்டுப் போன சொத்து. அப்பாவோ, அம்மாவோ உயிரோடிருந்து, இதைப் பார்த்திருந்தால், இதற்கே உயிரை



விட்டிருப்பார்கள்.

ஜெயிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதையும் இடிக்கச் சொன்னான். இடித்த பிறகு தோல்வி. வேதனை குத்திற்று.

எப்படியாவது வெற்றி பெற வேண்டும். எப்படி?

இதில் ஜெயித்தால்தான், இனி வாழ்க்கையிலும் ஜெயம் என எண்ணினான்.

'எப்படி எதிர்கொள்வது?'

யோசிக்க யோசிக்கத்தான் விடை கிடைக்கும்.

வேதனையிலும் துக்கத்திலும் யோசிக்க முடியாது. மனம் குழு றாமல் அமைதி கொண்டிருந் தால்தான் அடுத்துச் செய்ய வேண் டியதைத் தீர்மானிக்க முடியும்.

மனதை அமைதியாக்கினான்.

யோசித்தான்.

யோசித்தான்.

தலை வெடிக்கும் போலிருந்தது. பிரச்சனைகளை இன்முகத்துடன் வரவேற்கப் பழக்கமானவன். இன்முக மாக இருக்க முடியவில்லை. அலு வலகத்தில் உட்கார்ந்து மின் விசிறி சுழல விட்டு யோசனையில் ஆழ்ந் தான்.

''கடவுளே....'' சற்று உரக்கவே சொன்னான்.

மறுபடியும் 'கடவுளே...!' என்றபடி சுவரில் மாட்டியிருந்த அந்தப் படத்தைப்

நாராயணி கண்ணகி

பார்த்தான். கோயில், சர்ச், மசூதி மூன்று மிருந்த படம். அதையே உற்றுப் பார்த்தான்.

கோயில், சர்ச், மசூதி.

சடக்கென்று ஊற்று தோன்றியிருப்பது போல் மனதில் உற்சாகம்.

மனமும், முகமும் மலர்ந்து கொண்டது.

எழுந்தான்.

டிரைவர் காரின் ஓரம் நின்றுகொண் டிருந்தான்.

"பெரிய மசூதிக்குக் காரை எடுப்பா."

கார் புறப்பட்டது.

அடுத்த பத்து நிமிடத்தில் பெரிய மசூதி முன் கார் நின்றது.

மசூதியின் நிர்வாகி வெளியிலேயே நின்றிருந்தார். சிவந்த முகம். அருவி விழுந் துக் கொண்டிருக்கிற மாதிரி காணப்பட்ட தாடி. வெண் தாடி. அகன்ற கண்கள். தலைப்பாகை. கிராமத்து விவசாயி போல் வேட்டி சட்டை. கண்களிலும் உதடுகளிலும் புன்னகை காட்டினார். கன்னம் கருங்கிற்று. பழுத்த பழம்.

"வாங்க தம்பி. வாங்க" என்றார்.

"பாயப்பா உங்கிட்டப் பேசணும்."

"பேசலாம். வீட்டம்மா சௌக்கியமா? என் பேரப் பசங்க சௌக்கியமா?"

"உங்க ஆசீர்வாதத்தில எந்தக் குறையு மில்லை. நல்லா இருக்காங்க பாயப்பா."

அப்பாவின் நண்பர். குழந்தையிலிருந்தே 'பாயப்பா, பாயப்பா' என்று அழைத்திருக் கிறான். நேரம் கிடைக்கும்போதெல்லாம் அப்பாவிடம்தான் வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார். இரண்டு பேருமே ஆன்மீகம்தான் பேசுவார்கள். அப்பா பாரதியின் ஓம் சக்தியைக் கண்களை மூடிக் கொண்டு உருகி வழிந்து பாடுவார். பாயப் பாவும் அப்பா பாடி முடிக்கும்வரை கண் களை இறுக மூடிக் கொள்வார்.

"கடவுள் இசையில் இருக்காரண்ணே... குரல்ல இருக்கார். காத்துல இருக்கார்..." என் பார் பாயப்பா.

இருவருக்கும் உரையாடல் நீளும்.

"கடவுள் எல்லாத்துலயும் இருக்கார். மண் ணுல, ஆகாயத்துல, தண்ணில, நெருப்புல... எல்லாத்துலயும்... ஒரு முஸ்லீமோட நிலத்துல விதை போட்டா முளைக்கிற மாதிரி, இந்து வோட நிலத்துலயும் முளைக்கும். அவங்க வங்க கலாச்சாரம்தான் வேற... கடவுள்கிட்ட எல்லா மக்களும் வேண்டிக்கிற விஷயம் ஒண்ணுதானே..."

"சரியா சொன்னீங்கண்ணே..."

"நாம பெத்த புள்ளைங்களையே அம்மா

பிள்ளை யார், அப்பா பிள்ளை யார்னு பிரிக்கிறவங்க... சாமிய பிரிச்சிப் பார்க்காமயா இருப்பாங்க... பிள்ளைங்க பெரிசாச்சுங்கன்னா பெத்தவங்களைப் பிரிச்சிடுதுங்க... தாய்க்குத் தலைப்பிள்ளை. தகப்பனுக்குக் கடைப் பிள்ளைன்னு கொள்ளி வைக்கிறதுக்கு மட்டுமில்லை. கஞ்சி ஊத்தவும்தான்.''

''சரியா சொன்னீங்கண்ணே...''

அப்பா மென்மையாய்ச் சிரிப்பார்.

''ஓம் சக்தியை அப்படியே அல்லாவா மாத்தி எதனா மெட்டுக் கட்டிப் பாடுங்களேன்.''

''என்னால பாட மட்டும்தான் முடியும் பாய். நானென்ன புலவனா?''

பாயப்பாவைப் பார்க்கும்போது சங்கரனுக்கு அப்பாவோடு அவர் சம்பாஷனை செய்தது ஞாபகத்திற்கு வந்து மனதை பிசுக்கிற்று. கண்களில் கசிந்துவிட்டது.

''பாயப்பா....''

''சொல்லு சங்கரா...''

''கடவுள் எனக்குத் துணை இருப்பாருன்னு நான் சில காரியங்கள்ல இறங்கிட்டேன் பாயப்பா...''

''கடவுள் எப்பவும் துணை இருப்பார். கலங்காதே...''

''எனக்கு உங்க உதவி வேணும் பாயப்பா.''

''கிடைக்கும். எனக்கு அல்லா அந்தப் பலம் தருவார்.''

''பாயப்பா, படிச்சிட்டு வேலையில்லாம இருக்கிற இளைஞர்களை பிராந்திக்கடை ஏலத்துல எடுக்கச் சொன்னேன். வழக்கமா குறிப்பிட்ட சில பேர்தான் ஏலம் கேட்பாங்க. ரொம்பக் குறைச்சலா, கவர்மெண்ட்டுக்கு கட்டி வராத மாதிரி கேட்பாங்க... இப்போ பத்து மடங்கு அதிகமான லாபத்துல எடுத்திருக்கோம். ஆனா, கடைங்க கிடைக்கலை பாயப்பா... யாரும் கடைகளை வாடகைக்கு விடக் கூடாதுன்னு கண்டிஷன் போட்டிருக்காங்க... இப்போ இருக்கிற நிலையில் நீங்கதான் உதவி பண்ணணும். நம்ம சமூகத்தைச் சேர்ந்தவங்க வீடுகள், கடைகள் அங்கங்கே இருக்கு. அவங்ககிட்ட நீங்க பேசினா எங்களுக்குக் கடைகள் வாடகைக்குக் கிடைக்கும். வெறும் வாடகை மட்டும் தராம அவங்களையும் ஒரு பார்ட்னரா சேர்த்துப்போம்.''

''அல்லா!''

''பாயப்பா!'' நெஞ்சம் கலங்க நின்றான்.

''வருத்தப்படாதே... நான் ஜமாத்துல பேசறேன். ஆண்டவன் நல்லதுதான் செய்வார். நல்லது நடக்கும். பிராந்தி ஜனங்களுக்குப் பாவம் இல்லையா சங்கரா...?''

''பாவம்தான் பாயப்பா... ஆனா அரசாங்கம் செய்யுதே... அரசாங்கத்தது பாயப்பா. அரசாங்கத்துக்கு வருமானம்.''

''என்னவோ... ஜமாத்துல பேசறேன். நம்பிக்கை இருக்கு.''

பாயப்பாவை வணங்கி விடை பெற்று வந்தான்.

இருள் குவிந்துகொண்டது. நிலவற்ற வானம் பெரிய பேய். மேகங்கள் சூழ்ந்து நட்சத்திரங்களையும் மூடிற்று.

வீட்டிற்கு வந்தான்.

குழந்தைகள் ஓடி வந்து, கட்டிக்கொண்டன. குழந்தைகளைக் கொஞ்சுகிற சந்தோஷம்கூட இல்லாமல் போய்விட்டது. நேரத்திற்கு வீட்டிற்கு வர முடியவில்லை. நேரத்திற்குச் சாப்பிட முடியவில்லை.

இரண்டு குழந்தைகளையும் இரண்டு பக்கம் தூக்கிக்கொண்டான்.

மனக் குழப்பத்தில் குழந்தைகளுக்கு ஏதேனும் வாங்கி வருவதற்கும் மறந்து போயிருந்தான்.

மனைவி கௌசல்யா சங்கரனைப் பார்த்ததும் மகிழ்வோடு வந்தாள்.

''காப்பி சாப்பிடறீங்களா?''

''ம்.''

குழந்தைகளை மடியில் உட்கார வைத்துக்கொண்டு சோபாவில் உட்கார்ந்தான்.

பத்தே நிமிடத்தில் காப்பியுடன் வந்தாள் கௌசல்யா.

சங்கரனிடம் காப்பியைக் கொடுத்துவிட்டு அவளும் சோபாவில் உட்கார்ந்தாள்.

''என்னங்க ஆச்சி?''

''இதுவரைக்கும் ஒண்ணும் ஆகலை. புரியலை. பாயப்பாகிட்டத்தான் கடைசியா உதவி கேட்டேன். முஸ்லீம்ங்க உதவி பண்ணாங்கன்னா ஜெயிக்க முடியும். கடையா

''தேர்தல்லே ஜெயிச்சுட்டீங்க. அடுத்து உங்க லட்சியம்?''

''பொது மக்கள் எனக்குப் போட்ட ஒவ்வொரு ஓட்டையும் ஒரு லட்சமா மாத்திக் காட்டப் போறேன்!''

– கு. அருணாசலம்



ஏ.ஆர். ரஹ்மான் பற்றி லதா மங்கேஷ்கர்

"தலைமுறை இடைவெளி என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏ.ஆர். ரஹ்மானின் திறமை என்னை வியக்க வைக்கிறது. வழக்கமாக, பகலில் மியூசிக் கம்போஸ் பண்ணிவிட்டு, பாடல் பதிவை இரவில் வைத்துக் கொள்ளுவாராம் ரஹ்மான்.



எனக்கோ, பகலில் மட்டுமே பாடுவது – இரவில் பாடல் பதிவு வைத்துக் கொள்ளுவதில்லை என்ற பாலிசி. எனக்காக ரஹ்மான், பகலில் பாடல் பதிவை வைத்துக் கொண்டார். இன்றும், ஓர் இசையமைப்பாளர் முன்னால் நான் நிற்கிறபோது, ஆசிரியரின் முன் நிற்கிற மாணவர் போலத்தான் உணருகிறேன்!"

தகவல்: சிம்.எம்; படம்: யோகா

இல்லேன்னாலும் வீடா கொடுத்தாலும் இடிச்சிக் கடைக் கட்டிக்கலாம்."

"எதுக்குங்க இவ்ளோ சிரமம், விட்டுடுங்களேன்."

"விட முடியலை கௌசல்யா, விட மாட்டேன். அவங்களைப் பழி வாங்க இதுதான் சந்தர்ப்பம்."

"எதுக்குங்க பழி வாங்கணும்?"

"எங்களுக்குச் சேர வேண்டிய சொத்தை எங்களுக்குச் சேர விடாம பண்ணாங்க கௌசல்யா. அம்மாவும் நானும் எவ்ளோ சித்ரவதைப்பட்டோம் தெரியுமா?"

"மறந்துடுங்க. பழசை மறந்துடுங்க. கடவுள் இருக்கார்."

"என்னால மறக்க முடியாது. காயம் படப்பட வைராக்கியம் அதிகமாகுது."

கௌசல்யா மேற்கொண்டு பேசவில்லை.

சங்கரனுக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. எப்போது விடியும் எப்போது விடியும் என்று தவித்திருந்தான்.

மறுநாள் மாலை பாயப்பாவைச் சந்தித்தான்.

வெற்றி.

பாயப்பா ஜமாத்தில் பேசி வெற்றி கண்டிருந்தார்.

"உனக்கு எல்லா உதவிகளும் கிடைக்கும் சங்கரா... வேறு யாருக்காவது ஏற்கெனவே வாடகைக்கு விட்டிருந்தாலும் அவங்களை மாத்தி விடச் சொல்லி இருக்கேன்."

அவர் சொல்லக் கேட்க, ஆனந்தமாய் இருந்தது.

அப்படியே கால்களில் விழுந்து நமஸ்கரித்தான்.

பெரிய பஜாரில் முதல் கடை உதயமாயிற்று.

பட்டாசு வெடித்துக் கொண்டாடித் திறந்தார்கள்.

மண்டித்தெரு இரத்த வெறி பிடித்த நாக்கை நீட்டத் தொடங்கிற்று. அடுத்த பட்டாசை அவர்கள் வெடித்தார்கள்.

லாட்டரி டிக்கெட் விற்ற ஒரு முஸ்லீமை ரௌடிகளை வைத்து வெட்டிச் சாய்த்தார்கள்.

மதக் கலவரம் என்கிற முத்திரை விழுந்தது.

அடுத்த வெடி பாயப்பா.

ஜமாத் கூடிற்று.

பதில் வெடிக்குத் தயாராயிற்று.

சங்கரன் கலங்கினான்.

அப்பாவின் மரணத்தைவிட பெரிதாய்க் கலங்கினான்.

நகரம் கொந்தளித்தது. ஊரடங்குச் சட்டம்.

"நாங்க இருக்கிறோம் அய்யா. கலங்காதீங்க..." முஸ்லீம் இளைஞர்கள் எதற்கும் தயாராய் நின்றார்கள்.

கண்ணீர் முட்ட அவர்களைப் பார்த்தான். மனம் அறுந்தது. இதயம் படபடத்தது.

குருத்துகள்.

"வேணாம்பா. இப்போ நான் தோத்துப் போறதுதான் மனுஷத் தன்மை. இப்போ நான் தோக்கறதுதான் நிஜமான வெற்றி. வேணாம்பா. யுத்தம் வேணாம்பா."

மண்டித்தெருவிற்குப் போனான் சங்கரன்.

வெல்ல மண்டி முன் நின்றான்.

"சுந்தரலிங்கம்" கத்தினான்.

இலேசாய் தூறல் போட்டுக் கொண்டிருந்தது.

"எடுத்துக்கோ... எல்லா பிராத்திக்கடையும் எடுத்துக்கோ... மதவெறியைத் தூண்டாத... வேணாம். உன் ஆளுங்களை அமைதியாகச் சொல்லு" கத்தினான்.

பைத்தியம் போல் கத்தினான்.

(முற்றும்)

- **ராஜகம்பீர புத்தரைத் தெரியுமா?**
  – அவர் அரச வாழ்வையே துறந்தவராச்சே!

- **காசிக்குப் போனால் கழுதையாகப் பிறக்கலாம்!**
  – இதென்ன கலாட்டா?!

- **ஒன்றரைக் கண்ணனை வணங்குகிறீர்களா!**
  – அது யாரப்பா புது சாமி?!

- **நாயக்கர் ஓவியத்தில் 'நம்மாளு' கைவண்ணம்!**
  செமை கூத்துதான்!

- **துரோணர் குகையும் பெப்ஸி–கோக் கொடியும்.**
  – என்னய்யா சம்பந்தம்!?



• படம்: யோகா

விடைகள்,

கல்கி தீபாவளி மலரில்!

✸ ஆன்மிக அன்பர்களுக்கு ✸ இலக்கிய நேயர்களுக்கு ✸ கலாரசிகர்களுக்கு

ஒரு மெகா விருந்து!

தனிப்பிரதி ரூ. 60. பதிவுத் தபாலில் பெற ரூ. 100 அனுப்பவும்.

ஹீரோக்களுக்கு வயசானால் அப்பா ரோல் என்பது அந்தக் காலம். வயசாகும் வரை காத்திராமல், வயசாகிக் கொண்டிருக்கும்போதே டைரக்டராகி விடுவது இந்தக் காலம். அப்படி 'இளம் டைரக்டராக' தமது கன்னி முயற்சியைத் துவங்கியிருப்பவர் தர்மேந்திராவின் மகன் ஸன்னி தியோல். 'தில்'லுடன் இவர் இயக்கியிருக்கும் படத்துக்குப் பெயர் 'தில்லகி'. தைரியமாக, சூரஜ்பாரஜத்யாவின் படத்துடன் போட்டி போட, தீபாவளியன்று தில்லகியைக் களத்தில் இறக்க இருப்பவர், தமது டைரக்ஷன் அனுபவங்களை இங்கே பகிர்ந்து கொள்கிறார்.



கேள்வி: கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக டைரக்டர் ரோலை செய்து கொண்டிருக்கிறீர்களே? நடிப்பெல்லாம் என்னாவது?

பதில்: ஒரு வேலையை எடுத்தால், அதை முடிக்கும்வரை எனக்குத் தூக்கமே வராது; அதுவும் டைரக்ஷன் பொறுப்பு என்பது பெரிய தலைவலி! அனாவசியமாக சொதப்பி விடக் கூடாதென்று ஆகஸ்டிலிருந்தே நடிப்பை எல்லாம் மூட்டை கட்டி விட்டேன். ப்ரொட்யூசர்களும் அன்புடன் ஒத்துழைத்தனர். நவம்பர் மத்தியில்தான் நடிப்பைப் பற்றி மீண்டும் சிந்திக்க வேண்டும்.

கே: டைரக்டராயிருப்பது, நடிகராயிருப்பதை விடக் கடினமா?

ப: நிச்சயமாக; நடிகன் என்பவன் ஒரு சுதந்தரப் பறவை; யூனிட்டில் அவன் ராஜா மாதிரி; நிலைமை ஒத்து வரவில்லை என்றால் ஷூட்டிங்கை கான்சல்கூடப் பண்ணி விடலாம். ஆனால் டைரக்டருக்கு, இயக்கும் வேலை தவிர, ஒவ்வொரு இலாகாவையும் வேலை வாங்கி இணைக்கிற பொறுப்பு இருக்கிறது. இங்கே 'ப்ரொஃபஷனலிசம்' குறைவென்பதால், ஒரு காட்சியை அமைப்பதிலிருந்து, ப்ரொடக்ஷன் தொல்லைகள் வரை எல்லா பொறுப்புகளையும் டைரக்டர் சுமக்க வேண்டியுள்ளது. எப்படியோ, ஆண்டவன் புண்ணியத்தில் எடுத்து முடித்து விட்டேன். மறுபடியும் அதைப் பற்றி நினைத்துப் பார்க்கவே பயங்கரமாயிருக்கிறது.

கே: அப்படியானால் தில்லகிதான் முதலும் முடிவுமாக நீங்கள் இயக்கும் படமா?

ப: அதெப்படி? கஷ்டங்களைக் கண்டு துவண்டு விடுபவன் நானல்ல; என் அப்பாவை வைத்து, அடுத்த படத்தை இயக்க வேண்டும் என்று ஆசை; ஆனால் அடுத்த படம் இப்போதல்ல; நடிப்பு வேலைகளை எல்லாம் முதலில் முடித்தாக வேண்டும்.

கே: நீங்கள் ஆக்ஷன் ஹீரோவாகப் பிரபலமானவர். ஆக்ஷன் படம் எடுக்காமல், முக்கோணக் காதலுக்கே முக்கியத்துவம் அளித்துள்ளீர்களே?

ப: எனக்கு வெற்றி கிடைத்தது ஆக்ஷன் படங்களில் என்றாலும், நிறைய வித்தியாசமான ரோல்களையும் செய்திருக்கிறேன். தில்லகி வெறும் காதல்

"என் அப்பாவை வைத்து அடுத்த படம்..."

படமல்ல; அது அன்பின் முதிர்ச்சியை விளக்கும் படம்; சகோதரர்களுக்கிடையே, காதலர்களுக்கிடையே, பெற்றோர் – குழந்தைகளுக்கிடையேயான பாசப் பிணைப்பை அலசும் படம்.

கே: தில்லகி, நீங்கள் தயாரித்துக் கொண்டிருந்த 'London' படத்தின் இந்திப் பதிப்பென்கிறார்களே...'

ப: இல்லவே இல்லை; அது லண்டனை நிலைக்களனாகக் கொண்டது; இது கிராமத்திலிருந்து நிறைய கனவுகளுடன் நகரத்திற்கு வரும் ஒரு பஞ்சாபிக் குடும்பத்தின் கதை; அவர்கள் கனவு நனவாகவில்லை என்றாலும், நகர வாழ்க்கை தொடர்கிறது.

கே: லண்டன் அனுபவத்தால் மனம் தளரவில்லையா?

ப: லண்டன் ஒரு கசப்பான அனுபவம்தான்; இதுவும், 'இந்தியன்' 'பஜ்ரங்' என்ற இரண்டு படங்களும் ஏராளமான பணத்தை விழுங்கி விட்டன. ஆனால் தோல்விகளை நினைத்துக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. என்றாவது ஒருநாள், 'லண்டன்' மறுபிறவி எடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

கே: தில்லகியில் நிறைய இசையமைப்பாளர்களை உபயோகித்திருப்பது ஒரு புதுமைக்காகவா?

ப: இல்லை; பெரும்பகுதி இசை, ஜதில் – லலித்துடையதுதான்; மற்றவர்கள் உழைப்பும் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது.

கே: உங்கள் நாட்டியத் திறமை பற்றி எல்லோரும் அருமையாக விமர்சிக்கிறார்களே... தில்லகியில் ஏதேனும் முன்னேற்றமிருக்கிறதா?

ப: நானென்ன செய்வது? எனக்கு இயற்கையிலேயே டான்ஸ் ஆடவெல்லாம் வர மாட்டேனென்கிறது. நான் பார்ட்டிகளில் ஆடுபவனுமில்லை. டான்ஸ் ஆடுவதென்றால் இன்றளவும் வெட்கம் பிடுங்கித் தின்கிறது.

கே: டைரக்ஷன் என்பது, காதல் வயப்படுவது போன்ற அனுபவம் என்றிருக்கிறீர்களே... முதல் காதலா?

ப: ஆம்! தில்லகி என் முதல் குழந்தை, அந்தக் குழந்தை ரொம்ப நன்றாயிருக்கிறதென்று எல்லோரும் சொல்ல வேண்டுமென்று ஒரு தாயின் தவிப்புடன் காத்திருக்கிறேன்.

கே: குழந்தையை அதன் தாத்தா பார்த்து விட்டாரா?

ப: (சிரித்து) ஓ! முதலில், இளம் தந்தையின் வெட்கத்துடன் அவரிடம் காட்டவேயில்லை; நான் ஸ்விட்ஜர்லாந்தில் ஷூட் பண்ணிக் கொண்டிருந்தபோது, அவர் அதைப் பார்த்து விட்டார். ரொம்பப் பிடித்திருக்கிறதென்றார். முதலில் கேலி செய்கிறார் என நினைத்தேன்; உண்மையாகச் சொல்கிறார் என்பது தெரிந்ததும் அழுதே விட்டேன். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டமா என ஆனந்தக் கண்ணீர் விட்டேன்.

பேட்டி : **ஜே.ஆர்.**

அடுத்த இதழ், தீபாவளி சிறப்பிதழ் - II

இரண்டு புத்தகங்கள்!


முதல் மழைத்துளி

பிரபஞ்சன் எழுதும்

— உருக்கமான

தொடர்கதை ஆரம்பம்





தெய்வ தரிசனம்

— ஒவ்வொரு வாரமும்

ஒவ்வொரு ஆலயத்துக்கு

அழைத்துச் செல்கிறார் **ஆனந்தி**

ஆஹா, ஆயுர்வேதம்!

— உபயோகமான தனிப் புத்தகமாக!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1900/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 950/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57
* Registered No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161
* Registered as a Newspaper in Srilanka

